95495

# கோ ஸம்ரக்ஷணை சாஸ்திரம்

1927

K2 331
N27
95495

80



OFFICE OF THE REGISTRAR
5-JAN 1928
MADRAS

ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் துணை
ஸ்ரீகோமாதா துணை

# கோ ஸம்ரக்ஷணை

## சாஸ்திரம்

இஃது

தஞ்சை ஜில்லா

புலவர் R. கோபாலய்யரால்

இயற்றப்பட்டு

திருச்சிராப்பள்ளி

ஸ்ரீ ... அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1927

[Copyright Registered] [Price: 1 Re.]

ஸ்ரீராமஜயம்.

புலிவலம் பிரம்மஸ்ரீ R. கோபாலய்யர் அவர்கள் தமது புராதனமான சாஸ்திரங்களை நன்கு ஆராய்ச்சி செய்து [illegible] மனையடி சாஸ்திரம், ஜலாசய விசாரணை, [illegible] சாஸ்திரம் விருக்ஷாதி ஸம்ரக்ஷணா சாஸ்திரம் முதலிய விஷயங்களை தமிழில் எல்லோரும் அறிந்துகொள்ளும்படி வெளியிட்டிருப்பது சகலரும் தெரிந்த விஷயமே. இப்பொழுது [illegible] கோஸம்ரக்ஷணை என்னும் ஒரு புஸ்தகம் எழுதியுள்ளார். அதில் கோக்களின் பெருமை, லக்ஷணம், காமதேனுவின் விஷயம், [illegible] [illegible] பல்வகைகளும், [illegible] [illegible] [illegible] [illegible] தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகமானது [illegible] [illegible] [illegible] ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டியது அவசியமானது.

T. V. இராமசந்திரய்யர்,

[illegible]

I read through M. R. Ry. Pulivalam Gopala Ayyar's publications with considerable pleasure and profit. They form a very useful compilation of odds and ends relating to Gorakshanam, Architecture, Water Finding and Horticulture subjects, a knowledge of which is in varying degrees, almost indispensable to every householder. They have been taken from ancient and authoritative works too numerous to mention and are put into easy Tamil so that anybody could read with profit. The labour and thought bestowed on the publications is bound to revive adequate recognition at the hands of the enlightened public. The set may find a place in the library of every educational institution in Tamil districts.

(Signed) M. R. SESHAIYAR,
Dy. Inspector of Schools,

*7th September 1926.* *Trichinopoly*

180.

2

ஓம் தத்ஸத்
ஸ்ரீ வேங்கடேசாயமங்களம்
கோமாத்ரே நம:

# கோ ஸம்ரக்ஷணை
## சாஸ்திரம்

180

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS
5-JAN-28

இஃது
தஞ்சை ஜில்லா
புலிவலம் R. கோபாலய்யரால்
இயற்றப்பட்டு

திருச்சிறாப்பள்ளி
ஜெகம் அன் கோ., டாட்ஸன் அச்சாபீசில்
பதிப்பிக்கப்பட்டது.

1927

[...ed] [Price: Re. 1.

KZ331
N27
85495

K2:311 N27
21816
636.2

செப்பனிடுபவர் பெயர்
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் 10/96
செப்பனிட்டு முடிந்த நாள் 11/96
சரிபார்த்தும் ஆராய்ச்சி
மு. பா. உதவியாளர்
கையொப்பம் கையொப்பம்



## விஷய அட்டவணை.

**1 வது அத்தியாயம்** — பக்கம்.

| | |
|---|---|
| முகவுரை | i |
| அபிப்பிராயங்கள் | vi |
| Foreword | xx |
| பசுக்கள் உண்டான விதமும் அவற்றின் பெருமைகளும் | 1 |
| சண்டிகேசுவர நாயனார் சரித்திரம் | 7 |
| திருசெங்கோடு புராணம்: குணசீலனுக்கும் பயங்கரனுக்கும் நடந்த சம்பாஷணை | 13 |
| மாடுகளின் பிரிவுகள் | 17 |
| மாடுகள் வாங்க வேண்டிய நாட்கள் | 20 |
| மாடுகளின் உபயோகம் | 21 |

**2-வது அத்தியாயம்.**

| | |
|---|---|
| பசு, எருதுகளை பூஜிப்பதனால் உண்டாகும் பலன் | 25 |
| கோதானத்தின் பலன் | 22 |
| திலீப மகாராஜாவின் சரித்திரம் | 37 |

**3-வது அத்தியாயம்.**

| | |
|---|---|
| மாடுகளைக் காப்பாற்ற வேண்டிய விதம் | 41 |
| மாட்டுக்கொட்டில் கட்டவேண்டிய அளவு | 43 |
| மாட்டுக்கொட்டில் இருக்கவேண்டிய இடம் | 44 |
| கோ பூஜை செய்யப்படும் இடங்களும், பூஜித்து முக்தி அடைந்தவர்கள் விபரமும் | 44 |
| மாடுகள் சினைப்பட்டிருப்பதன் குறியும், அவைகளைக் காப்பாற்ற வேண்டிய விதமும் | 47 |
| மாடுகள் விஷயத்தில் முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயங்கள் | 54 |

**4-வது அத்தியாயம்.**

| | |
|---|---|
| மாடுகளின் இலக்ஷணம் | 59 |
| மாட்டின் நிறமும் அதன் குணமும் | 69 |

பசு, எருமைகளின் நிறங்களும், அவைகளின் பால் முதலியவைகளின் குணங்களும், உபயோகமும் 69
பசு, ஆடு, மனிதர், இம்மூன்று பாலுக்குள்ள பேதங்கள் 72
பசு, எருமை இவற்றின் பால், தயிர், வெண்ணெய், நெய், இவற்றின் பேதங்களும், அவற்றிற்குள்ள குணங்களும் 72
சாணி, மூத்திரம், கொம்பு, குளம்பு, எலும்பு, தோல், மாமிசம், கொழுப்பு இவற்றின் உபயோகம் 74
மடியின் இலக்ஷணம் 76
பசு சகுனம் 76
மாடுகளுக்கு சூடு போடுதல் 77
காய் பிடித்தல் 79
மூக்கு குத்தல் 80
சுழிகளும், அவற்றின் குணமும், இருக்குமிடங்களும் 80

5-வது அத்தியாயம்.

ஆயுர்வேத வைத்தியம் 85

1. சகல நோய்களுக்கும் மருந்து
2. சகல வியாதிக்கும் நியமம்
3. ஆனைச்சிரங்கு
4. சுழல் நோய்
5. தலை நோய்
6. பொருமல் நோய்
7. நீர்க்குன்னல்
8. வரக்குன்னல்
9. இரத்தக்குன்னல்
10. திமிலை நோய்
11. எலும்புருக்கி
12. உதிர வெக்கை
13. குடல் வறட்சம்
14. சுழி வெக்கை
15. அழல் வெக்கை
16. உடுக்கை நோய்
17. கோரோசனை கொண்டது
18. குதிரை வலி
19. குடல் வெக்கை
20. சந்தடைப்பன்
21. பசி பிணி
22. மென்னி அடைப்பன்
23. விலாக்குன்னல்
24. மலம் நீங்க
25. கன்று போட வருத்தப் படுகிறதற்கு
26. மயிர்த்த கன்று வெளிப்பட
27. கர்ப்பம் அடிபட்ட மாட்டுக்கு
28. கருக்கு போடாவிட்டால்
29. கருக்கு விழாமல் நின்றதற்கு
30. கன்றை விரும்பாததற்கு




31. பால் இல்லாததற்கு
32. ஆமணக்கு பூ, கொட்டை தின்றால்
33. சோளப்பயிர் தின்றால்
34. பாம்பு கடித்தால்
35. விஷம் வைக்கப்பட்டால்
36. விஷங்களுக்கு பொதுமருந்து
37. கழுத்தில் வலியுண்டானால்
38. வாய்க்கோமாரி
39. மாடு கட்டியிடத்தில் வியாதி யுண்டாகாமல் தடுக்க
40. அதிகமாக கழிகிற மாட்டுக்கு
41. விரியன் கடி
42. குளவிக்கொட்டு
43. புடையன்குத்து
44. சாரையடி
45. கண்ணில் பூ விழுந்தால்
46. அஜீரண நோய்
47. வயிர் உப்பிசத்திற்கு
48. கர்ப்பப்பை வெளிப்பட்டால்
49. கொம்பு நுடிக்தால்
50. புண் புழுக்களுக்கு
51. வாடம் அடித்தல்
52. கொழு குத்தினால்
53. உண்ணி பிடித்தால்
54. நாவரணை
55. பூசணிக்காய் மசாலை
56. வலிப்பு அடைப்பானுக்கு
57. கழலை நோய்
58. சீத வெக்கை
59. தலைப்புற்றுக்கு
60. குடல் வியாதிக்கு
61. காணை நோய்க்கு
62. செவிக்கண் நோய்க்கு
63. பெரும் வலி
64. நொக்கு மாட்டுக்கு
65. கோமாரி
66. வெக்கைக்கு நியமம்
67. சிறுமணுக்கு
68. கால் ஒடிந்தால்
69. வயிர் பொருமலுக்கு
70. மேயாமல் இருப்பதற்கு
71. சொறி கொண்டதற்கு
72. முட்டாமலிருக்க
73. தெரியனுக்கு
74. கெட்ட மயிர் உதிர
75. மயிர் உதிர்ந்துபோனால்
76. வயிற்றிலுள்ள பூச்சிகள் விழ
77. கால்கோமாரிகொண்டதற்கு
78. முலைக்காம்பு வெடித்தால்
79. கன்றுகளின் நாக்குபூச்சிவிழ
80. கன்றுகள் கழிந்தால்
81. தொட்டித்தண்ணீர் குடிக்காமல் இருந்தால்
82. காய்பிடித்த மாட்டுக்கு


6-வது அத்தியாயம்.

இங்கிலீஷ் வைத்தியம் 131

உ

ஸ்ரீ சந்திரமௌளீச்வராயநம:

கும்பகோணம் வாஸிகளான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம் ஸமஸ்தானம் புளியலம் பிரம்மஸ்ரீ R. கோபால அய்யர் அவர்கள் லோக க்ஷேமத்திற்கு முக்கியகாரணம் கோ ஸம்ரக்ஷணம் என்பதாக ஸர்வஸ்ருதியமான ஸூக்ஷ்ம தர்மத்தைத் தெரிந்துகொண்டு கோக்களை ஸுக நிலைமையில் வைத்துக்கொள்வது, அவைகளின் லக்ஷணம், அவைகளுக்கு ஸம்பவிக்கக்கூடிய ரோகங்களின் லக்ஷணம், சிகித்ஸை, கோவின் ஆராதனைக்கிரமங்கள், அதனால் ஏற்படும் மோக்ஷ பர்யந்தமான ஸித்திகளை நிரூபிக்கும் இதிஹாஸங்கள் முதலான அனேக முக்கிய விஷயங்கள் அடங்கிய "கோ ஸம்ரக்ஷணம்" என்னும் கிரந்தத்தை சிரமத்தை ஆலோசியாமல் விசேஷப் பிரயத்தனத்துடன் விஷயங்களைச் சேகரித்து தேச பாஷையில் ஸர்வ ஜனங்களுக்கும் ஸுலபமாகத் தெரிந்து கொள்ளும்படி எழுதி பிரசாரம் செய்ய வேண்டிய நிலைமையில் தயாரித்திருக்கிறார்கள். லோகோபகாரமான இவருடைய இந்த உத்தம கைங்கர்யத்தைக்குறித்து ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் அத்யந்தம் ஸந்தோஷித்து இவருடைய இவ்வித ஸத் ப்ரவிருத்திகள் மேன்மேலும் அபிவிருத்தியுடன் ஸபலமாகும்படி பூர்ணாநுக்கிரஹம் செய்கிறார்கள்.

முகாம் திருவானைக்காவல், 18—4—1926. } (Sd.) E. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,
*For* மானேஜர்.



சர்க்கரை
ராமசாமிப் புலவர்,
தமிழ் பண்டிதர்
மீனாக்ஷி காலேஜ்.

உ
திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்,
23—1—27.

திருவார் கமலச்சேக்கை யெல்லாஞ் செய்
காலன்ன மடை கிடக்கும்
தெண்ணீர்த் தடஞ்சூழ் புளியலத்திற்
சிறந்த மறையோர் குலதிலகன்
மருவார் விருஷாதிகளை நன்றாய் வளர்க்கு
முறை சொல் சாத்திரமும்
மலிநீர்க் கடபத்தட மாதிவுருக்கும் வரலா
றமை யாவும்
தெருவார் மனையிலக்கணங்கள் தெரிக்கும்
ஸிதா சாஸ்திரமும்
செப்பமாக மொழி பெயர்த்துச் செகத்
தோர்களித்தார் கீர்த்திபெற்றோன்
உருவார் " கோ ஸம்ரக்ஷண " மென்றுரைக்குநா
லுமொழி பெயர்த்தின்
றுதவினான் கோபால வள்ளற்குலகம்
கடப்பாடுடையதே.

Everybody will try to help Mr. Gopalier in bringing out to the public his publication Gosamrakshanam one amongst his works which will be useful to the people.

S. SUBRAMANIA IYER,
*Thadalancoil, Kunnam.*

*24—1—27.*

உ

சிவமயம்.

நாகை நீலலோசனி பத்திராதிபர்

## G. சதாசிவம் பிள்ளை அவர்கள்

கூறிய

### சிறப்புக்கவிகள்.

1. தேவினங்கள் யாவையுமே தேகமிசை வதிதலாற் ஜகத்தின் மேலே
ஆவினங்கள் தலைப்புரந்தல் அறங்களிலே மேலாய அறமதென்பார்
காவினுந்நும் புலிவலத்துக் கோபாலத்திருநாமக் கலைவாணன்
கோவினங்கள் தலைப்புரக்குமாறெலாம் [கொடை கொடுத்தான்
குணமிக் கோனே.

2. குன்றெடுத்துப் பசுக்காத்துக் கோபாலப்பெயர் [கொண்ட
கொண்டல் போலக்
கன்றடுத்த பசுக்காக்கு நெறியெலாங் கசிவினியோர்
காணும் வண்ணம்
நன்றெடுத்துக் கூறியே கோபாலநாமத்தை நாட்டிக்
கொண்டான்
மன்றமர்த்த பரனருளால் இன்னும் பன்னூல்
வயக்கிவாழி வாழி.

3. இருக்காதி மறையுணரும் கோபாலத்திருநாமன்
தோன்றலேயோ?
விருக்ஷாதி வளர்க்கும் நல்மேலான ஜலாசயத்தை
விளக்கும் நன்னூல்
திருக்காதி நீங்கிடவே செம்மையுற உலகினர்க்குச்
செய்து தந்தான்
செருக்காதி குலைவின்றித்தே யத்தாரய்ந்து
பயன் செழிக்க வாழி.

 6

உ

மகா-ள-ள-ஸ்ரீ புலிவலம் கோபாலய்யர் அவர்களால் பூர்த்தி செய்து எழுதப்பட்டிருக்கிற "கோஸம்ரக்ஷணம்" என்னும் நூலின் கையெழுத்துப் பிரதியை பார்வையிட்டதில் மேற்படி நூலானது எப்பொழுது அச்சிடப்பட்டு வெளியில் வந்து சகல ஜனங்களுக்கும் உதவியாகுமென்றுமிக ஆவலாக இருக்கின்றது. மேற் கண்ட நூலைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் அதை வாசித்து அனுபவித்தவர்களுக்கே அதன் உண்மை விளங்கும். அவசியம் தேவாலயங்கள், பசுமடங்கள், குடும்பங்கள், கிடைமாடுகள் வைத்திருப்பவர்கள் முதலிய இடங்களில் இருக்க வேண்டியதென்று நூலைப்பார்த்த மாத்திரத்திலேயே நன்கு விளங்கும். மேற்கண்ட நூலுடன் ஸபிதா நவரத்தினம் என்னும் மனையடி சாஸ்திரம், ஜலாசயபிரமாண லக்ஷணசாஸ்திரம், விருக்ஷாதி சம்ரக்ஷண சாஸ்திரம் என்னும் நூல்களும் மேற்படியாரால் அச்சிடப்பட்டிருக்கின்றது. இந்நூல்கள் ஒவ்வொரு குடும்பங்களிலும் இருக்கவேண்டியது அவசியமானதாகும்.

25—1—27. }
சீர்காழி. } (Sd.) அ. மு. பொ. சுப்பராய செட்டியார்,
மிராசுதார், நாகபட்டணம், சீர்காழி.

---

Perused the book Gosamrakshna of Mr. Gopalier. The book is very useful for laymen to properly treat the cattle diseases etc., which also contains numerous authorities quoted from sacred books showing the importance of cows and bulls in the daily life of Hindu public both religious and economic.

(Sd.) GANAPATHISUBRAMANIA IYER
*Mirasdar, Kaliyakudi.*

I have perused Mr. Gopalaier's latest work on "Gosamrakshanam" with great interest. He has already published valuable works on Indian Architecture and on Water Finding and on Horticulture and on Boriculture the recent Indian renaisance would be a mere delusion and a snare and a myth if it does not lead to a re-invigoration of such of Indian ancient sciences as are true and valuable and vital. More political alliances or economic betterment or even social harmony will not be of much use without the national edifice being broad based on Indian culture verified and nourished by modern western culture but never losing its individuality and vitality. It is absurd to suppose that our great civilisation grew into greatness without a proper system of treatment of diseases of human beings and animals. From the time of the Vedic Rishis the Indian love and veneration for the cows has been deep-seated in the Hindu-nature. The Hindus tenderness for all life and especially of the life of cattle has been one of the greatest racial qualities. But his love was not an uninformed and ignorant love. The story in the Nishada about 'Nala' a knowledge of Asva-vidya is well known. In the Tanjore Palace Library there are valuable works on *Asva vidya* and *Hastividya*. Even to-day our love of cattles a continuing factor in our national life but it is an ever lessening factor and is not now informed by knowledge. The recent cow conferences and cow protection movements patronised by Sir Jhon Woodroffe and others have not been a success



because of the above said cause. It is an effort in the direction of reingorating our culture and increasing our intellectual love of cattle that I welcome this book. The author treats of the uses of cattles in India, the auspicious and inauspicious marks of cattle aspects of bovine beauty, methods of bovine protection, the Ayurvedic treatment of veterinary diseases, cattle breading etc.

I wish the author every success in his works.

Negapatam, 2-8-1924.

(Sd). K. S. Ramasamy Sastri,
*Sub-Judge, Negapatam.*

---

Brahmasri R. Gopalier with his modest literary attainments, is doing unostentatiously more useful work than those who are engaged in the so called research work. He has already brought within the reach of the ordinary masses the science relating to house building, digging of wells and tanks and horticulture. He has now got ready for publication a compendium containing numerous extracts treating on cattle and their uses, breeding and protection, taken out from rare ancient works such as Brihat Samhita, Mahabarata, Srimad Bagavata, Ramayana, Sukranithi, Siva Mahapuranam, Kasikandam, Periyapuranam, Arthasastra, Gomuktheswara Satakam, Saivagamam, Sivadharmothiram, etc.

A cursory perusal of the manuscript must itself induce every lover of the country to encourage such enterprises by liberal contributions.

(Sd). T. KRISHNASWAMY IYER,
*Inspector of Registration Offices, Madras.*

Brahmasri P. R. Gopalier has already done good service to the mother land by publishing such valuable books on Indian Architecture, Horticulture and Water Finding; all of them are well spoken of by our country men. He now proposes to publish another important work in Tamil "Gosamrakshanam" for which he has the manuscript on hand. It is a treatise on cows and their uses, a book which is necessary to all the Hindus to whom cows are sacred objects of worship. I recommend him strongly for public support and sympathy and wish him success in his laudable enterprise.

(Sd) M. R. SETURATNAM, M. L. C.,
15-7-27 *President, District Board, Trichy.*

---

I have perused the small manuscript of 'Gosamrakshanam' presented by Mr. R. Gopalier of Pulivalam, who has spared no pains to publish books of like volumes containing very useful information for mirasdars and family men for their upkeep.

This manuscript book deals elaborately with Vetirinary patients, about their selection, protection against diseases and proper nursing while under our care according to our Aurvedic system

Being a Vetirinary myself, I should think this volume is a very valuable presentation for the public for the upkeep of their cattle in every day life.

Yours sincerely.
(Sd.) M. ADIMULAM,
*Veterinary Surgeon, Tiruvalur.*



I have perused with much pleasure your book "Gosamrakshanam". It is a rare publication containing very useful information to the large section of the ryots and agriculturists who have got much faith in Ayurvedic drugs.

I wish you every success in your attempt to make yourself useful to the common mass and I heartily commend this book for the generous support of all.

Yours sincerely,
(Sd) A. RAMACHANDRA AYYAR,
*24-2-26.* *Veterinary Assistant Surgeon, Tanjore.*

---

Mr. R. Gopala Ayyar of Pulivalam is prominent in the art of giving a plan for constructing houses etc. according to the ancient Hindu Science. He has brought out a treatise on the subject which is very useful. He has taken considerable pains and to get it up for the use of the public. It evidences the fact forcibly that our ancients had a science for architecture which was until now obscure.

He is engaging himself in bringing out another book on the science of the rearing cattle and their population. It gives out several medicines of curing cattle disease. I hope it will be highly appreciated by the public as it will save expensive treatment in some cases. I wish him all success

Lalgudy, } (Sd.) S. V. RAMALINGA AYYAR,
8—11—1927. } *Tahsildar.*

உ சிவமயம்.

இந்நூலில் உள்ள விஷயங்களைப் பிரமாணமாகக் காட்டக்கூடிய இதர நூல்களாவன :—

1. ருக்வேதம்
2. யஜுர்வேதம்
3. ஸ்ரீமஹாபாரதம்
4. ஸ்ரீமத்பாகவதம்
5. ஸ்ரீமத்ராமாயணம்
6. பிரகத்ஸம்ஹிதை
7. சுக்கிர நீதி
8. காமிகாகமம்
9. சுப்பிரபேதம்
10. காசிபம்
11. வாதுளாகமம்
12. மகுடாகமம்
13. சிவதருமோத்திரம்
14. பெரியபுராணம்
15. சாரதாதிலகம்
16. சகலாகம சங்கிரகம்
17. பிர்மாண்ட புராணம்
18. கருட புராணம்
19. விஷ்ணு புராணம்
20. ருத்ரசம்ஹிதை
21. வாயுசம்ஹிதை
22. சங்கரசம்ஹிதை
23. காசிகண்டம்
24. பிர்மோத்தரகாண்டம்
25. மனுஸ்மிருதி
26. போதாயன கர்பம்
27. பக்த விலாசம்
28. பதார்த்தகுணசிந்தாமணி
29. நாலாயிரப் பிரபந்தம்
30. சிவ மகாபுராணம்
31. வைத்திய தீக்ஷிதம்
32. ஹரிஹர தாரதம்மியம்
33. திருவாரூர் ஸ்தலபுராணம்
34. திருக்கோகர்ண மான்மியம்
35. காஞ்சி ஸ்தலபுராணம்
36. திருவான்மியூர் புராணம்
37. திருக்கழுக்குன்றம்
38. திருவாமாத்தூர்
39. திருமாத்தனை நல்லூர்
40. திரு ஆயப்பாடி
41. திருவேயலூர்
42. திருவானைக்கா புராணம்
43. திருத்தென் குடித்திட்டை
44. திரு ஆலூர்
45. திருவாடுதுறை
46. திருக்கொண்டீச்சரம்
47. திருச்சிக்கல்
48. திருவண்டாம்பாடி
49. திருக்கருவூர்
50. வெண்ணைமலை
51. திருச்செங்கோடு
52. திருப்போரூர் முதலிய ஸ்தல புராணங்களிலும்
53. கபில வாசகம்
54. அர்த்த சாஸ்திரம்
55. குமரேச சதகம்
56. சோமேச்சுர சதகம்
57. ஏரெழுபது
58. ஜோதிஷ சாஸ்திரங்கள் சார்ங்கதராகரம்
59. மாட்டு வைத்திய நூல்— (எட்டுப்பிரதி)
60. காலப்பிரகாசிகை
61. ஹேமாத்திரி— (எட்டுப்பிரதி)
62. தேவிமான்மியம்
63. திருவாலவாய் புராணம்
64. பக்த விலாசத்தில் கபீர்தாஸ் சரித்திரத்தில் மேற்கண்ட நூல்களில் பசு, எருது இவற்றைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதுடன் இன்னும் அநேக நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.



உ

ஓம் தத் ஸத்.

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீவெங்கடேசாயமங்களம்.

ஸ்ரீ திருநாகைவல்லி அம்பாள் துணை.

ஸ்ரீ வேணுகோபாலன் துணை.

## முகவுரை.

---

ஸர்வேசுவரரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற உலகத்திலுள்ள மனிதர்களுக்கு, சகல காரியங்களுக்கும் பசு, எருது, எருமை முதலியவைகள் முக்கியமானவை. என்பது சகலருக்கும் தெரிந்த விஷயமே. அவைகளைப்பற்றி இச்சிறு புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. நமது தாய் நாடாகிய இந்துதேசமானது அநேகம் கோடி மயில் விஸ்தீரணமுள்ளதாயும், பற்பல மதஸ்தர்களும், பற்பல வகுப்புகளுமுள்ள அநேகம் கோடி ஸ்திரீ புமான்களும், குழந்தைகளும் அடங்கியதும், அவரவர்கள் தங்கள் தங்கள் க்ஷேமமாயிருக்கிறதை கோரியும், நமது தாய் நாடாகிய இந்துதேசமானது முன்னேற்றமடையும் பொருட்டு பிரயத்தனம் செய்துகொண்டிருக்கும் ஸமஸ்த ஜனங்களுக்கும் ஆதாரமானவை உண்ணும் உணவுப் பொருள்களும், உடுக்கும் உடைகளுமேயாம். அவைகளுக்கு முக்கிய ஆதாரமானது விவசாயமே. அவ்விவசாயமானது மற்ற தேசங்களைப்போல யந்திரங்களாலும், குதிரை, கோவேறு கழுதை முதலியவற்றாலும் செய்யக்கூடியதல்ல. எருது, எருமை, கடா, முதலியவற்றைக்கொண்டே செய்யவேண்டுமென்பதை நான் எழுது

வது மிகை. உணவுக்கு வேண்டிய பால், தயிர், நெய்
முதலியவற்றையும் கொடுக்கும் பசு வர்க்கத்தைக் காப்
பாற்றி விருத்தியடையவேண்டியது அவசியமானது. பசு
வர்க்கங்களுக்கு விருத்திக்குறைவு ஏற்பட்டால் இந்தியா
வுக்கும் க்ஷேமக்குறைவு ஏற்படும். ஆகையால் அவ்வித
குறைவு ஏற்படாமல் பசுவர்க்கத்தைக் காப்பாற்றிவர அடி
யிற்கண்ட விஷயங்களை முக்கியமாய் கவனிக்கவேண்டும்.

2. ஸகல மதஸ்தர்களுக்கும் பொதுவானதும்,
பெரும்பயனைக்கொடுக்கக்கூடியதுமான பசு வர்க்கத்தைக்
காப்பாற்றவேண்டிய விஷயத்தில் ஜாதிபேதம் மதபேதங்
களைக் காட்டாமல் எல்லோரும் ஒற்றுமையாய் இருந்து,
ஒவ்வொரு கிராமங்களிலும் பசுவர்க்கங்கள் விருத்தியாக
வேண்டியவிஷயங்களை அவசியம் கவனிக்கவேண்டும். ஒவ்
வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு பசுவாவது வளர்த்து
வரவேண்டும். தனக்குச் சமீபத்தில் உள்ள ஒவ்வொரு
குடும்பங்களிலும் அதேவிதம் நடந்துகொள்ளும்படியும்
அதனால் உண்டாகும் சௌகர்யங்களையும் எடுத்துகாட்டி
போதித்துவரவேண்டும்.

3. ஒவ்வொரு கிராமங்களிலும் கோ ஸம்ரக்ஷண
சாலை ஏற்படுத்தி அவைகளைக் காப்பாற்றிவரும்பொருட்டு,
அதன் உபயோகம், அதனால் ஏற்படும் லாபங்களையும், அத
னால் மோக்ஷபரியந்தமான சாதகங்களையும் சகலரும்
தெரிந்துகொள்ளும்பொருட்டு உபன்னியாசங்கள் செய்
தும், துண்டுப் பத்திரிகை மூலமாயும் பிரசித்தம் செய்வ
துடன், நமது தேசத்தில் நடத்திவரப்படும் பத்திரிகை
மூலமாயும் தெரிந்துகொள்ளும்படி ஏற்பாடு செய்துவர
வேண்டும்.

4. நமது இந்த தேசத்திற்கு முக்கிய ஆதாரமாகிய
கோமாதாவைக் காப்பாற்றி பூஜித்து வருவார்களாகில்,



தேசம் சுபிக்ஷமாக இருக்குமென்பது நிச்சயம். ஆகை
யால் ஆஸ்திக சிரோன்மணிகளாகிய ஒவ்வொரு கனவான்
களும் இவ்விஷயத்தில் அதிக ஊக்கத்துடன் கவனித்து,
வரவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

5. செல்வவான்களும் சரியே, ஏழைகளும் சரியே
தங்களுக்காவது, லோக உபகாரத்திற்காகவாவது அடி
யிற்கண்ட விஷயங்களை எல்லோரும் தெரிந்துகொள்ள
வேண்டியது அவசியமானதென்பதை இந்நூலைப் படித்
துப்பார்த்தால் தெரிந்துகொள்ளலாம்.

6. மாடுகளில் இன்னின்ன தேசத்திய மாடுகள்,
அவைகளின் குணம், நிறம், பருமன், உயரம், வேலைகள்
செய்யக்கூடிய திறமை, அங்க லக்ஷணங்கள், பசுவின்
பால், தயிர், நெய், மோர் இவற்றின் குணம், பசுவின்
சகுணம், பசு, காளை, எருமை முதலியவைகளை வளர்ப்ப
தின் பிரயோஜனம், அவைகளை வாங்க, விற்க, பால் காய்ச்ச,
தயிர் கடைய, நெய் உருக்க முதல் முதலில் ஆரம்பிக்க
வேண்டிய நாட்கள், பசுக்களின் உறுப்புகளிலுள்ள தேவ
தைகள், அவைகளை மேய்த்து வளர்த்து அதனால் மேன்மை
யடைந்த சண்டிகேசுவர நாயனாரின் சரித்திரம், காப்பாற்ற
வேண்டிய விதங்கள், ஆகாரம் முதலியன கொடுத்து காப்
பாற்றுவதனால் உண்டாகும் பலன்கள், மாடுகளுக்கு உண்
டாகும் வியாதிகள் இன்னின்னதென்பதையும், அவை
களுக்கு தக்க மருந்துகளும் எல்லோரும் தெரிந்துகொள்
ளும்பொருட்டு இவ்விந்த தேசத்தில் வசித்து வந்த அநேக
மகரிஷிகளும், மகான்களும் பல நூல்கள் எழுதி வைத்
திருக்கின்றார்கள்.

7. தவிர முற்காலத்திலுள்ளவர்கள் தங்கள் கௌர
வம், பெருமை முதலியவற்றைப் பாராட்டாமல் பசு வர்க்

கங்களுக்குண்டாகும் வியாதி முதலியவைகளையும், அபாயங்களையும், பிரதிப்பிரயோஜனத்தையும் விரும்பாமல் எந்த மனிதர்களும் பிறருடையதானாலும், தம்முடையதானாலும் மிக்க அன்புடன் அவைகளுக்குத் தக்க சிகிச்சை செய்து காப்பாற்றி வந்திருக்கும் விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. மாடுகளுக்கு வைத்தியம் செய்து வந்த முறைகளை நம் நாட்டிலுள்ளவர்கள் நாளடைவில் கையாண்டு வராமல் விட்டுவிட்டார்கள். அதனால் மாடுகளுக்கு சீக்கு உண்டானால் அவைகளைக் காப்பாற்ற வகையறியாமல் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள்.

8. தற்காலத்தில் கெவர்மெண்டில் கால்நடை வைத்தியசாலைகள் ஜில்லாவுக்கு இரண்டொன்றும், ஜில்லா முழுமையும் சென்று வைத்தியம் செய்ய இரண்டொரு வைத்தியர்களையும் நியமித்திருக்கிறார்கள். மிருக வைத்தியசாலைகள் இருக்குமிடத்திற்கு ஒரு மைலுக்கு மேற்பட்ட தூரத்தில் கால் நடைகளுக்கு சீக்கு கண்டால் அவைகளை வைத்தியசாலைக்கு ஓட்டி வருவது அசாத்தியமானது. ஏனெனில் சீக்கு கண்ட மாடுகளுக்கு அநேகமாய் கால் நடக்க முடியாமல் போய்விடுகிறது. ஆஸ்பத்திரியிலிருந்து வெளியில் வந்து வைத்தியம் செய்யவும் சௌகரியம் குறைவாகயிருக்கும் சர்க்கியூட் ஆபீசர்களை வரவழைத்து பார்ப்போமென்றாலோ, கிராம உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் தாலூகா ஆபீசுக்குத் தெரிவித்து பிறகு அவர்கள் வந்து பார்ப்பதற்குள் ரொம்ப நாளாகிவிடுமாதலால், அதற்குள் சீக்கு அதிகப்பட்டு கால்நடைகள் மரிக்க நேரிடும்.

9. சௌகரியமாக நாட்டில் ஒவ்வோரிடத்திலும் நமக்கு கிடைக்கக்கூடிய பச்சிலை மருந்துச் சரக்கு முதலிய



வைகளைக்கொண்டு சுலபமாயும் சீக்கிரமாகவும் சிகிச்சை செய்து காப்பாற்றலாம். நம் நாட்டில் அனுபவித்தில் தேர்ந்த மாட்டு வைத்திய நிபுணர்களால் எழுதி வைக்கப் பட்டிருக்கிற ஏட்டுப் பிரதிகளை அவ்வைத்தியர்களிடமிருந்து, அவர்களை நேரில் கண்டு அவர்களால் செய்யப் பட்ட முறைகளையும் சில மிராசுகளிடமிருந்து அவர்கள் பண்ணையில் மாடுகளுக்கு வருஷந்தோறும் கொடுத்துவரப் பட்ட மருந்தின் முறைகளையும் மதராஸ் ஸிவில் வெட்டிரினரி டிபார்ட்டுமெண்டாரால் ஆண்டு பத்திரிகையில் வைத்திய விஷயமாய் சொல்லப்பட்டிருக்கும் அரிய விஷயங்களையும், இச்சிறு புத்தகத்தில் எல்லோரும் தெரிந்துகொள்ளும்பொருட்டு இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இது விஷயத்தை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வாராயின் வைத்தியர் கிடைக்கக்கூடாத எந்த இடமாயிருந்தாலும், எந்த சமயமாக விருந்தாலும் மாடுகளைக் காப்பாற்ற மிகவும் அனுகூலமாயிருக்குமென்பதை உத்தேசித்து இப்புத்தகத்தை வெளிப்படுத்த துணிந்தேன்.

திருவாரூர் மிருக வைத்தியசாலை சர்ஜன் ஸ்ரீமான் M. ஆதிமூலம் முதலியார் அவர்கள் வைத்திய விஷயமாய் செய்த உதவிக்கு மிகவும் நன்றி பாராட்டுகிறேன்.

ஒவ்வொரு கனவான்களும், இச்சிறு புத்தகத்தை ஹஸ்த பூஷணமாக ஏற்றுக்கொண்டு இதிலுள்ள சொற்குற்றம் பொருள் குற்றங்களை நீக்கி குணத்தை கிரஹித்து இந்நூலைப் பெருமைப்படுத்தும்படி ஹம்ஸம்போன்ற ஸாதுக்களைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

R. கோபால அய்யர்.

# FOREWORD.

I have perused with interest the proof-sheets of the book, "The Protection of Cows," which is being brought out by Mr. R. Goapala Ayyar. He has already published books on "House building" and "Water finding" and "Rearing of trees." His present book contains much useful information collected from various sources relating to the value attached to cattle in ancient days, the traditional beliefs regarding the points to be noted in the acquisition, protection and propogation of good breed of cattle, the treatment, medical and otherwise, of bulls and generally very much that has been forgotten in India relating to the improvement of the most essential element in agriculture, namely, healthy and strong cattle. At a time when veterinary science is deemed to be of great importance in the treatment and protection of animals according to Western standards, it will be of not a little help to be familiar with the traditions, usuages and customs obtaining in this country among the agricultural population bearing on the sacred cow, the Brahmani Bull, the ploughing cattle and other animals indispensable in so essentially and agricultural country as India. I have therefore consented to write this Foreword. I hope that the book will serve the purpose for which it is intended and instil interest in a subject which is of vital importance to our country.

"Venkata Park"
Cant. Trichinopoly
3rd Sept. 1927.

(Sd.) T. DESIKACHARI

## புலிவலம், R. கோபாலய்யரால்

எழுதப்பட்ட புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| (1) | ஸ்ரீ லலிதா வைரத்தனம் என்னும் மனையடி சாஸ்திரம் 1-ம் பாகம் | 1—0—0 |
| (2) | ஷை இரண்டாம் பாகம் | 0—9—0 |
| (3) | ஜலாசய நிர்மாண லக்ஷண சாஸ்திரம், குளம், கிணறு வெட்ட | 0—8—0 |
| (4) | விருக்ஷாதி ஸம்ரக்ஷண சாஸ்திரம் | 0—8—0 |
| (5) | கோ, ஸம்ரக்ஷண சாஸ்திரம் | 1—0—0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

(விலாசம்) R. கோபாலய்யர்,
ஸ்ரீ திருநாகைவல்லி அம்பாள் விலாஸ்,
புலிவலம், விஜயபுரம் போஸ்டு,
தஞ்சாவூர் ஜில்லா.



ஓம் தத்ஸத்

ஸ்ரீலலிதாம்பாள் துணை.

## ஸ்ரீவெங்கடேசாய மங்களம்.

1. சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வவிக்னோபசாந்தயே.

2. நமோ பிர்மண்ய தேவாய, கோ பிராம்மண ஹிதாயச ஜகத் ஹிதாய கிருஷ்ணாய கோவிந்தாய நமோநம:

3. விநாயகம், குரும், பானும், பிரும்மா, விஷ்ணும், மகேசவரம், ஸரஸ்வதி, ப்ரணம் யாதௌ, ஸர்வகார்யார்த்த ஸித்தயே.

4. நாராயணம் நமஸ்கிருத்திய, நரஞ்சைவ நரோத்தம தேவீம் ஸரஸ்வதீ வ்யாஸம், ததோ ஜயமுதீரயேத்

5. ஜயதிவரதமூர்த்தி, மங்களம் மங்களானாம் ஜயதி புவனமாதா-சின்மயீ மோக்ஷரூபா திசது மமமகேசோ-வாங்மயீ சப்தரூபா.

6. ஸர்வமங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதகே சரண்யே திரியம்பகே தேவி நாராயணி நமோஸ்துதே.

## கவா அஷ்டகம்.

1. ஓம் நமோ தேவ்யை மகாதேவ்யை ஸுரபியைச நமோநம: கவாம், பீஜஸ்வரூபாயை நமஸ்தே ஜகதம்பிகே.

2. கல்பவிருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸததம்பரே க்ஷீரதாயை தனதாயை புத்திதாயை நமோ நம:

3. சுபாயைச சுபத்ராயை கோப்பிரதாயை நமோ நம: யசோதாயை கீர்த்திதாயை தர்மதாயை நமோ நம:

4. பவித்ரரூபாம் பூதார்த்த பக்தானும் ஸர்வகாமதாம் யதாபூதம் ஸர்வம் விசுவம் தாம் தேவீம் சரபிம்பஜே.

5. அவார்ச்சனம் மகா புண்ணியம் தேவானுக்கிரக காரகம் மகா பாபப்ராயச்சித்தம் புக்த்தி முக்திப்ரதாயகம்.

6. யஸ்மாத் சரீரேஸான் நித்யம் திரிதிர்ஸிம்சத்கோடிதேவதா ஸாதேனுர்பவ பூஜ்ய நித்யம் ஸ்ரீ கிருஷ்ணஸ்யா ஜயா.

7. தர்மராஜ ப்ரதிஷ்டாய்ன்ற சேர, லக்ஷ்மீ ப்ரமதாமதா
கல்பவிருக்ஷ ஸ்வரூபாவை ஸாக்ஷிக்யாம் யேன்ய ப்ராய்ந்னதா.

8. கோப்ரதிஷ்டா விஜைசய்வா வியர்த்தா ஸர்வ ப்ரதிஷ்
டிதா ஸர்வப்ரதிஷ்டா மூலம்ஸ்யாத் ரக்ஷுஸ்யா ப்ரயத்நதா

9. ஜாத்வாபூஜா ரகஸ்யஞ்ச பக்தி யுக்திச்சமானவா யபூஜ
யர்ச்சனாமபி ஸ புஜ்யோ பவேத்புவி.

10. அஷ்டகமிதம் ஸபுண்யம் பக்தி யுக்திச்சயப்டேத்-ஸர்வ
ஸித்திமவாப்னோதி ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா.

1. ஸஸ் ஸ்தாராத் ஸர்வ தீர்த்தேஷு ஸர்வயக்ஞேஷு.
தீக்ஷிதா-இஹலோகஸுகம் புக்த்வா யாம்யந்தே விஷ்ணுமந்திரே,

## இதி கவா, அஷ்டகம் ஸம்பூர்ணம்.

ஓம் சுவஸ்திப்ரஜாப்யாம் பரிபாலயந்தாம் ந்யாயேன, மார்க்
கேணமகம்மஹீசா, கோ ப்ராம்ஹணேப்யோ சுபமஸ்து நித்யம் லோகா
ஸமஸ்தா சுகினோபவந்து.



உ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ லலிதாம்பாள் துணை.



# கோ ஸம்ரக்ஷண சாஸ்திரம்.

## 1-வது அத்தியாயம்.

**பசு,** எருதுகள் உண்டான விதமும் அவைகளின் பெருமைகளும் இலக்ஷணங்களும்.

ஆதியில் பிரம்ம சிருஷ்டி ஆரம்ப காலத்தில் ஸ்ரீமகா விஷ்ணுவின் ஆக்ஞைப்படி பிர்மாவினால் சுரபி என்னும் ஓர் பசுவை மானஸீகமாக சிருஷ்டித்து * தேவேந்திரனுடைய தபோ மகிமைக்கு உகந்து அவனுக்குக் கொடுத்

* திருப்பாற்கடலில் அமிர்தம் கடைந்த காலத்தில் அதிலிருந்து காமதேனு, கற்பக விருக்ஷம், ஐராவதம், தன்வந்திரி, கவுஸ்துபமணி, இலக்ஷ்மி முதலியன உண்டானதாகவும் அதில் ஐராவதமும், கற்பக விருக்ஷம், காமதேனு இவற்றை தேவேந்திரனுக்கு கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

தார். தேவேந்திரனை களிப்பிக்கும்படிக்கும் அப்பசுவுக்கு வரம் கொடுத்தார்.

2. அதன்படி அப்பசுவினிடமாக மனுஷ்ய, பக்ஷி, மிருக, விருக்ஷாதி, ஸர்வ முதலியவைகள் உண்டானதாகவும் அப்பசுவினுடைய சரீரத்தின் அங்கங்களில் சகல தேவதைகளும் வசிப்பதாகவும் தேவ மனுஷ்ய வர்க்காதிகளுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் கொடுத்ததாகவும் தபஸினால் யக்ய கர்மாக்களை செய்யும் மஹான்களுக்கு மானஸீகத்தினால் இஷ்டாபூர்த்தி செய்வதற்காகவும் சிருஷ்டிக்கப்பட்டனவென்று வேதங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன.

3. (1) பக்த விலாசத்தில், சண்டிகேசுவர நாயனார் பசுக்களை மேய்த்து ரக்ஷித்து சிவசாயுஜ்யத்தை அடைந்ததாயும்,

(2) பாரதத்தில் வசிஷ்ட மகரிஷியின் தபோமஹிமையினால், காமதேனுவானது அவரிடமிருந்து அவருடைய ஆக்ஞைப்படி நடந்துகொண்டு வருங்காலத்தில் கவுசிக மகாராஜா அப்பசுவை அபகரித்துக்கொண்டு போகும் சமயத்தில் தன்னுடைய சரீரத்திலுள்ள ரோமங்களின்று அநேகம் வீரர்களை உண்டு பண்ணி கவுசிக மகாராஜாவினுடைய சைன்யங்களை தோற்கடித்து தாம் வசிஷ்டரிடம் சென்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

(3) கோகுலத்தில் யாதவர்களுடன் ஸ்ரீ கிருஷ்ண பகவான் பசு மந்தைகளை மேய்த்து வருங்காலத்தில் அப்பசுக்கள் தாங்க முடியாத கல் மழை இந்திரனால் பெய்விக்கப்பட்டபொழுது ஸ்ரீகிருஷ்ணபகவான் கோவர்த்தனமென்னும் மலையை குடையாகப்பிடித்து அப்பசுக்களைக் காபாற்றினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.





4. காட்டில் இறை தேடிக்கொண்டிருந்த புலிக்கெதிரில் காணப்பட்ட ஓர் பசுவை புலி கொல்ல வருங்காலத்தில் அப்பசுவானது தன் இளங்கன்றுக்கு பால் கொடுத்துவிட்டு திரும்பவந்து அதற்கு ஆகாரமாவதாகச் சொல்லி சத்தியம் செய்து கொடுத்துவிட்டு, தன் இளங்கன்றினிடம் சென்று, அதற்கு பால் கொடுத்துவிட்டு மறுபடியும் புலியினிடம் வந்து தன்னை ஆகாரம் செய்யும்படி, கேட்க புலியானது அப்பசுவின் சத்தியம் தவறாமையைக்கண்டு அதைக் கொல்லாமல் விட்டு விட்டதென்று கபிலவாசகத்திலும், திருக்கோகருணம், திருவாரூர் ஸ்தல புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

5. நான்கு ஆச்சிரமத்தார்களும் யக்ய கர்மாதிகளை செய்யவும், ஈசுவர அபிஷேகம், நைவேத்தியம் முதலியவைகளுக்கும், பஞ்சகௌவிய திரவியங்களால் தேக சுத்தத்திற்கும், ஒருவனுடைய செல்வத்திற்கு முக்ய ஆதாரமானது. எருதுகளும் பசுக்களுமே எந்தத் தொழிலை செய்வதாக விருந்தாலும் அத்தொழிலுக்கு முக்கிய ஆதாரமானது பூமியிலிருந்து உண்டாகும் வஸ்துக்களே.

எருதினால் உண்டாகும் பெருமை.

1. பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருகாலும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வம் அழிவுபடா திருத்தலினால்
போர்வேந்தர் போர்க்களத்துச் சிலர் வெல்வர் சிலர் தோற்பர்
ஏர்வேந்தர் போர்க்களத்தில் இறப்பவரும் தோலாரே."
வானமழை பொழிந்தாலும் வளம்படுவ தெவராலே
ஞானமறை யவர்வேள்வி நலம்பெறுவ தெவராலே
சேனைகொடு மன்னர்திறல் களத்தில் சிறக்குமது
யானைவலி யெவராலே யேரெருதின் வலியாலே.

—(ஏரெழுபது.)

மேற்சொல்லப்பட்ட கவிகளால் எருதுகளாலும் பசுக்களாலும் உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் க்ஷேமத்தை அடைகின்றன. பிரஜைகள் க்ஷேமத்தை அடைவதினால் மன்னர்களுக்கு க்ஷேமம் உண்டாகி மன்னர்களுடைய செங்கோலும் உயர்வடைகின்றனவென்று ஔவையால் சொல்லப்பட்டிருக்கிறது.

1. வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்.

2. அந்தணர்க்கு வேதமுதல் அரசருக்கு வெற்றிமுதல்
முந்தியசீர் வணிகருக்கு முதலாய் முதானிலையில்
வந்த உயிர் தமக்கெல்லாம் மருந்தாக வைத்தமுதல்
செந்தமிழ்க்கு முதலாய் திருவாளர் செய்முதலே.

திருக்குறள்.

1. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.
2. சுழன்றுமேர்ப் பின்னதுலகம்
அதனால் உழந்தும் உழவே தலை.

நல்வழி.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

கொன்றைவேந்தன்.

மேழிச் செல்வம் கோழைப் படாது.
ஞானமெல்லாம் உழவார் தலைக்கடைக்கே.



உலகத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகல விதமான ஜீவராசிகளிலும் பசுக்கள் தான் முதன்மை யானதென் பதைப்பற்றி அநேக விதமாக ரூபிக்கலாம்.

1. தாயானவள் குழந்தை பிறந்தது முதல் 2, 3 வருஷங்கள் வரையிலும் பால் கொடுத்து வளர்க்கிறாள். பசுவோ, தாயின் கெர்ப்பத்தில் சிசு உற்பத்தி முதல் மரண பரியந்தம் அதனிடமிருந்து கிடைக்கும் பாலாலும், பாலிலிருந்து உண்டாக்கப்பட்ட தயிர், மோர், வெண்ணெய் முதலியவற்றாலும், கோரோசனை இவைகளாலும் காப்பாற்றப்படுகிறது. தாயில்லாக் குழந்தைகளையும் காப்பாற்றுவது விசேஷமாய்ப் பசுவின் பாலே. ஆதலால் பசுவானது தாயினும் மிகச்சிறந்ததே.

2. விவசாயம் செய்பவர்களுக்கு உழுதல், பரம்படித்தல், தண்ணீர் இறைத்தல், போர் அடித்தல் முதலிய வேலைகள் செய்யவும், பாரமான சுமைகளை வண்டியிலேற்றி இழுக்கவும், சகல உணவுப் பொருள்களையும் ஆடைகளுக்கு வேண்டிய பஞ்சு முதலியவைகளும் பாரமான பொருள்களை ஓர் இடமிருந்து மற்றொரு இடத்துக்குக் கொணர்ந்து சேர்க்கவும், மனிதர்கள் சவாரி செய்யவும், பசுவின் ஆண் இனமாகிய எருதுகள் உபயோகப்படுகிறது. அதன் மல மூத்திரங்கள் விவசாயிகளுக்கு முக்கியமாய் பலன் தரக்கூடிய நல்ல எருவாகின்றன.

3. அதன் மற்ற உபயோகங்களைப்பற்றி பின்பு விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பலவிதத்திலும் உதவியாகிற பசு, எருது, எருமை முதலியவைகள் வயது முதிர்ந்ததாலும், நோயினால் வேலை செய்ய சக்தியற்ற காலத்திலும் அவைகளை கூடியவரையில் தக்க ஆதாரங்

களையும் ஔஷதங்களையும் கொடுத்து ரக்ஷிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் முதிர்ந்த மாடுகளையும், வேலை செய்ய சக்தியற்றவைகளையும் வறட்டு மாடுகளையும் அடிமாட்டுக்காரர்களிடம் விற்றுவிடவேண்டுமென்று சிலர் கருதுகிறார்கள். அப்படிச் செய்வது ரொம்பவும் தவறு. ஏனெனில் வயது முதிர்ந்த தங்கள் தாய் தந்தைகளையும், நோயினால் பீடிக்கப்பட்ட தன் மனைவி மக்களையும், சகோதரர்களையும் பாதுகாக்காமல் விட்டொழிப்பவர்கள் எப்படி உலகத்தாரால் இகழப்படுகிறார்களோ அப்படிப்போல இகழப்படுவார்கள். எவ்வளவுக்கு பசுக்களையும், காளைகளையும் காப்பாற்றுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு இம்மையில் சுகத்தையும், மறுமையில் புண்ணிய லோகத்தையும் அடைவார்களென்று சொல்லப்படுகிறது.

(சிவதருமோ, சோ. 130.)

அரனுறி பொருளை மெரேசன் மருமாறு
பொருளாம நுறைவார்க ளுமையாதி மடவார்
மரிதாய மனைவோர்க ளுடலாவி யுடலர்க
பொருளாது வழ்பாவ புரிவார்க ளுயர்வாரே.

ஆதலால்தான் உலகத்தில் ஒருவர்க்கொருவர் நேரில் கண்டு சம்பாஷிக்கும் பொழுது, மாடு கன்றுகள், வீடு, வாசல், ஸம்சாரம், குழந்தைகள் சௌக்கியமா என்று முற்காலத்தில் கேட்பது எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும்.

பசுவானது கன்றுபோட சத்தனித்து, கன்று வெளிவரும் சமயத்தில், "உபயதோமுகி" என்ற இருபுறமும் முகமுள்ள அப்பசுவை பிரதக்ஷணம் செய்து நமஸ்கரித்தால் ஒருவன் ஏழேழு உலகங்களிலும் சென்று சகல தேவதைகளையும் நமஸ்கரித்து தரிசித்த பலனை யடைகின்றான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கலி



யாணங்களிலும், உபகாரியங்களிலும் தானஞ்செய்தால் சகல போகபாக்கியங்களையும் அடைகிறார்களென்றும், மாதுர், பிதுர் கர்மங்களுக்கு பசுக்களையும், எருதுகளையும் தானம் செய்தால் பிதுர்கள் கஷ்டத்தை விட்டு புண்ணிய லோகத்தை யடைகிறார்களென்றும் ஸ்மிருதிகள், புராணங்கள் முறையிடுகின்றன.

கோதானத்தைப்பற்றி அநேக கிரந்தங்களில் விபரமாய்ச் சொல்லப் பட்டிருப்பதைப் பார்த்தும் தெரிந்து கொள்ளலாம். ஒரு கறவைப் பசுவை தானம் செய்பவன் சகல சம்பத்தையும் அடைவதன்றி சகல கஷ்டங்களினின்றும் நிவர்த்திக்கப்படுகிறானென்று சொல்லப்படுகிறது.

ராஜாக்கள் படுக்கையினின்றும் எழுந்திருக்கும் பொழுதும், ஆலயங்களில் காலைநேரத்தில் பூஜை செய்ய கதவு திறந்தவுடனும், ஸன்னிதியில் பசுவை நிறுத்தி பூஜிப்பதையும், சில கிரகங்களில் தினந்தோறும் கோ பூஜை செய்வதையும் விசேஷமாய் தை மாதத்தில் சங்கராந்தியன்றையதினம் இந்துக்களுடைய எல்லா வீடுகளிலும் கோ பூஜை செய்துவருவதைக் காணலாம். பசுவை ரக்ஷித்ததினால் அடையும் பலனை கீழ்க்கண்ட சண்டிகேசுவரநாயனார் சரித்திரத்தினால் அறியலாம்.

## சண்டிகேசுவரநாயனார் சரித்திரம்.

சோழமண்டலத்திலே, திருச்சேய்ஞலூரில் பிராமணர் குலத்தில், காசிப கோத்திரத்தில் எச்சதத்தன் என்னும் பிராமணோத்தமருக்கும், அவர் மனைவி பவித்திரைக்கும் விசாரசர்மன் என்னும் புத்திரன் பிறந்து, ஐந்து வயதிலேயே வேதாகமங்கள், புராணங்கள் முதலியவைகளை

பூர்வஜன்மத்து அறிவு தொடர்ச்சியால் கற்பிப்பார் இல்லாமலே அறியும் அறிவு உண்டாயிற்று. ஏழுவயதில் தாய் தந்தையர்கள் அவருக்கு உபநயனச் சடங்கு செய்து முடித்தார்கள். நல்ல ஆசிரியரால் வேதாத்தியயனங்களையும் பிற கலைகளையும் கற்பிக்கும் முன்னமே, தாமே எச்சாத்திரங்களு முணர்ந்தம்படியான திறமையுடையவரானார். அதி பால்யத்திலேயே சான்றோர்க் குரிய குணங்கள் அவரிடம் அமைந்திருந்தன. அவ்விசாரசர்மன், ஆன்மாக்களாகிய நாமெல்லாம் அநாதி மலபத்த ரென்பதும், நமக்கும் அம்மல சக்தியைக் கெடுத்து நித்யமாகிய பேரின்பத்தைத் தரும்பொருட்டு, சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபாவம், அநுக்கிரஹம் என்கிற பஞ்ச கிருத்தியங்களையும் செய்பவராகிய ஒரு பதி உண்டென்பதும், அப்பதிக்கு எட்டு குணங்களும் இன்றியமையாதனவென்பதும், அக்குணங்களுடைய பதி, சிவபெருமானென்பதும் அவர் அத்தொழில் இயற்றுதல் தம்மோடு ஒற்றுமையாகிய சிவசக்தியாலுமென்பதும், அவ்விருவரும் பிதா மாதாக்களென்பதும், அதனால் அவர்களிடத்தில் நாம் அன்பு செய்ய வேண்டுமென்ற கருத்துடையவராய் வேதாத்தியயனங்கள் செய்துவருங்காலத்தில் ஒருநாள் அவ்வூர் பசுநிரைகளை மேய்ப்பவனாகிய ஓர் இடையன் மாடுமேய்ப்பதற்கு ஓட்டிச் செல்லுகையில் முதன்முதல் கன்றுபோட்ட ஓர் பசுவானது அவ்விடையனை முட்ட முயன்ற காலத்தில் அவ்விடையன் பசுவைத் தன் கையிலிருக்கும் கோலினால் அடிக்கக்கண்டார். விசாரசர்மர் அவ்விடையனைப்பார்த்து அப்பசுக்களானது உண்டான விதமும் அவற்றின் பெருமையும்.





(சிவதரு கோ. 30-வது பாட்டு)

அமரரு மசுரர்தாமு மமிழ்துணக் கருதிவெற்பைத்
தமதுயர் வலந்தாற் ரூக்கிக் கடைந்தபாற் கடலிற் றங்கிப்
பலமுறு மரியதேனுப் பஞ்சகம் பரமனாலே
யவன்முடிக் கருசமான வாறுமவ் வைந்தினுமே.

(31-வது பாட்டு.)

உத்தமரோ சனர்தமுறைத் திமொரு மோரின்
வித்தகப் பொருள்கள் வேண்டும் பலத்தினை விளைக்குமென்று
மத்தனை யமலன்றன்னை யாதரிப் பாருமார
வித்திறத் திசையத் தோன்றும் பொருள்களு மியம்புவாமே.

## பசுக்களானது ஆதியில் கைலாசத்திலிருந்து பூமியில் வந்த விபரம்.

(சிவதருமோத்திரம் கோபுரவியல்—121-வது பாட்டு).

வீற்றிருக்கும் விமலனது சன்னதியில் வெள்விடையும்
விளங்கு மந்த
வேற்றினைய வர்க்குமுத விசைத்துறையுமுயிர்த்திரக்க
மெய்த்தி யீசன்
ஏற்றுவிக்க பூதலத்திற் றோன்றி யெழிற்பாற்கடலிற்
றுயரத்தன்னை
மாற்றிலன் வாழ்வார்க்கும் வரங்கொடுக்கும்பரமனருள்
வழியினாலே.

(122-வது பாட்டு).

நந்தை, சுபத்திரை, சுரபி, சுசீலை, சுமனை, யெனு
நவின்ற நாம
மைந்தினுக்கு மதிகநிறங் காபிலமே, கரியவுரு
வணிகொள் வெண்மை,
சுந்தரத்த தாமிரமே தாமிரமே, யெனத்துணிந்து
நாமஞ்சொல்லி
வந்தனை செய்தவற் றதிக்கவிரு மூன்று மாட்டிகை
வரதற்கென்றும்

பின், அப்பசுவின் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் முதலிய வஸ்துக்கள் பஞ்சகவ்யத்திற்கும், யக்ஞ யாகாதி ஹோமங்கள் செய்யவும், ஆலயங்களில் தீபங்கள் வைக்கவும், ஔஷதங்களுக்கும் உபயோகமாவதையும், சாணத்தை விபூதி செய்யவும், வீடுகள் சுத்தி செய்யவும் உபயோகமாகும் விபரங்களையும், இன்னும் அப்பசுவினது தேகத்தில் பதினான்கு லோகங்களும் வலது கண்ணில் சூரியனும், இடது கண்ணில் சந்திரனும், இரண்டு கண்களுக்கு நடுவில் சங்கரனும், வலது நாசியில் சுப்பிரமணியரும், இடது நாசியில் கணபதியும், மண்டையில் தீர்த்தராஜாவும், வலது கொம்பில் யமனும், இடது கொம்பில் இந்திரனும், நெஞ்சில் விஷ்ணுவும், இடது முன் கழுத்தில் ஸரஸ்வதியும், கீழ்பக்கம் ராகுவும், மேல் பக்கம் கேதுவும், முன்கால் நடு முன்னிக்குமேல் செவ்வாயும், அதன் கீழ் சனியும், அதன் மேல் சுக்கிரனும், அதன்மேல் புதனும், கொண்டையில் பிரம்மாவும், கொண்டையின் கீழ்பக்கம் குருவும், முன்பக்கம் வலது காலில் மாயவரும், இடது காலில் மாருதியும், முன் பக்கம் வலது காலின் அடிப்பக்கம் விந்தியவர்வதமும் வயிறு மத்தியில் பிருதிவி தேவியும், நடு முதுகில் அக்னியும், பின் பக்கம் முதுகில் வருணனும், தட்டுக்கு முன் பக்கம் குபேரனும், அடி வயிற்றில் ஜனக, ஜனந்தன, ஜனாதன ஜனத் குமாரர்களும், மடிக்கும் மேல் பாகம் அமிர்த (பால்) ஸமுத்திரமும், பின் தட்டுக்கு மேல் பக்கம் பாத்தலாசரும், பெண் குறியில் லக்ஷ்மியும், அதன் கீழ் பக்கம் கங்கையும், தொடையில் நாரதரும், அடிச்சப்பையில் விசுவாமித்திரரும், வலது பின்னங்காலில் மகேந்திர பர்வதமும், இடது பக்கத்து பின்னங்காலில் துரோண



சல பர்வதமும், வாலின் மேல்பாகம் முதல் குஞ்சம் வரையில் நாகராஜனும், வால் குஞ்சத்தில் ஸ்ரீதனரும், பசுவின் தேகத்திலுள்ள ரோமங்களில் சகல தேவர்களும், ரிஷி கணங்களும் வசிப்பதால் அப்படிப்பட்ட பசுக்களை அடிக்கக்கூடாதென்று சொல்லி அக்கிராமத்திலுள்ள மாடுகளை தாமே மேய்ப்பதாக ஒப்புக்கொண்டு அவைகளை ஓட்டிப் போய், தினம் மண்ணியாற்றங்கரையில் மேய்த்து வந்தார்.

அப்பொழுது, அப்பசுக்களானது முன்னிலும் அதிகமாக பால் கறப்பதுடன், மாடுகளும் எதேஷ்டமாய் பெருக ஆரம்பித்தன. இவ்வாறு மேய்த்துவருங்காலத்தில் பசுக்களை ஆற்றங்கரையில் மேயவிட்டு, அம்மணலில் சிவலிங்கத்தைப் பிடித்துவைத்து அக்காட்டிலுள்ள புஷ்பங்களினால் பூஜைசெய்து வருங்காலத்தில், அப்பசுக்களானது அக்காடுகளிலுள்ள புஷ்பங்களை வாயினால் கௌவிவந்து, அவ் விசாரசர்மருக்கு பூஜைக்கு கொடுப்பதுடன், பூஜைக்கு வேண்டிய பாலையும் பொழிந்து வந்தது. அப்பாலைக் குடங்களில் ஏந்தி, லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வதைக் கண்ட ஒரு பிராமணர், விசாரசர்மருடைய பிதாவாகிய எச்சதத்தரிடம் "உன் புத்திரன், பசு நிரைகளை இடையன் மேய்க்கக்கூடாது என்று தடுத்து, தாம் மேய்ப்பதாக ஓட்டிப்போய் மாட்டின் பாலை எல்லாம் கறந்து ஆற்றில் கொட்டிவிடுகிறான்" என்று சொல்லி கோபித்துக்கொண்டார். அதைக்கேட்ட எச்சதத்தர் மறுநாள் கோபத்துடன் மண்ணியாற்றங்கரையில் ஒரு குராமரத்தின் மேல் ஒளிந்துகொண்டிருந்தார். வழக்கம்போல் விசாரசர்மா மாடுகளை ஆற்றங்கரையில் விட்டுவிட்டு மணலில் லிங்கத்தைப் பிடித்துவைத்து பூஜைக்கு ஆரம்பித்தவுடன் பசு

பிறைகள் வாயினால் புஷ்பங்களைக் கொண்டுவந்து கொடுத்ததையும், அங்கு இருந்த குடங்களில் பாலைப் பொழிந்து போலதையும் கண்ட எச்சதத்தர் கொஞ்சமேனும் யோசித்துப்பாராமல் மரத்தைவிட்டுக் கீழிறங்கி விசாரசர்மருக்கும் அருகில் சென்று, ஒரு கோலினால் விசாரசர்மருடைய முதுகில் அடித்தார். அவ்விதமாய் எத்தனை தடவை யடித்தாலும் கவனியாமல் ஈசுவரத் தியானத்திலேயே இருந்துகொண்டிருந்தார். அப்பொழுது எச்சதத்தர் பாற் குடங்களைக் காலினால் இடறிவிட்டு கோபித்துக்கொள்ளும்போது விசாரசர்மருக்கு கோபமுண்டாகி, தன் பிதாவென்று சற்றும் யோசியாமல் கீழே கிடந்த கோலை எடுத்து அவர் காலில் அடித்தார். அது மழுவாயுதமாக காலை இரண்டு துண்டாக்கிவிட்டது. அவர் பக்திக்குமிக்க சந்தோஷித்து ஈசுவரன் விருஷபாரூடராய் அம்பிகா ஸமேதராய் பிரத்தியக்ஷமாகி, "நீ நம் பூஜையின் நிமித்தம் பிதா, பிராமணர் குரு என்றும் பாராமல் காலைத் துணித்ததினால் உன்னை நம்முடைய பக்தர்களுக்கு தலைவனாக நியமித்து தன்னுடைய கழுத்திலிருந்த கொன்றை மாலையை தம் கையினால் எடுத்து அவருக்குச் சாற்றி தமது கையினால் அவருடைய திரேகத்தைத் தடவிக்கொடுத்து தங்கள் பக்கத்திலிருக்கும் படிக்கும், நம்முடைய நிர்மாலியங்களை நீயே அடையவுரியவனென்றும், என்னுடைய தெரிசனார்த்தமாக வரப்பட்டவர்கள் உன்னைத் தரிசித்தால்தான் அவர்கள் நம்மை தரிசித்த பலனை அடைவார்களென்றும் அநுக்கிரகித்து அவருடைய பிதாவுக்கும் மோக்ஷத்தைக் கொடுத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது." ஆதலால் தான



சிவாலயங்களில் தரிசனம் செய்யப்பட்டவர்கள் கடைசியாக சண்டிகேசுவரரைத் தெரிசனம் செய்கிறார்கள். ஈசுவரனுக்கு ரிஷபம் வாகனமாகவும் உபயோகப்படுகிறது. ஆகையால் பசு எருது, முதலியவைகளை அவசியம் எல்லோரும் கவனித்து காப்பாற்றுவார்களானால் இம்மையில் புத்திராதி சகல சுகங்களையும், மறுமையில் மேலான பதத்தையும் அடைவார்களென்பது உண்மை! உண்மை!! உண்மை!!!

குணசீலனுக்கும் பிரதிவாதி பயங்கரனுக்கும் நடந்த சம்பாஷணை:—

திருச்சங்கோடு மான்மியம் பக்கம் 218, 222.—சுப்பிரமணியக் கடவுளே, பசு மேய்ப்போனாக வந்த மான்மியம்.

பயங்கரன் என்னும் ஒரு வித்துவான் அநேக இடங்களிற் சென்று, வித்துவான்களை ஜெயித்துக்கொண்டு, திருச்சங்கோட்டிற்கு வந்தவுடன் இந்த ஊரிலுள்ள வித்துவானை எவ்வாறு ஜெயிக்கலாமென்று யோசித்து, இவ்வூர் சுப்பிரமணியக்கடவுள் இருக்கின்ற மலைக்கு, ஸர்ப்பசயிலமெனப் பெயர் வாய்த்திருப்பதால் ஸர்ப்பம் என் படம் விரித்து ஆடவில்லை என்று கேட்டால், அதற்கு வேறு பதில் சொல்லமுடியாது என்று யோசித்துக்கொண்டிருக்கிற சமயத்தில், சுப்பிரமணியக்கடவுளே வித்வான் மனதில் நினைத்ததற்கு மறு உத்திரமாக அவ்வித்துவானைப் பார்த்து, இந்த ஸர்ப்பசயிலம் என்னும் மலையானது சுப்பிரமணியக்கடவுள் வாகனமாகிய மயில் கொத்திவிடுமென்று பயந்து படம் விரித்து ஆடாமல் இருக்கின்றது என்று சொன்னதைக் கேட்ட வித்துவான், தான் மனதில் நினைத்தவற்றை சொல்லிவிட்டதைக் கொண்டு அங்குமுந்

தையைப் பார்த்து நீ யார்? என்று விசாரிக்க—அவரைப் பார்த்து ஓ புலவரே! இம்மாடுகள் அனைத்தும் என்னுடைய ஆசிரியருடையதே, நான் அவர்பால் கற்ற கல்வியின் ஆராய்ச்சியால் உலகத்தில் வாழும் எல்லா யோனிகட்கும் மேலாய் விளங்கும் பெருமையையும் மிக்க மேன்மையுடையனவும் தூய்மையான கங்கை முதலிய தீர்த்தங்கள் எல்லாம் உடைத்தாய் இருக்கின்றன. பசுக் கூட்டங்களைக் காத்தலே சிறந்த புண்யம் எனத் தேர்ந்து இக்காரியத்தை மேற்கொண்டேன் என்றனர். இதைக் கேட்ட வித்துவான் அச்சிறு பிள்ளையின் வாயினின்றும் வரும் மாதுரிய சாதுரியமான அருமை வாக்கியங்களையும் தம் மனதில் நினைத்துக்கொண்டதற்கு அதைத் தெரிந்து கொள்ளாமலே. பதில் சொல்லப்பட்ட வார்த்தையின் சாதுரியத்தையும் கண்ட வித்துவான் மேலும் மேலும் கேட்க ஆவலுற்று அப்பா இப்பசு இனங்களின் மகிமையை இன்னமும் ஏதாவது தெரிந்திருந்தால் விசிதமாகக் கூறுவாயென, அச்சிறுவன் கூற ஆரம்பித்தான்.

கைலை மலையிலே சிவபெருமான் சந்நிதானத்திலே வெள்ளிய நந்தி விளங்கியிருக்கும். அந்நந்தியின் பக்கத்தில் நந்தை முதலிய பசுக்களிருக்கும். அவைகளைச் சிவபெருமான் சிற்றுயிர்களுக்கு இரங்கி பூமியில் இருக்கும்படி செய்ததால் அவைகள் பாற்கடலில் பிறந்து இவ்வுலகத்தில் வாழ்பவர்க்குத் துன்பங்களைக் கெடுத்து பல வளங்களையும் கொடுக்கும். மேற்கூறிய பசுக்கள் நந்தை என்றும், சுபத்திரை என்றும், சுரபி என்றும், சுசீலை என்றும், சுமனை என்றும் அழைக்கப்படுகின்றன. அவற்றுள் நந்தை கபில நிறம். சுபத்திரை கறுமை நிறம்.



சுரபி வெண்மை நிறம். சுசீலை தாமிர நிறம். சுமனை தாமிர நிறம் என்று அதனைத் தன் பெயரைச் சொல்லி பூஜை செய்து அவற்றிலுண்டான பால், தயிர், நெய், கோமயம், கோசலம், கோரோசனை முதலிய அறுவகைப் பொருள்களும் சிவபெருமா க்கு அபிஷேகம் செய்தருள வேண்டும். பிரமனும் திருப ும் பசுவின் கொம்புகளின் அடியில் வாழ்வார்கள். இ ருதினை, நிலத்தினையாகிய உயிர்களும் கொம்பின் நுனி கூடிநிற்கும்.

சிவபிரான், சிரத்திலு கதி நெற்றியின் நடுவிலும் ஷண்முகன், இந்திரன் மூக்கின் நுனியிலும், அசுவினி தேவர்கள் இரண்டு கன்னங்களிலும், சூரியன், சந்திரன் இரண்டு கண்களிலும், வாயு பற்களிலும், வருணன் நாவிலும், கலைமகள் நெஞ்சிலும், இயமனும் இயக்கரும் கண்டஸ்தானத்திலும், பருத்துவர் முழந்தாளிலும், கந்தருவர் குளம்புகளின் நடுவிலும், சப்தமாதர்கள் யோனியிலும், அஷ்ட வசுக்கள் சந்துகள் தோறும், ஆகவனியம் இருதயத்திலும், தக்ஷிணாக்கினி முகத்திலும், பூமிதேவி வயிற்றிலும், கற்புடைய ஸ்திரீ எல்லா அங்கங்களிலும், இன்னும் இப்பசுக்கள் விஷயமாய் வேதாகமங்கள் நல குணர்ந்த திருஞ்சேலூர் பிள்ளையார் என்ற சண்டிகேசுவரர் சரித்திரத்தில் விரிவாய்க் காணலாம்.

ஆதலால் பசுவின் உயர்வை நோக்கியன்றே மாடு மேய்க்கும் தொழிலைப் பூண்டனர். புண்ணியத்தொழில் இதைப்போல் உலகத்தில் உண்டோ? புலவர் திலகமே சகல பாவங்களையும் போக்கவல்லது திருநீறாம் அந்நீற்றுக்கு ஆதாரமானது பசு என்றால் இன்னும் என்ன கூறுதல் வேண்டும்.

பசுக்களை மேய்க்கினும், புன் முருங்கக் கோலால் மெள்ள மெள்ள, செச்சசெரி செச்சநெரி என்று ஓட்டினோர், சிவலோகத்தில் சிறப்புப்பொருந்தி வாழ்வார்கள். இரக்கமில்லாமல் கோபித்து அதட்டி ஓட்டுவோர் நரகத்தில் தங்குவர். அரன், அரி, அயன் ஆகிய முத்தேவரும், இந்திரனும் அவன் வழி வந்த மற்ற தேவர்களும், உமாதேவி முதலானவர்களும், அந்தணர்களும் பசுக்களிடத்தில் நீங்காமல் வசிப்பார்களாதலால் அப்பசுக்களைப் பூஜிப்பவர்கள் உயர்வான பதவியில் இருப்பார்கள். பசுக்களை தொழாமலும் அவற்றை ஆபத்துக்காலங்களில் காப்பாற்றாமலும் இருப்பார்கள். நரகத்தில் விழுதற்குரியராயும் அந்நரகத்தினின்றும் கரையேற அறியாதவராயுமிருப்பார்கள். அவற்றை காப்போரும் பாதங்களில் தொழுவோரும் சிவலோகத்தினைப் பொருந்துவர். அப்பசுக்களுக்கு புற்களை வாயில் கொடுத்து வலஞ்செய்து வாழ்த்தி வணங்கிப் பூஜை செய்வோர் இருவினைகளையும் நீங்கி சிவலோகத்தில் சுற்றத்தாருடன் விளங்கி இருப்பார்கள்.

அப்பசுக்களின் பாலினைக்கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தவர் அப்பெருமான் உலகத்தினைச்சேருவர். பசுக்களை கையால் தீண்டினவுடன் எல்லா பாவங்களும் குறைந்துவிடும். அஷ்டமிதோறும் மஞ்சனங்கொண்டு அபிஷேகஞ்செய்து, பூவாலருச்சித்து, தூபதீபமும் காட்டி, அன்னம் முதலியவைகளை ஆகாரமாகக் கொடுத்தவர்கள் செல்வத்தை அடைவார்கள்.

பசுக்களை முதுவேனிற் காலத்தில் குளிர்ச்சியுள்ள மலைப் பக்கங்களிலும், தழைத்திருக்கும் காடுகளிலுள்ள சோலைகளிலும், முன் பனியாகிய காலத்தில் சூரிய கிரணங்கள் பறந்த வெளியிடங்களிலும், மற்ற கார்காலங்களில்





துன்பமில்லாத இடங்களிலும் மேய்க்கவேண்டும். பசுக்கள் தினவுக்கு உரைஞ்சும்படி கருங்கற்றூண்களை, மந்தை முதலிய இடங்களில் நட்டவர்கள் அதிசய போக போக்கியங்களை அடைந்து வாழ்வார்கள்.

பசுக்களை தானஞ் செய்பவர்கள் புத்திர பவுத்திரர்களுடனும் புண்ய பூமியில் வசிப்பார்கள். பசுக்களை வாகனமாக ஏறிச் செல்பவர்களும், மலட்டுப் பசுக்களின் மீதும், எருதுகளின் மீதும் பாரமான சுமைகளை ஏற்றிச் செலுத்துபவர்களும் கொடிய நரகத்தை அடைவார்கள். பசுவானது கன்றுபோட்ட இரண்டு மாதம் வரையில் அதன் பாலைக் கன்றுகள் நன்றாய்க் குடிக்கும்படி செய்ய வேண்டும். பிறகு அவைகளின் பாலை கறத்தல் விசேஷம். பால் கறக்குமுன் மடியிலுள்ள அழுக்கை தண்ணீர்விட்டு சுத்தம்செய்து கறத்தல் வேண்டும். இன்னும் பசுக்களின் மகிமைகளையும் அவற்றை ஆதரிக்கவேண்டிய முறைகளையும் கூறின் விரியுமென்று சொல்லி முடித்தார்.

அதைக்கேட்ட வித்வான், சிறு குழந்தை அறிந்திருக்கும் கல்வித்திறமை, குணம் முதலியவற்றைப்பற்றி ஆலோசிக்கின் இவ்வூரில் இருப்பவர்களை நாம் ஜெயிக்க முடியாதென்று திரும்பிவிட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது.

மாடுகளின் பிரிவுகள்:—எருதுகள், பசுக்கள் இவைகளின் நிறம், பருமன், உயரம், வளர்ச்சி, குணம் முதலியவைகள் அவைகள் ஜனிக்கப்பட்ட தேசங்களிலுள்ள சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு நீர்வளம், நிலவளம், ஆகாரம் முதலியவற்றிற்குத் தக்கபடி ஏற்பட்டிருக்கின்றன.

1. பூர்ணய்யர் மாடு அல்லது அமிர்த மஹால் மாடு என்று சொல்லப்படுவது முதல்தரமானது. உயரத்திலும் பருமனிலும் வளர்ச்சியுள்ளதாக இருக்கும். வேலைகள் நன்றாய்ச் செய்யும். தோலும் மயிரும் அழுத்தமானது. இந்த தேசத்தில் முதல்தரமானது என்று சொல்லப்படும்.

2. 1. நெல்லூர், 2. மைசூர், 3. காங்கேயம், 4. ஆலம்பாடி, 5. சேலம், 6. குஜராத்தி, 7. புலிக்குளம் இம்மாடுகள் பார்வைக்கு உயரம், பருமன் முதலியவற்றிலும் நன்றாயிருக்கும். கொம்புகள் நீண்டிருக்கும். சவாரி வண்டி, பார வண்டி முதலியவற்றில் நன்றாய் வேலைசெய்யும். அவ்விடங்களிலுண்டாகும் பசுக்கள் பருமனாகவும், உயரமாகவும், அழகாகவும், ஸாதுவாகவுமிருக்கும். பால்கள் நன்றாய்க் கறக்கும், மற்ற மாடுகளைவிட சேலம் மாடுகள் மயிர் பஞ்சையுள்ளதும், தோல்கள் மெல்லியதாயுமிருக்கும். அதில் நாரை மாடுகளின் தோல், மயிர் அதிக பஞ்சையானது. புலிக்கொளத்து மாடுகள் திருடர்களால் அபாயமுண்டாகும் காலங்களில் எஜமானனைக் காப்பாற்றும். திருவண்ணாமலை மாடு, இம்மாடுகள் ஸம வளர்ச்சியுள்ளது. விசேஷமாக சிகப்பாகவேயிருக்கும். சிகப்பு வெளுப்பு கலந்த புள்ளிகள் உள்ளதாகவுமிருக்கும். ஸவாரி வண்டி, பாரவண்டி, உழவு முதலிய வேலைகள் செய்யவுதவும். பசுக்கள் ஸுமாராக கறக்கும். புங்கனூர் பசுக்கள் குள்ளமாக இருக்கும். பால் கறவைக்கு பேர்போனது.

யாழ்ப்பாணம்:—சமுநாட்டு மாடுகள் 4 அடி, 4½ அடிக்கு மேற்படாத உயரமுள்ளன. விசேஷமாய் சிகப்பு, கருப்பு, நீலம், கருப்புகலந்த புள்ளி முதலிய பல நிற



முடையன. 2, 2½ அங்குலத்துக்கு மேல் கொம்புகள் வளராது. பால் ஸுமாராக கறக்கக்கூடியது. எருதுகள் உழவு தவிர மற்றெல்லாத் தொழிலுக்கும் உரியனவாம்.

கோகுலம்:—இந்துஸ்தான், நேபாளம், இத்தேசத்துப் பசுக்கள் நடுத்தரமானது. இரட்டை நாடியுள்ளதாகவும் பால் கறவையில் பேர்போனதாயும், கொம்புகள் முன் வளைவுள்ளதாயும் நிறம் விசேஷமாய் வெண்மை நிறமுள்ளதாயுமிருக்கும்.

கரூர், மதுரை, திருச்சி இச் ஜில்லாக்களில் உற்பத்தியாகும் மாடுகள் சம வளர்ச்சியுள்ளதாகவும் விசேஷமாய் கொம்புகள் 6 அங்குலம் அல்லது 1 அடிக்கு மேற்படாமல் இருக்கும். உழவு, வண்டி முதலிய தொழில்கள் செய்ய உதவும். பார்வைக்கு அழகாகயிருக்கும். பசுக்கள், எருதுகள் விசேஷமாய் வெண்மை நிறமாக இருக்கும். டியிலே நிறமுள்ளது. பால் சுமாராகக் கறக்கும். திருச்சி ஜில்லா, பூவாளூர் முதலிய இடங்களிலுள்ள பசு, எருமை கறவைக்குப் பேர்போனது. தஞ்சை ஜில்லா மாடுகள் இவற்றில் விசேஷமானது. நோத்தூர் என்று சொல்லப்பட்ட ஊர் மாடுகளும் திருத்துறைப்பூண்டி தாலுக்காவிலுள்ளதும் வேதாரண்யம் பக்கங்களிலுள்ள காளை மாடுகள் பேர்போனது. விசேஷமாக கொம்புகள் தீய்க்கப்பட்டு மொட்டையாகயிருக்கும். சில கொம்புகள் தீய்க்கப்படாத மாடுகள் ஒரு சாணுக்கு மேற்படாத கொம்புகள் உள்ளனவாக இருக்கும். பூண்டி நாவாச்சியிலுள்ள எருமைகள் கறவைக்குப் பேர்போனது.

ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்டிரேலியா முதலிய தேசங்களிலுள்ள மாடுகள் கறவைக்குப் பேர்போனது.

அவைகள் இந்த தேசத்துக்குக் கொண்டுவரப்பட்டால் மற்ற தேசங்களைவிட இந்த தேசமானது உஷ்ணமானதால் அவ்விடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட மாடுகள் அதிக நாள் ஜீவித்திருப்பதில்லை.

### மாடுகள் வாங்கவேண்டிய காலங்கள்.

நக்ஷத்திரம்:—அசுவதி, கார்த்திகை, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், முப்பூரம் உத்தமம்.

திதிகள்:—அமாவாஸ்யை, பௌர்ணமி, அஷ்டமி, சதுர்த்தி, சதுர்த்தசி இத்திதிகள் கூடாது.

வாரங்கள்:—சனி, ஞாயறு, திங்கள், செய்வாய், வியாழன், இவ்வாரங்கள் உத்தமம்.

லெக்னம்:—மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், துலாம், விருச்சிகம், கும்பம், மீனம், உத்தமம்.

1. உத்திர மூன்றிலேனும், ஓணமா திரையிலேனும்
சித்திரை சுயத்தோடும் சிறந்த ரோகணி அனுஷத்தில்
கொத்துடன் கன்றுகாலி குறைவரக் கொள்வாராயின்
அத்தினஞ் செல்லச்செல்ல ஆண்டினில் மாண்டுபோமே.

2. மிருதாறு ராதா ரோஹிண்யாம், சுவாதி சித்திரா
அங்கஹீன யோஹேமா, ரேவதி சிரவண மூலாச்சா,
தஸ்கராணும் பயம் பவேத்.

3. புதன், வெள்ளி, இவ்விரண்டு வாரங்களிலும் மாடுகள் வாங்கவாவது விற்கவாவது கூடாது.

4. மாடுகள் விற்றால் மாடுகட்டப்பட்ட தும்பு, தலைக்கயிறு, சங்கலி முதலிய வற்றுடன் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுத்தால் மாடுகள் பிறகு சேரமாட்டாது. தானம் செய்யில், பசு எருதுகளை நன்றாய் அலங்கரித்து பாத்திரம் முதலிய வற்றுடன் தானம் செய்தல் வேண்டும்.



5. முதல் முதல் கன்று போட்டாலும் வாங்கப்பட்டதாயிருந்தாலும் பால்காய்ச்ச, தயிர்கடைய நாட்கள்:—

1. காலப்பிரகாசிகை, சந்திரனிருக்கும் லெக்னத்தில் தயிர்கடைய முளையடித்தால், பசுக்கள் விருத்தியாகி, பால் அதிகம் கறக்கும்.

2. சந்திரன் சரலெக்னத்தில் இருக்கும் போது புதிதாக தயிர் கடையில், பசு விர்த்தியாகி பால் நன்றாய்க் கறக்கும்.

3. ஞாயிற்றுக்கிழமை சூரியனிருக்கும் லக்னத்தில் சனி செவ்வாயம்சத்தில் உதையகாலத்தில் ரேவதி நக்ஷத்திரம் இருக்கும்போது தயிர்கடையில் பசு விர்த்தியாகும்.

4. வெள்ளிக்கிழமையில் கேட்டை நக்ஷத்திரம் அல்லது மிருகசீர்ஷ நக்ஷத்திரம் சேரும் நாளில் புதிதாக நெய் உருக்கினால் பசுக்கள் விருத்தியாகி நன்றாய் கறக்கும்

5. திங்கள்கிழமை விசாக நக்ஷத்திரங்கூடிய நாளில் நெய் உருக்கில் பசுக்கள் விருத்தியாகும்.

மாடுகளின் உபயோகம்:—மாடு எனப் பொதுப் பெயர். அதில் பசு, எருமை என இரண்டு விதமாகப் பிரிக் கப்பட்டிருக்கிறது. பசு இனத்தில் ஆண் மாட்டுக்கு எருது அல்லது காளை என்றும், பெண் மாட்டுக்கு பசு என் றும், எருமையினத்தில் ஆண் மாட்டுக்குகடா என்றும், பெண் மாட்டுக்கு எருமையென்றும், பசு எருமைகளில் கன்று போடாததும், கன்று போடப்பட்ட இளம்பிராய முள்ள மாடுகளுக்கு கிடாரி என்றும், பசுவின் இளங்கன்று களுக்கு சேங்கன்று என்றும் அநேக விதமான பெயர்கள் உள.

1. பசுவானது பால் கொடுக்கிறது. அப்பாலானது அமிர்தத்துக்கு சமமாய் குழந்தைகள் ஜனித்தது முதல் மரண பரியந்தம் திரேகத்தை வளர்க்கக்கூடிய சக்தி க்ஷீரத்துக்கு இருப்பதால் அதற்கு அமிர்தம் என்று சொல்லப்படும். பசுவினிடமாக உண்டாக்கப்பட்ட பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், கோரோசனை முதலிய வஸ்துக்களும் சுவாமி அபிஷேக, நைவேத்தியம்; யக்ஞ, யாக கர்மாக்கள், பிதுர் காரியங்கள், ஔஷதங்களுக்கும், பஞ்சகவ்விய திரவியங்களுக்கும், ஆலயங்களுக்கு தீபம் போடவும், வீடுகள் முதலியவைகள் சுத்திசெய்யவும், விபூதி செய்யவும், பயிர்களுக்கும், மரஞ்செடிகளுக்கும் எருவாக உபயோகப்படுகிறது.

2. விருஷபமென்று சொல்லப்பட்ட காளை மாடுகள் பாரவண்டி, சவாரி, கபிலை ஏற்றம், உழவு முதலியவற்றிற்கும், வண்டிகள் போகக்கூடாத இடங்களுக்கு பொதி மாடாகவும் உபயோகப்படுகிறது. நரித்தொம்பர் முதலிய சில பல தேசவாசிகள் தங்கள் சாமான்களை மாட்டின் பேரில் போட்டு ஓட்டி வருவதைக் காணலாம். பெரிய மாடுகள், பார வண்டி, சவாரி வண்டி முதலியவற்றிலும், நடுத்தரமான மாடுகளை சவாரி வண்டி, பாரவண்டி, உழவு முதலியவற்றிலும், கடைத்தரமான சிறிய மாடுகளை உழவுக்கும் உபயோகிக்கிறார்கள். கடா மாடுகளில் அதிகப் பெரியவற்றை பாரவண்டிகளுக்கு உபயோகிக்கிறார்கள். நடுத்தரமானவற்றையும், மிகச்சிறியவற்றையும், எருமைகளையும் உழவுக்கு உபயோகிக்கிறார்கள். எருமை மாடுகளில் கறவை மாட்டை உழவுக்கு உபயோகித்தால் பால் வற்றிப் போம்.



3. நல்ல லக்ஷணமுள்ள காளை மாடுகளையும், கடா மாடுகளையும், விதை யெடுக்காமலும், காயடிக்காமலும் வைத்திருந்தால் பொலி மாடுகளுக்கு உபயோகிக்கலாம். சுமார் 60 பசுக்களுக்கு ஒரு விருஷபம் வேண்டும்.

4. பசு எருதுகளில் அதிக அங்கமுள்ளது, அங்கக் குறைவானது, ஆணுமல்லாமல் பெண்ணுமல்லாமலிருப்பது, திரேகத்தில் விபூதிப்பை, நாக்கு முதலிய மாதிரியும், மற்ற உறுப்புகள் இரட்டையாக காணப்படுதல், இரட்டை கன்றுகள் போடப்பட்டதும், புலி, சிங்கம், யானை, பூனை குரங்கு முதலிய பலமாதிரி கன்றுகள் போடப்பட்ட பசுமாடுகளும், பசு ஞாயிற்றுக்கிழமையிலும், எருமை வெள்ளிக்கிழமையிலும் கன்றுகள் போடப்பட்டாலும், அப்படிப்பட்ட மாடுகள் குடும்பங்களிலிருந்தால் கெடுதல்கள் உண்டாகும். ஆகையால் அவற்றை ஆலயங்களுக்கு விட்டுவிடலாம். பெருமா மாட்டுக்காரர், நரித்தொம்பர் இவர்களிடம் விற்றுவிடலாம். அவர்கள் அம்மாட்டை வைத்துக்கொண்டு காப்பாற்றி வேடிக்கைகள் காட்டி பிச்சை வாங்கி ஜீவிப்பார்கள்.

குறிப்பு:—பாரமான சுமைகள் சுமந்து செல்லவும், வேலைகள் முதலியது செய்து ஜீவிக்கமுடியாதவர்களுக்கும், கௌரவமாக யிருந்துவரும் சில ஏழை ஜனங்களும், பெண்பிள்ளைகளும்கூட இரண்டொரு கறவை மாடுகளை வாங்கி அதை ஸம்ரக்ஷணை செய்து வைத்துக்கொண்டு, அதனால் கிடைக்கப்படும் பால் முதலியவற்றைக்கொண்டு ஜீவிப்பதுடன், அதன் கன்றுகளைக் காப்பாற்றி அதனாலும் பெருத்த லாபத்தையும் அடையலாம். புருஷர்கள் காளை மாடுகளை வாங்கி வண்டி முதலியவற்றாலும், உழவு முதலியவற்றைச் செய்து பயிர்த் தொழிலாலும் ஜீவிக்கலாம். உழவுத்தொழில் செய்து ஜீவிப்பவர்களுக்கு துர்பிக்ஷம் என்பது உண்டாகவேமாட்டாது.

5. பசுக்களைக் காப்பாற்றவேண்டிய விதங்களையும், காப்பாற்றி மேன்மை அடைந்தவர்களின் சரித்திரங்களையும், அவைகளைத் தானஞ்செய்வதால் உண்டாகும் பலன்களும் அடியில் கண்ட கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமஹா பாகவதம், பாரதம், இராமாயணம், சிவதருமோத்திரம், சிவமஹாபுராணம், சிவரகஸ்யம், காசிகண்டம், ஸகலாகமஸார ஸங்கிரகத்திலும், பெரிய புராணம், திருச்செங்கோட்டுப் புராணம், கருட புராணம், பிருஹத் ஸம்ஹிதை, சுக்கிர நீதி அர்த்த சாஸ்திரம், கபிலை வாசகம், திருவாரூர் புராணம், திருநெல்லூர், கோயில் கண்ணப்பூர் கோமுத்தீசுவரர் சதகம், தக்ஷிணகோகர்ண மஹாத்மியம், திருக்கருவூர், திரு ஆவடுதுறை, திருத்தண்டிட்டை, திருக்காவளம்பாடி, திரு ஆயப்பாடி, கோவிந்தப்புத்தூர், கோவிந்தபுரம், திருப்பதி, திருவானைக்காவல் இன்னும் அநேகம் ஸ்தல புராணங்களிலும் பசுக்களின் பெருமையைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தானம் முதலியவைகளைப்பற்றி வைத்திய சாஸ்திரம், ஜோதிட சாஸ்திரம் முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. பசுவின் குளம்பில் ஒட்டப்பட்ட தூசியை உத்தூளனமாகச் செய்துகொண்டால் சகல தீட்டும் போய் கங்கையில் ஸ்நானம் செய்த பலன் உண்டாகிறது என்று ஸகலாகம ஸங்கிரகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.



## 2-வது அத்தியாயம்.

1. பாரதம் அநுசாஸனி பருவத்தில் பிரும்ம சிருஷ்டி ஆரம்பகாலத்தில் பிரும்மாவானவர் சுரபி என்னும் பசுவையும், சூரியனையும் சிருஷ்டித்ததாகவும், அப்பொழுது சூரியனானவர் சுரபியைப்பார்த்து மோகித்ததை அறிந்த பிரும்மாவானவர் சூரியனைப் பார்த்து சுரபியைப் புணரும்படி ஆக்ஞாபிக்க, சுரபியின் கர்ப்பத்திலிருந்து ஏகாதச ருத்திரர் முதலிய சகலதேவதைகளும், பிறகு மனிதன், மிருகம், பக்ஷி, ஊர்வன, மரஞ்செடிகள் முதலிய சகல பதார்த்தங்களும் உண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சுரபியின் பாலைச் சாப்பிட்ட சகல தேவதைகளும் இறப்பு, பிறப்பு முதலியன இல்லாதவர்களாய் வரம் பெற்று இருக்கின்றார்கள். சுரபியின் சந்ததிகளாகிய பசுக்கள் நாற்பத்தொன்பதும், ஒரு விருஷபமும் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. பசுக்களின் சரீரத்தில் சகல புவனங்களும், அதிலிருக்கப்பட்ட சகல தேவதைகளும் வசிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. தேவதைகளுக்கு அரசனாக இந்திரனை நேமித்து அவருக்கு வேண்டிய சகல வஸ்துக்களையும் கேட்கும்போது கொடுக்கும்படி திருப்பார்கடலில் பிறந்த காமதேனு வென்ற ஒரு பசுவை இந்திரனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பசுக்களில் சிலாக்கியமானது கபிலநிறமானது.

4. பசுவின் பெயரைச்சொல்லி தியானிப்பவனும் பசுவைக் காப்பாற்றுபவனும் பசுவை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தவனும் சகலமான துர்பிக்ஷங்களினின் றும் விடுவிக்கப்படுவான்.

5. ராத்திரி நித்திரைசெய்யும் காலத்தில் துர்சொப் பனங்கள் கண்டால், உடனே பசுக்களின் பெயரைச் சொல்லித் தியானம் பண்ணினால் சகலமான கெடுதிகளி னின்றும் விடுவிக்கப்படுவான்.

6. கோமதி, என்ற மந்திரத்தைத் தினந்தோறும் ஜபித்து பசுக்களைத் தியானித்து சகலமான சித்தியை யடைந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

7. பசுக்களையும் பிராமணர்களையும் இம்சை செய்த வர்கள் தேவர்களானாலும் அவர்களுக்கு க்ஷேமக்குறைவு ஏற்படும். அவர்கள் செய்யக்கோரும் எந்தக்காரியங் களும் கைகூடமாட்டாது.

8. தினம் ஒருபிடி புல்லை, ஒரு பசுவுக்கு கொடுத்து உபசரித்து வருவார்களானால் சகலமான பாபங்களி னின்று விடுவிக்கப்படுவதுடன், சகல செல்வத்தையும் அடைவார்கள்.

9. பசுக்கள் தாகத்திற்குத் தண்ணீர் குடிக்க தண் ணீர்த் தொட்டி, குளம் முதலியவைகள் ஏற்படுத்தப்பட்ட வர்கள், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நா னம் செய்த பலன்களையும், புத்திரபாக்கியங்களைப்பெற்று புண்ணிய பூமியில் சகல சம்பத்துடனும் வெகுகாலம் வாழ்ந்திருப்பார்கள்.

10. மாடுகளின் மந்தைகளில் தினவுக்கு உரைந்து கொள்ளும்படி கருங்கற்களை நட்டுவைப்பவர்கள், அவர்





களும், அவர்களுடைய சந்ததிகளின் இருபதோரு தலைமுறை வரையிலுள்ளவர்களும் புண்ணிய பூமியில் வசிப்பார்கள். தேகத்தில் படை என்னும் நோயுள்ளவர் கள் மேல்கண்ட விதமாக கற்கள் நடுவார்களாகில் அந்த வியாதி நீங்கிவிடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

11. நல்ல லக்ஷணமுள்ள ரிஷபத்தை, பொலி காளை களுக்கு வாங்கி விடுவாரானால் நபும்ஸகத்துவம் நீங்கி, பும் ஸத்துவம் உண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

12. பசுக்களை வாங்கி அதைக் காப்பாற்றி அதன் பாலைக் கறந்து சிவ முகூர்த்தங்களுக்கும், விஷ்ணு முகூர்த் தங்களுக்கும் அபிஷேகம் செய்யக்கொடுப்பவர்கள் ஸகல பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, கைலாசத்திலும், வைகுண்டத்திலும் வெகு காலம் வசிப்பார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

காசிகாண்டம் தேவர்கள் பிரும்மலோகம் காண் படத்தில், உபயோதோ முகி என்று சொல்லப்படும் இரு பக்கம் தலை உடையதாகிய பசுவானது கன்று போடும் சமயத்தில் அப்பசுவை தானம் செய்தால் அவர்கள் சகல பாபங்களினின்றும் நீங்கி சொர்க்கத்தை அடைவார்கள்.

13. பசுவை தினந்தோறும் குளிப்பாட்டி மஞ்சள், குங்குமம், சந்தனம் முதலியவைகளைச் சாற்றி, புஷ்பங் களால் அர்ச்சித்து, ஆகாரம் முதலியனவைகளைக்கொடுத்து காப்பாற்றி வருவார்களாகில் அவர்கள் பூமியில் ஜனித்த நாள் முதலாக ஒரு புண்ணியமும் செய்யாத உலுத்தனாக இருந்தாலும், கருமியாக இருந்தாலும், பொய், திருட்டு முதலிய துற்செய்கைகள் செய்யப்பட்டவனாக இருந்தா

னாய், அப்படிப்பட்ட பாவங்களினின்று நீங்கிப் புண்ணிய லோகத்தை அடைவார்கள். ஒரு வருஷகாலம் தினந்தோறும் காலையில் எழுந்திருந்து தன்னுடைய கர்மாக்களையெல்லாம் முடித்துக்கொண்டு கோ பூஜை செய்து கோ விரதமிருந்து கோமதி என்ற மந்திரத்தை ஜபித்துக்கொண்டு ஆசை கோபம் இல்லாதவனாகவும், சத்தியம் பொறுமையுடையவனாக இருப்பானாகில் ஆயிரம் கோதானம் செய்த பலனை அடைவானென்று பிரும்மாவினால் இந்திரனுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

14. ஒருவன் தினம் சாப்பிடுவதின்முன் தனக்கு வைக்கப்பட்ட அன்னத்தில் ஒரு பிடி அன்னம் பசுவுக்கு கொடுத்து பிறகு சாப்பிட்டால் பத்து கோக்களை தானம் செய்த பலனை அடைவான்.

## கோதானத்தின் பெருமை.

15. நல்ல சாதுவான தலையீற்றுப் பசுவை கன்றுடனும், பால் பாத்திரத்துடனும், ஆகாரத்திற்கு புற்கள் பயிராகக்கூடிய பூமிகளுடனும், தானஞ்செய்வார்களாகில் புண்ணிய பூமியில் சந்தான சம்பத்துகளுடனும் பந்து மித்திரர்களுடன் வாழ்வார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

16. பசுவைத் தானம் செய்யப்பட்டவர்கள் சகல பாவங்களினின்றும் சகல ரோகங்களினின்றும் விடுவிக்கப்பட்டு சூரிய லோகத்தை அடைவார்கள்.

17. இரண்டு விருஷபங்கள் கட்டப்பட்ட வண்டியுடன் தானம் செய்தால், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலனை அடைவார்கள்.



18. நல்ல லட்சணமுள்ள விருஷபங்களை விதிப்படி தானம் செய்வாராகில், நான்கு வேதங்களையும் அறியத் திறமையுண்டாகும்.

19. பசு, விருஷபம் இரண்டையும் ஜோடியாக தானம் செய்பவன் சகல சம்பத்தையும் அடைவான்.

20. பசு லோகம் என்று ஒரு உலகம் மற்ற உலகங்களுக்கு மேலாக இருப்பதாக வசிஷ்ட மகரிஷியால் சொல்லப்பட்டிருக்கிறது. காசி காண்டம் தேவர்கள் பிரும்மலோகம் காண் படலம் 29-வது பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

21. கன்றுபோட்ட தலையீந்துக் கறவைப் பசுவைக் கன்றுடன் தானம் செய்தால், இந்திர லோகத்தை அடைவான்.

22. கருப்பு நிறமுள்ள கறவைப் பசுவை கன்றுடன் தானம் செய்வானாகில், அக்னி லோகத்தை அடைவான்.

23. புகை நிறமுள்ள கறவைப் பசுவைக் கன்றுடன் தானம் செய்பவன் சுவர்க்கலோகத்தை அடைவான்.

24. தண்ணீர் நுரை போன்ற நிறமுள்ள பசுவை தானம்செய்தால் வருணனுடைய உலகத்தை அடைவான்.

25. தூசியின் நிறம் போன்ற கறவைப் பசுவைக் கன்றுடன் தானம் செய்தால், வாயுவின் உலகத்தை அடைகிறான்.

26. பொன்நிறமுள்ள கறவைப் பசுவைக் கன்றுடனும் வெங்கலப் பாத்திரத்துடனும் வஸ்திரங்களுடனும் தானம் செய்தால் குபேரனுடைய உலகத்தை அடைகிறான்.

27. வைக்கோல் நிறமுள்ள காளைப் பசுவைக் கன்றுடனும் வெங்கலப் பாத்திரத்துடனும் தானம் செய்தவன் பிதுர் உலகத்தை அடைவார்.

28. வெண்மை நிறமுள்ளதாய், பருத்த தேகமுள்ளதாய், அங்கதாடைகளுள்ளதும் லக்ஷணமுள்ளதுமான தலையீத்தப் பசுவைக் கன்றுடனும், பால் பாத்திரத்துடனும் தானம் செய்பவன் விசுவேதேவர் உலகத்தை அடைகிறான்.

29. பசுமை நிறமுள்ள தலையீத்தப் பசுவைக் கன்றுடன் தானஞ்செய்பவர், சந்திரர் உலகத்தை அடைகிறான்.

30. நல்ல லக்ஷணமுள்ளதாயும், சௌம்யமுள்ளதாயும், சூடு போடாததாயும், அழகிய கொம்புகள் உள்ளதாயும், விதை எடுக்கப்படாததாயுமுள்ள எருதை வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும் அலங்கரித்து, வேத விதிப்படி தானம் செய்வானாகில் இந்திர லோகத்தை அடைவான்.

31. நல்ல லக்ஷணமுள்ள கபிலப் பசுவைக் கன்றுடனும் பால் பாத்திரங்களுடனும் தானம் செய்தால் அப்பசுவின் தேகத்திலெவ்வளவு ரோமங்கள் இருக்கின்றனவோ ஒரு ரோமத்திற்கு ஒரு வருஷம் வீதம் அவ்வளவு வருஷ காலம் தேவலோகத்தில் தேவர்களால் பூஜிக்கப்படுவான்.

32. பசுக்களையும் பிராமணர்களையும் ஆபத்துக் காலத்தில் காப்பாற்றியவர்கள் ஆறு கோதானம் செய்த பலனை அடைவார்கள். தானம் செய்யப்பட்ட மாட்டினிடமாகக் கிடைக்கப்படும் பொருளைத் தானஞ் செய்தவர்கள் அடைந்தால் நரகத்தை அடைவார்கள். தானஞ் செய்யப்பட்ட பசுவை உடனே தானம் வாங்கப்பட்டவர்களுடன் சேர்ப்பிக்கவேண்டும்.



33. 10 பசுக்கள் உள்ளவர்களுக்கு துர்பிக்ஷமே கிடையாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

34. தண்ணீர் குடிக்கும் மாட்டையாவது, தண்ணீர் குடிக்கப் போகும் மாட்டையாவது தடுப்பவன் நரகத்தை அடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

35. வண்டி, உழவு முதலிய வேலைகள் செய்யப்படும் மாடுகளை சாட்டையினால் அடிக்கலாமே தவிர, தார் முதலியவைகளால் குத்தி இம்சிப்பவர்களும், அதிகப்பளுவான சுமைகளை சுமக்கும்படி செய்பவர்களும் கொடிய நரகத்தை அடைவார்கள். பசுக்கள் மேயும்படியான பூமியை தானம்செய்தவர்கள் அதைப்போல ஆயிரமடங்கு பூமியை அடைவதுடன் சகல காரியங்களிலும் ஜெயத்தை அடைவார்கள். முன் காலத்தில் அரசாண்ட அரசர்கள் காலத்திலும் இக்காலத்திலும் மாடுகளை இம்சிப்பவர்களை தண்டனம் செய்ய கெவர்மெண்டார் அதற்காக தனிமையாக உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

36. சியவனர் என்ற ஒரு மகரிஷி பகீரதி நதியின் முகத்துவாரத்தில் பன்னிரெண்டு வருஷகாலம் ஜலத்திற்குள் தபசு செய்து கொண்டிருந்தார். அப்பொழுது வலைஞர்கள் அவ்விடத்தில் வலைபோட்டு மீன் பிடிக்கும்பொழுது அதில் மகரிஷி அகப்பட்டார். வலைஞர்கள் கண்டு பயந்து நிற்க மகரிஷி அவர்களைப்பார்த்து நீங்கள் உங்கள் ஜாதித்தொழிலைச் செய்தீர்கள். அதனால் உங்களுக்கு யாதொரு பாதகமில்லை. நீங்கள் உங்கள் வலையில் அகப்பட்ட மீனைப்போல என்னை விற்று அதனால் நீங்கள் ஜீவியுங்கள் என்று சொல்ல, அக்காலத்தில் அந்நகரத்தை அரசாண்ட நகுஷ சக்கரவர்த்தியினிடம் நடந்த விருத்-

தாந்தங்களைத் தெரிவிக்க, அரசன் மகரிஷிக்காக அநேக திரவியங்களைத் தருவதாகச் சொன்னான். அதைக்கேட்ட மகரிஷி, லட்சியம் செய்யாமல் அத்திரவியங்கள் எனக்குப் பொரும்படியான விலை இல்லை என்று சொல்லவே, பிராமணர்களை வரவழைத்து விசாரித்தபோது, ஒரு மகரிஷிக்குப் பதிலாக ஒரு பசுவைக் கொடுக்கும்படி சொன்னார்கள். அதைக்கேட்ட மகரிஷி சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளவே சக்கிரவர்த்தி வலைஞர்களிடம் கொடுத்தார். வலைஞர்கள் அப்பசுவை தங்களால் காப்பாற்ற முடியாதென்று மகரிஷி இடமே திரும்பக் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

37. முன் ஒரு பிரளயகாலத்தில் ஸ்ரீலக்ஷ்மிதேவியானவள் தான் வசிப்பதற்கு பசுவினிடம் போய் அதன் தேகத்தில் வசிக்க ஓர் இடம் தரும்படி கேட்டபோது, பசுவானது லக்ஷ்மியைப் பார்த்து நீ ஓரிடத்தில் நிலையாக இருப்பவள் அல்ல; அதனால் என்னிடம் கொஞ்சகாலமிருந்து பிறகு மற்றோரிடம் போய்விடுவாய்; அதனால் உனக்கு இடம் கொடுக்கமுடியாது, அப்படி ஒருபோதும் பிரிவதில்லை என்று சத்தியம் செய்துகொடுப்பாயாகில் இடம் தருவதாகச்சொல்ல, ஸ்ரீலக்ஷ்மிதேவி பிரியாமலிருப்பதாகச் சத்தியம் செய்துகொடுத்ததின் பேரில், தன் இடையிலிருக்கும்படி இடம் கொடுத்ததாகவும், அந்த இடத்தில் லக்ஷ்மி வசிக்கிறாளென்று சொல்லப்படுகிறது.

38. சுமித்திரர் என்ற மகரிஷி கோக்கள் மேய்த்து காப்பாற்றியதனால் கோக்கள் சுமித்திரரை கோ, உலகத்திற்குக் கொண்டுபோனதாகச் சொல்லப்படுகிறது.



கோதானமானது மற்றதானங்களைவிட மேலானது என்பதாக பரமசிவனால் சொல்லப்பட்டிருக்கிறது. வைத்தியம், ஜோதிஷம் முதலிய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம், பசு, ரிஷபம், எருமைக்கிடா முதலியவைகளைத் தானம் செய்தால் அதிக கொடூரமான வியாதிகள் நிவர்த்தியாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

39. கிரகண புண்யகாலத்திலும், அர்த்தோதய மகோதய புண்ணிய காலங்களிலும் கோதானம் செய்தால் மூன்றுக்கு பதின்மடங்கான பலன் உண்டாகும்.

40. ஹரதத்த சிவாசாரியார், தன்னுடைய நெல் உலர்த்தி இருப்பதை, பசு தின்பதைப் பார்த்து அதற்கு தின்னும்படி குவித்துக்கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிருஷ்ணபகவான் நந்தகோகுலத்தில் கோபாலருடன் மாடுகள் மேய்த்துப் பின்னும் அநேக லீலைகள் செய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

41. பரத்வாஜ ஆச்சிரமத்தில் பரமசிவன் தபசு செய்துகொண்டிருக்கும்பொழுது, தரும தேவதைகள் ரிஷபரூபமாக வந்து தன்னை வாகனமாகவும், கொடியாகவும் ஏற்படுத்திக்கொள்ளவேணுமென்று ஈசுவரனை பிரதக்ஷணம், நமஸ்காரம் செய்து பிரார்த்திக்க அதன்பிரகாரம் கொடியாகவும், வாகனமாகவும் இருக்கும்படி அனுக்கிரகம் செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

42. சந்தானமில்லாதவர்கள் பசுவை தினந்தோறும் குளிப்பாட்டி சந்தனம், குங்குமம் முதலியவைகளால் அலங்கரித்து, புஷ்பங்களால் பூஜித்து புல் முதலிய ஆகாரங்கள் கொடுத்து தண்ணீர் காட்டி உபசரித்து, பிர

தண்டனை நமஸ்காரஞ்செய்து கிருஷ்ணபரமாத்மாவை த்யானித்து சந்தான கோபால மந்திரத்தை நாள் ஒன்றுக்கு 108 உரு விதம் ஜபித்து வருவார்களாகில் நல்ல தீர்காயுசுடைய புத்திரர்கள் பிறப்பார்கள்.

43. பசுவின் வெண்ணெய்யை நிசம் ஒரு களஞ்சி விதம் ஒரு பாத்திரத்தில் வைத்து சந்தான கோபால மந்திரத்தை ஜபித்து கிருஷ்ணபரமாத்மாவுக்கு நிவேதனம் செய்து கிருஷ்ணபரமாத்மாவை பிரார்த்தித்து அதைச் சாப்பிட்டு வருவார்களாகில் சந்தானம் உண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

44. அஷ்டமி தினத்தில் பசுவை விதிப்படி பூஜிப்பவர்கள் அகண்ட சாம்ராஜ்யத்தை அடைவார்கள்.

45. பசுக்களைக் காப்பாற்றியும், பசுவை தானம் செய்து முக்தியடைந்தவர்கள்:- சண்டிகேசுவர நாயனார் மனுக்கள், த்ருகன், பகிரதன், மாந்தாதா, முசுகுந்தன், பிரத்தியும்னன், வசுபூதன், ஸோமகன், புரூரவன், பரத சக்கிரவர்த்தி, சகரர், ஸ்ரீராமர், திலீபன், திருமூல நாயனார் இன்னும் அநேக மகான்களும் சகல காரியங்களிலும் ஜயமடைந்து மோக்ஷமடைந்ததாயும், சொல்லப்பட்டிருக்கிறது. பசுக்கள் விருத்தி அடைவதினால் லோகத்திற்கு க்ஷேமமுண்டாகும்பொருட்டு யாக, யக்ஞ, கர்மாக்கள் நிறைவேற்றி சகலதானியங்களும், உற்பத்தியாவதால் உலகம் க்ஷேமத்தை அடையுமென்றும் அப்படி உலகம் க்ஷேமத்தை அடைவதால் ராஜாக்களுக்கு செங்கோல் ஒழுங்காய நடைபெறுமென்பதை உத்தேசித்து முற்காலத்தில் அரசாண்டவர்கள் பசுநிரைகளை விருத்தி செய்யும்பொருட்டு ஒவ்வொரு கிராமங்களிலும் மாடுகள்



32

மேய்ப்பதற்கு இடமும், மாடுகள் நிறுத்திவைக்க சவுகரியமான பூமிகளையும் தீர்வை இல்லாமல் விட்டும், தண்ணீர் குடிக்க வசதியாகக் குளங்களையும் வெட்டி வைத்திருக்கிறார்கள். அப்படி விடப்பட்ட பூமிகளை தற்காலத்திலுள்ள மிராசுதார்கள் அதன் பயனை அறியாமல் மாடுகள் மேய்க்கவும், மந்தைகளுக்கு விடப்பட்ட பூமிகளையும் தண்ணீர் குடிக்க வெட்டிவைக்கப்பட்டிருக்கிற குளங்களையும் தூர்த்து சாகுபடி செய்துவிடுகிறார்கள். அநேக கிராமங்களில் மாடுகள் மேயவும், நிற்கவும், தண்ணீர் குடிக்க குளங்கள் இல்லாமல் போய்விட்டபடியால் மாடுகள் விருத்தி குறைவாகின்றன என்பதற்குச் சந்தேகமில்லை. பசுக்கள் விருத்திக்குறைவை அடைய அடைய உலகமும் விருத்திக்குறைவு அடைகிறது. இதற்கு உதாரணமாக தஞ்சை ஜில்லாவையே சொல்லலாம். திருநெல்வேலி, கடப்பை, கர்நூல், பல்லாரி, நெல்லூர், காங்கேயம் முதலிய அநேக இடங்களில் மாடுமேய்க்க சவுகரியமான பூமிகள் ஏற்படுத்திருக்கிறபடியாலும், ஏரி முதலிய நீர்நிலைகளிருப்பதாலும் புற்கள் வளர்க்கப்படுவதாலும் காடுகள் ஜாஸ்தியாக இருப்பதாலும், அவ்விடங்களிலுள்ள மாடுகள், உருவம், பருமன் முதலிய வளர்ச்சியுள்ளதாக இருக்கிறது. திருச்சி, தஞ்சாவூர், தென் ஆற்காடு முதலிய ஜில்லாக்களில், சில பாகங்களில் மாடுகள் மேய சவுகரியமான இடம் இல்லாதபடியால், இவ்விடங்களிலுள்ள மாடுகள் பார்வைக்கு உயரம், பருமன் முதலியவைகளில் குறைவாக காணப்படுகிறது. தஞ்சை ஜில்லாவில் நோக்நாருன்கிடை என்று சொல்லப்படுகிற மாடுகள் விசேஷமானது.

45 a. இந்த தேசத்திலுள்ள ஸ்ரீரங்கம் முதலிய அநேகம் க்ஷேத்திரங்களிலுள்ள தேவாலயங்களிலும், கும்பகோணம் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள் மடம், ஸ்ரீசிருங்கேரி மடம் ஸ்ரீபூரிஜகந்நாத மடத்திலும் நித்தியம் கோபூஜை செய்துவருவதைக் காணலாம்.

46. வேதம், ஆலயம், கோசம்ரக்ஷணை, தடாகம், நந்தவனம் முதலியவைகளை நன்றாய் காப்பாற்றி பாதுகாத்து, பரிபாலனம் செய்துவருவதால் உலகம் க்ஷேமத்தை அடையுமென்றும் அவைகளை நன்றாய் காப்பாற்றி விருத்திசெய்து வரப்பட்டவர்களும் அவர்களுடைய சந்ததிகளும் இகபர சுகத்தை அடைவார்களென்றும் வேதங்கள், ஆகம புராணங்கள் மூலமாயும், மகான்கள் மூலமாயும் தெரிந்து, முற்காலத்தில் அரசாண்ட அரசர்கள் அநேகம் தேவாலயங்கள் ஏற்படுத்தியும், கோக்களை சம்ரக்ஷித்தும், வேதபாடசாலைகள் ஏற்படுத்தியும், விருத்தி செய்து வந்தவைகள் நாளடைவில் உலோபத்தை அடைந்துவிடுவதை கண்ணுற்றவர்களும் இவ்விஷயங்கள் முக்கியமானதென்பதை நன்கறிந்தவர்களுமான சில இந்து கனவான்களும், நகரம் செட்டிமார்களும், சீரணமடைந்த ஒவ்வொரு க்ஷேத்திரங்களையும், திருப்பணி, தடாக பிரதிஷ்டை, பசுமடம், வேதம், நந்தவனம் முதலியவைகளை ஜீர்ண உத்தாரணம் செய்தும், பசுகாத்தல் என்னும் தொழிலை அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பசுமடங்களிலுள்ள பசுக்களை நன்றாய் காலகாலங்களில் தண்ணீர்காட்டி, குளிப்பாட்டி, மேய்த்து, அளவுப்பிரகாரம் தீனி முதலியவைகள் வைத்தும் அதி



னின்று கிடைக்கப்படுகிற பால் முதலிய திரவியங்களை காலாகாலங்களில் ஈசுவர அபிஷேகம் முதலியவற்றிற்கு கொடுத்துவரும்படிக்கும் தக்க ஆசாமிகளை நியமித்து வைத்திருப்பதனால் பசுகாத்தல் என்னும் விஷயத்தில் குறைவில்லாமலும், ஈசுவர கைங்கரியத்துக்குப் பாத்திரனாவதுடன், பசுகாத்தல் விஷயமாய் அவர்கள் அதிகமாய் கவனிப்பதால், கன்றுகள் முதலியவைகளால் முதலில் வைக்கப்பட்ட மூலதனத்துக்கு குறைவில்லாமல் இருந்து வருவதைக் காணலாம். நம் நாட்டில் அவ்விதமான வழக்கமில்லாமல் கறக்கும்வரையில் பாலை ஒட்டக்கறந்து, கன்றுகளையும் விருத்திக்கு வராமல்செய்து, மாடு கறவை நின்றபிறகு சரியானபடி மேய்ச்சல், ஆகாரம் முதலியவற்றால் காக்கப்படாமலும் எஜமான் கண்பார்வை இல்லாமலும் அநேக குடும்பங்களில் மாடுகளால் நஷ்டமாய் வருவதைத் தங்கள் குற்றமென்று உணராமல், மாட்டுக்கும், தங்களுக்கும் ராசியில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் நன்றாய் கவனித்து காப்பாற்றி வருவாராகில் பெருத்த லாபத்தை அடைவதன்றி இம்மையிலும், மறுமையிலும் நற்பயனை அடைவார்கள்.

## திலீப மகாராஜாவின் சரித்திரம்.

வைவஸ்வத மனுவின் சந்ததிகளில் ஒருவரான, திலீபமகாராஜா வானவர் தேவலோகத்தில் தேவாஸுர யுத்தம் நடந்த காலத்தில் தேவதைகளுக்கு சாதகமாய் போய் அசுரர்களை ஜயித்து தேவலோகத்திலிருக்கும் போது, தன்னுடைய பத்தினிக்கு பிரசவகாலமான தால் அதன் ஸ்நான தினத்தில் தன் பத்தினியைச்சேர

வேணுமென்றும், அவசியினால் தன்னுடைய இராச்சியத்
திற்குத் திரும்பி வரும்போது வழியில் படுத்திருந்த காம
தேனுவை பிரதக்ஷிண நமஸ்காரம் செய்யாமல் போய்
விட்டார். அதைக்கண்ட காமதேனுவானது, திலீபன்
எதைக் கோரினாலும் அனுகூலப்படாமல் போகக்கடவது
என்று சபித்துவிட்டது. திலீபன் தன் ராஜ்ஜியத்துக்கு
வந்து வெகுகாலம் வரையில், புத்திரன் இல்லாமையைக்
கண்டு, தன் குலகுருவாகிய வசிஷ்டரிடம் சென்று
தனக்கு புத்திரன் இல்லாத காரணம் என்னவென்று
கேட்க, மகரிஷியானவர் ஞான திருஷ்டியினால் பார்த்து
தேவலோகத்திலிருந்து வரும்போது எதிரில் படுத்திருந்த
காமதேனுவை நமஸ்கரிக்காத தோஷத்தினால்—காமதேனு
வின் சாபத்தால் உனக்கு சந்ததி இல்லாமல் போய்விட்
டது என்று சொன்னார். அதற்கு நீயும், உன் மனைவி
சுதக்ஷிணையும் 21 நாள் விரதமிருந்து பூஜை செய்து
பிரார்த்தித்தால் உனக்கு சந்ததி உண்டாகுமென்று
சொல்ல, திலீபன் அதன்படி நடப்பதாகச் சொன்ன
போது, வசிஷ்ட மகரிஷியானவர் காமதேனுவானது,
இச்சமயம் வருணன் பாதாள லோகத்தில் யாகம் செய்
வதால், அங்கு போயிருக்கிறது. அதை இப்பொழுது
பார்க்க முடியாததால், அதன் புத்திரியாகிய நந்தினி என்
னும் பசு என்னிடம் இருக்கிறது. அதை உபாசித்தா
லும் காமதேனுவை பூஜிப்பதற்கு சமானமாகும். ஆகை
யால் நீயும் உன் பத்தினியும் காலையில் எழுந்து ஸ்நானம்
செய்து நந்தினியை பூஜித்து அதன் கன்றை அதனிடம்
ஊட்டவிட்டு, பிறகு அதை காட்டிற்கு ஓட்டிக்கொண்டு
போகவேண்டும். அதை அதட்டவாவது, அடிக்கவாவது



கூடாது; பிறகு மாலையில் திரும்பி வரும்பொழுது அதன்
பின்னே தொடர்ந்து வரவேண்டும். உன் பத்தினி எதிர்
கொண்டு நமஸ்காரம் செய்து அழைத்து வரவேண்டும்.
பிறகு அதனுடைய இடத்தில் கட்டி, அதற்கு குங்குமம்
மஞ்சள், புஷ்பம் முதலியவைகளால் அலங்கரித்து அதை
பூஜிக்கவேண்டும். இவ்விதம் 21 நாள் பூஜித்தால் சந்ததி
உண்டாகுமென்று சொன்னார். மேற் சொன்னவிதம் 20
நாளும் செய்து 21ம் நாள் காலையில் வழக்கம்போல் திலீ
பன் காட்டிற்கு ஓட்டிக்கொண்டு போனான். நந்தினியா
னது திலீபனை பரிசோதனை செய்யும்பொருட்டு சிவகணங்
களில், ஒருவரான கும்போதரனை அனுப்பிற்று. அதானது
சிம்ம ரூபமாக பசுவின் முதுகின்மேல் உட்கார்ந்து
கொண்டு, அதை புசிக்கப் போவதாய்ச்சொல்லிற்று. திலீ
பன் அந்த சிம்மத்தைப் பார்த்து பசுவை விட்டுவிடும்படி
சொன்னான். ஆனால் சிம்மமானது பசுவையே புசிப்பதாக
சொன்னது. திலீபன் கையிலிருந்த வில்லில் பாணத்தைப்
பூட்டி பாணப்பிரயோகம் செய்ய ஆரம்பித்தவுடன்,
சித்திரப் பாவைப்போல், கைபிடித்த பிரகாரமே நின்று
விட்டான். அநேக விதமாய் சிம்மத்தை நோக்கி, தன்னை
ஆகாரமாக்கிக்கொண்டு, தன் குருவின் பசுவை விட்டு
விடும்படி பிரார்த்தித்ததைக் கண்டு, சிம்மமானது அவனு
டைய மன உறுதியைக்கண்டு மறைந்துவிட்டது. உடனே
நந்தினியானது பிரத்தியக்ஷமாகி உன்னை பரிசோதிக்கும்
பொருட்டு, கும்போதரனை அனுப்பி பரிசோதித்தேன்.
உன்னுடைய ஸத்தியத்திற்கும் தபஸுக்கும் மெச்சு
கிறேன். நீ கோரியபடி என்னுடைய பாலைக் கறந்து, அதை
நீயும் உன் பத்தினியும் சாப்பிட்டால், உனக்கு சந்ததி
உண்டாகுமென்று சொல்ல, திலீபன் அதன் பாலைக்

கறந்து, பாலை என் குருவின் அனுமதியின்பேரில், அரசர்க்குரிய ஆறில் ஒரு பாகத்தை மாத்திரம் சாப்பிடுவேன் என்று சொல்லும் வார்த்தையைக் கேட்டு, அதன்பிரகாரம் நடக்கும்படி நந்தினியானது சொல்லிற்று. பிறகு திலீபனும் தன் குலகுருவினிடம் சென்று, நந்தினியின் பாலைக் கறந்து, அவருடைய அனுமதியின்படி தானும் தன் மனைவியும் சாப்பிட, அன்று முதல் கர்ப்பம் உண்டாகி, ரெகு மகாராஜா உண்டானதாக ரெகுவம்சத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இக்கதையினால் பசுவை பூஜிப்பதனால் உண்டாகும் பலனும், பசுவை அவமதித்ததினால் உண்டாகும் கெடுதியும், குருவாக்கின்படி நடந்ததனால் உண்டான நன்மையும், தன் உயிரைக் கொடுத்தாகிலும் பிறர் பொருளைக் காப்பாற்றுவதனால் ஏற்படும் கீர்த்தியும் நன்கு விளங்குகின்றது.

ஆத்திச்சூடி வெண்பாவில்:

அருளார் கபிலை அறமே ஐயமென்று
இருளகல வெவ்வினைக் கொல்லும்—பெருமையினால்
மாவளரும் புன்னை வனநாதர் மெய்த்தகையாய்
மேவி அறஞ்செய விரும்பு.—

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது

---



## 3-வது அத்தியாயம்.

### மாடுகளை காப்பாற்றவேண்டிய விதம்.

1. மாடுகள் கட்டப்படவேண்டிய இடங்கள் நல்ல காற்று வீசும்படியான இடமாயும், வெளிச்சமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

2. மாடுகள் கட்டப்படுமிடங்கள் சீமை செங்கற்களால் தளவரிசைபோட்டு மாடுகள் விடப்படும் மூத்திரங்கள் தங்காமல் வெளியில் போகும்படி சாலகம் கட்டிவிடவேண்டும். கடப்பைக்கல், சிமிட்டு முதலியவைகளால் தளவரிசைப் போடக்கூடாது. அப்படிப் போட்டால் மாடுகள் வழுக்கிவிழுந்து கால்கள் சேதப்படும். ஆனதால் அப்படிப்பட்டவைகளால் தளவரிசை போடக்கூடாது. கீத்து அல்லது பனை மட்டையினால் கூரை போடுவதுதான் நல்லது, நாட்டு ஓடு மத்திமம். கள்ளிக்கோட்டை ஓடு, தகரம் இதுகளினால் போடப்பட்ட கொட்டகைகள் அதிக உஷ்ணத்தை கொடுக்கும். காலை நேரத்தில் மாடுகளை கொட்டகைகளைவிட்டு வெளிப்படுத்தி சாணி முதலியவைகளை எடுத்து சுத்தம் செய்துவைக்கவேணும்.

3. மாடுகளுக்கு மடித்த வைக்கோல், அழுகின புல் முதலியவைகளைப் போடக்கூடாது.

4. மாட்டின்பேரில் சாணி, அழுக்கு முதலியவைகள் இல்லாமல் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். வயற்

களில் உழப்பட்ட மாடுகளை தினந்தோறும் தண்ணீரி லடித்து குளிப்பாட்டி சேறு முதலியது இல்லாமல் சுத் தமாயிருக்கவேண்டும். வண்டியில் பூட்டி வேலை செய் யப்பட்ட மாடுகளை தினந்தோறும் காலையில் வைக்கோலி னாலாவது அல்லது தேங்காய் நாரினால் செய்யப்பட்ட் டையினாலாவது தேய்த்து வண்டியில் கட்டவேண்டும். சாயந்திரம் வேலை நிறுத்தியபோது அவ்விதமாகவே நன் றாய் தேய்த்து நிழலி வைக்கவேண்டும். பிறகு தண்ணீர் காட்டி வைக்கோல் முதலியவைகள் போடவேண்டும். வாரம் ஒரு தடவையாவது தண்ணீரில் நன்றாய் தேய்த் தடித்து குளிப்பாட்டி அன்று தினம் வேலைகள் செய்யா மல் நிறுத்திவைப்பது நல்லது. மாடுகளை வெய்யிற்காலத் தில் காலை, மாலைகளில் ஒரு மணி நேரமாவது தண்ணீரில் நிறுத்திவைப்பது நல்லது. அதிக வெய்யிற்காலத்தில் மாடுகளை கடினமான வேலை செய்யச்செய்வது உசித மல்ல. அதனால் மாடுகளுக்கு வியாதிகள் ஏற்படும்.

5. மாடுகள் வேலைசெய்யும்போதும், கறக்கும்போ தும் தவிடு, புண்ணாக்கு, பருத்திக்கொட்டை, முதலியவை களை வைத்து பழக்கம்செய்துவிட்டு கறவை நின்றபிறகும், வேலைகளில்லாமலிருக்கும் பொழுதும், தீனியை நிறுத்தி விடுவதால், மாடுகள் இளைத்துப்போய் மறுபடியும் தீனி வைப்பதனாலும் ஒரே காலத்தில் அளவுக்குமிஞ்சி தீனியை வைத்தாலும், மாடுகளுக்கு செரியாக்குணம் என்னும் வியாதி உண்டாகி பலவித ரோகங்கள் உண்டாவதுடன் மரிக்க நேரிடும். மாடுகளுக்கு எப்போதும் ஒரே அளவாய் தீனி வைக்கவேண்டும்.



6. மாடுகளுக்கு வைக்கப்பட்டிருக்கிற தொட்டி களில் துர்நாற்றம், பூச்சி முதலியவைகள் உண்டாகாமல் சுத்தமாக வைக்கவேண்டும். உளுத்தம்நொய், பருப்பு, துவரை, கடலை முதலியவைகளின் தோல், தவிடு முதலிய வைகளையும், புளியங்கொட்டையும், புண்ணாக்கு முதலிய வைகளையும் போட்டுக் காட்டுவது நல்லது. வாரத்திற்கு ஒருதடவையாவது நன்றாய் சுத்தம் செய்வது நல்லது.

7. மாடுகளைக் கொட்டகையில் கட்டும்பொழுது வடக்கு அல்லது கிழக்கு முகமாகத்தான் கட்டவேண் டும். தெற்கு அல்லது மேற்கு முகமாகக் கட்டக்கூடாது. இரண்டு பக்கங்களிலும் கட்டினால் அதற்குதோஷமில்லை. பசு, எருதுகள், எருமைகிடா, கன்று இவைகளை தனித் தனியே கட்டவேண்டும். கறவை மாடுகளுக்கு எதிரில் எப்போதும் கன்றுகளைக் கட்டக்கூடாது. அப்படி கட்டப்படுவதினாலே சில பசுக்கள் கன்றைக் கண்ட வுடனே பாலை பொழிந்து கீழே போய்விடும். ஆதலால் தான் சமீபத்தில் கட்டக்கூடாது.

8. மாட்டுக்கொட்டில் அடியிற்கண்ட அளவாகக் கட்டலாம். நான்கு புறமும் சுவர் எடுத்துக் கட்டவேணு மானால் மனை சாஸ்திரத்தில் சொல்லப்பட்டபடி குழிக் கணக்காகவோ அங்குலக் கணக்காகவோ பொருதத் துக்கு தகுந்தபடி கட்டிக்கொள்ளலாம். ஆனால், கொட்டில் கள் கட்ட சோதிட சாத்திரங்களில் சொல்லியபடி நல்ல சுபமுகூர்த்தத்தில் செய்யவேணும்.

9. அகலம். 8, 10, 11, 16, 17, 20, 21, அடிகள் இருக்கலாம்.

36

நீளம். 8, 10, 11, 16, 17, 20, 21, 22, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 35, 36, 37, 39, 41, 42, 45, 52, 56; 60, 64, 66, 68, 72, 73, 75, 77, 79, 80, 84, 85, 88, 89, 90, 91, 92, 95, 97, 98, 99 அடி நீளம் வைக்கலாம். ஆனால் இந்த அடியானது மயனடி வைப்பது அல்லது. மயனடி என்பது 10 அடிக்கு இங்கிலீஷ் அங்குலம் 102 அல்லது எஜமானன் காலடியும் வைத்துக்கொள்ளலாம்.

10. மாட்டுக்கொட்டில், தான் இருக்கும் இடத்துக்கு வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு, மேற்கு இத்திசைகளில் இருப்பது சிலாக்கியமென சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

11. திருச்சிராப்பள்ளியிலுள்ள திருவானைக்காவல் என்னும் க்ஷேத்திரத்தில் அம்பாள் ஞானஸித்தி அடையும் பொருட்டு சுவாமியை பூஜித்ததாயும் சுவாமியால் கோபூஜை செய்தால் சர்வாபீஷ்டமும் ஸித்தியாகும் என்று உத்திரவானதாயும் அதன்படி அம்பாள் கோவை பூஜை செய்ததாக தினந்தோறும் உச்சிக்காலத்தில் சுவாமியை பூஜித்தவுடன் சுவாமி சந்நிதியில் கோபூஜை நடந்து வருகிறதைப் பார்க்கலாம்.

12. திருவாலவாய் என்று சொல்லப்பட்ட மதுரை க்ஷேத்திரத்தில் உச்சிக்காலத்தில் அம்பாள் பசுரூபமாக வந்து சுவாமியை பூஜிப்பதாக ஐதிகமாக நடந்துவருகிறது.

13. இந்தத்தேசத்தை அரசாண்ட சக்கரவர்த்திகளில் ஒருவரான பிருது என்பவர் அரசாண்டு வரும்காலத்தில் பஞ்சம் தாங்கமுடியாமல் ஜனங்கள் தவித்துக்கொண்டிருக்கிறகாலத்தில் பிருதுசக்கிரவர்த்தி பூமியை அழித்து



விடுவதாக உத்தேசித்து கையில் வில்லையெடுத்து பாணப் பிரயோகம் பண்ணும்போது பூமிதேவி பசுரூபமாகவும் சுவாயம்புமனு கன்றாகவும் வந்து அவதரித்து தன்னிடம் உண்டான பாலால் அத்தேசத்து பிரஜைகளை காப்பாற்றியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

14. 1400-வருஷங்களுக்குமுன் பூர்ணவர்மனென்னும் பௌத்த அரசன் மகததேசத்தை அரசாண்டுவந்த காலத்தில் கயாவிலிருந்த ஒரு அசுவத்த விருக்ஷத்தை சசாங்கன் என்பவன் வெட்டிவிட்டதாகக்கேள்விப்பட்டு ஆற்றமுடியாத துயரக்கடலில் ஆழ்ந்து பூமியில் கிடந்து புரண்டு அழுதுகொண்டிருக்கும்பொழுது இதற்கு என்ன செய்யலாமென பெரியோர்களை விசாரித்ததில் அவர்கள் ஏராளமான பசுவின் பாலை கறந்து அம்மரத்தடியில் ஊற்றினால் அது துளிர்த்துவிடுமென்று சொல்ல அந்தப்படியே உடனே தன் இராச்சியத்தில் உள்ள கறவை பசுக்களில் 1000-பசுக்களை ஓட்டிப்போய் அப்பசுக்களின் பாலை கறந்து வெட்டப்பட்ட மரத்தின்மேலில் ஊற்றினார்கள். மறுநாள் பார்க்கும்போது 7-அடி உயரம் அம்மரத்தின் வேரினின்று ஒரு போத்து உண்டாயிருந்தது. அவ்வரசன் அதைச்சுற்றிலும் 16-அடி உயரம் நாலுபக்கத்திலும் மதில் எழுப்பி அம்மரத்தைக் காப்பாற்றிவந்ததாக அபிதான சிந்தாமணியில் சொல்லப்பட்டிருக்கிறது.

15. தேவிபாகவதம் 2-வது ஸ்கந்தம் 3-வது அத்தியாயத்தில் அஷ்டவசுக்களில் ஒருவராகிய திரா என்பவர் நந்தினி என்னும் பசுவின்பாலைச் சாப்பிட்டதினால் பதினாயிரம் வருஷம் ஜீவித்திருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வசிஷ்டர் அந்தப்பசுவை பெருந்தனமாகக்

காப்பாற்றிப் பூஜித்து வந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

16. கோ தானம், பூ தானம், வித்தியாதானம், கன்னிகாதானம் இந்நான்கு தானங்களில் எந்த தானத்தை ஒருவர் தன்னால் இயன்ற அளவு செய்தாலும் அவர்கள் 101-தலைமுறைவரையிலும் உள்ளவர்கள் சுவர்க்கத்தில் வாசஞ்செய்வார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

17. மகா கொடிய பாவங்களைச் செய்தவர்களுக்கு சாஸ்திரங்களில் பிராயச்சித்தம் சொல்லப்படாவிட்டாலும், பசுவைக் காப்பாற்றுவதாலும், பசுவைப் பூஜிப்பதாலும், பசுவை தானஞ்செய்வதாலும், எப்படிப்பட்ட மகா பாதகங்களானாலும் போக்கடிக்கப்படுமென்றும் ஈசுவரரால் சிவமகாபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பசுவை தானஞ்செய்யும்போது கொம்புகளில் பொன்னாலும், குளம்புகளுக்கு வெள்ளியினாலும் பிருஷ்டத்தை தாமிரத்தினாலும், நேத்திரங்களை பவளத்தினாலும், கழுத்தில் ஆபரணங்களாலும், சர்வாங்கத்தையும் வஸ்திரங்களாலும் அலங்கரித்து பால் பாத்திரத்துடன் நல்ல லக்ஷணமுள்ளதாயும் கன்றுள்ள கறவைப்பசுவை தானஞ்செய்தல் உத்தம தானமாம்.

18. கன்றுக்கு பால்விடாமல் கறப்பவர்கள் அநேகங்காலம் கொடியநரகத்தில் உழன்று பிறகு அநேக ஜன்மங்கள் மனிதராய்ப்பிறந்து பசி, பிணி இவற்றால் தெருக்கள்தோறும் வாடித்திரிவார்கள். (சிவ.த.கோ. 171,172).

19. ஸ்ரீ கிருஷ்ணபகவான், தன்னுடைய இருப்பிடமாகிய துவாரகை 12-யோஜனை விஸ்தீரணமுள்ளது.



9 லக்ஷம் சுவர்ணமயமான அரண்மனைகளும் 16008 மனைவிகளும், ஒவ்வொருவருக்கும் 10-பிள்ளைகளும், ஒரு பெண்ணும் வீதம் 56-கோடி யாதவர்களுடனும், கணக்கிலடங்காத கோக்களுடனும், தான் வசிப்பதாக துவாரகா மாகாத்மியத்தில் சொல்லியிருக்கிறார்.

20. மகாசாந்தபனமென்னும் விரதம் 6-நாள் அனுஷ்டிக்கக்கூடியது. இதனால் சகலபாபங்களும் சகல ரோகங்களும் நிவர்த்திக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதல் நாள் கோசலம், 2-வது நாள் கோமயம், 3-வது நாள் பால், 4-வது நாள் தயிர், 5-வது நாள் நெய், 6-வது நாள் தர்ப்பையின் ஜலம் இவ்விதமாக அனுஷ்டிக்கவேண்டும்.

பசுவின் பெருமையை ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் சொல்லமுடியாது. ஆகையால் ஒவ்வொருவரும் பசுகாத்தல் விஷயமாய் எவ்வளவு செய்த போதிலும் அது விசேஷ பலத்தையே கொடுக்கும் என்பது ஸத்தியம்.

## மாடுகள் சினைப்படுவதன் குறியும் அதைக்காப்பாற்ற வேண்டிய விதமும்.

1. பசுக்களின், எருமைகளின் கன்றுகள் மூன்று வருஷங்களுக்கு மேற்பட்டபிறகும் சில கன்றுகள் போடப்பட்டு மறந்துப்போனபிறகு சினைப்பட மாடுகள் கத்தும். அப்படிப்பட்ட மாடுகளை நல்ல இலக்ஷணமுள்ளதும் மூன்று வருஷத்திற்கு மேற்பட்ட வயது வந்ததும் காயடிக்கப்படாததும், புஷ்டியுள்ளதுமான காளை மாடுகளையும் எருமை கிடாக்களையும் தயார் செய்து வைத்

யிருக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு காளைமாடுகளோ, கிடாமாடுகளோ புஷ்டியாக காப்பாற்றப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு கன்றுகளும் புஷ்டியாக இருக்கும். இதற்காகவே அநேகம் பெரிய பண்ணைகளில் பொலி காளை வளர்த்து வருகிறார்கள். கோதாவரி காங்கேயம், நெல்லூர், டில்லி, தஞ்சை இந்த ஊர் கன்றுகளை கவர்ன்மெண்டாரால் வைக்கப்பட்டிருக்கிற விவசாய பண்ணைகளிலும் பொலி காளைகளைத் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். சாதாரணமாய் ஐம்பது அறுபது பசுக்களுக்கு ஒரு பொலி காளைகளிருந்தால் போதுமானது. மூன்று வருஷத்திற்குமேல் ஒரு பொலி காளைகளை ஒரு பண்ணையில் வைக்கக்கூடாது. அப்படி வைப்பதால் அதற்கு பிறந்த கன்றுகளையே புணர்வதினால் உண்டாகும் கன்றுகளின் பலம், பால், வளர்ச்சி முதலியவைகளில் குறைந்துவிடும். ஆகையால் பொலி காளைகளை மாற்ற வேண்டும். அப்படி மாற்றப்படுவதினால் மாடுகள் நல்ல கன்றுகளை ஈனும்.

2. மாடுகள் சினைப்பட்டவுடன் வேறு மாடுகள் அதைத் தொடமாட்டாது.

3. வால்கள் கிடையின் நடுப்பக்கத்தில் நிற்காமல் ஒருபக்கம் ஒதுங்கி நிற்கும்.

4. பசுக்களின் கண்களில் மயிலைபாய்ந்து இருக்கும். சில சமயங்களில் பசுவின் கிடைகளில் வரு, மாதிரி தொங்கும்.

5. சினைப்பட்டவுடன் ஒருதடவை இளைப்படைந்து மறுபடியும் தேறிவரும்.

6. நாளடைவில் மடிகள் பெருத்து வரும்.



39

7. பாலைக் கறந்து பார்த்தால் சீயம் பாலைப்போல பிசுபிசுப்பாக இருக்கும்.

8. சினைப்பட்டபிறகு அதிகமாக முன்போல கத்த மாட்டாது.

9. கன்றுபோட ஒரு மாதத்திற்கு முந்தி பின் பக்கத்து தட்டுக்குச் சமீபத்திலுள்ள முண்டுகள் கிடை, தொப்புள் இவைகள் தளரும்.

10. கன்றுபோட ஒருவாரம், இரண்டுவாரத்திற்கு முந்தியே பால்மடி தளரும். தொப்புள்க்கொடி சுறந்து வரும். நீர் அதிகமாக விடும். வயறும் மற்ற பாகங்களும் கொஞ்சம் சொடிந்து காட்டும். இப்படிக் காணப்பட்டவுடன் மாட்டை ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வர வேண்டும்.

11. மாடுகள் சினைப்பட்டதாகத் தெரிந்த பிறகு கண்டபடி அடித்தல், பயமுறுத்தல், ஆகாரம் முதலியவைகளைச்சரியாகப் போடாமலும் தண்ணீர் காட்டாமலும் இருப்பதனாலும் பல மாடுகளுடன் சேர்த்து மேய்ப்பதினாலும் அம்மந்தையிலுள்ள இளங் கன்றுகளும் காயடிப்பதில் நன்றாய் அடிபடாமலும் ஒதுங்கி இருக்கப்பட்ட காளைகளும் அம்மாடுகளின்மேல் விழுந்து கன்றுகளை முறித்துவிடும். சினை மாடுகள் ஆகாரம் முதலியவைகளால் நன்றாய் காப்பாற்றப்படாவிட்டால் கன்றுகளும் திறமையாயிருக்கமாட்டாது. கன்றுகள் போடவும் மிகவும் கஷ்டப்படும். ஆகையால் நன்றாய்க் காப்பாற்ற வேண்டும். சினைப்பட்ட மாடுகளுக்கு தேங்காய் கொட்டாங்கச்சியைச் சுட்டு கழுத்தில் கட்டப்பட்டால் மனிதர்

களின் பார்வையில் ஏற்படும் திருஷ்டி, தோஷம் நீங்கி விடும்.

12. சில மெலிந்துபோன மாடுகளுக்கு இரண்டொரு மாதத்திற்கு முன்பே படுக்கும்பொழுது கர்ப்பப் பையின் ஒரு பாகம் வெளிப்படும். பிறகு எழுந்தவுடன் முன்போலவே உள்ளே போய்விடும். அதனால் மாடுகள் அதிக சிரமப்படும். கெர்ப்பமாய் இருக்கும்பொழுது ஆகாரங்களை மிதமாக வைத்தால் கெடுதி உண்டாகாது. அப்படி மிதமின்றி வைத்தாலும் ஆகாரமில்லாமல் மெலிவடைவதாலும் கெடுதி உண்டாகும்.

13. மாடுகள் கன்றுபோட்டவுடன் கன்றின் குளம்பு பாகத்தில் வெண்மையாயுள்ள இளம் குளம்பை சமனாக நறுக்கிவிடவேண்டும். காளைக்கன்றுகளாக இருப்பின் கொண்டையை கொஞ்சம் தூக்கி அமுக்கி பிடிப்பதனால் கொண்டை அழகாக இருக்கும். கன்றுகளை நன்றாய் குளிப்பாட்டி, மாடுகள் நஞ்சுபோடும் வரையில் ஜாக்கிரதையாக மாடு நஞ்சைத்தின்னாமல் பாதுகாக்கவேண்டும். மாடுகள் கன்று போட்டவுடன் (1) இரண்டு படி நெல்லை கன்றுபோட்ட மாடுகளுக்கு ஒன்று இரண்டாக குத்தி உமியுடன் ஒரு சேர் பனைவெல்லத்தை கலந்து வைப்பது. (2) இரண்டு சேர் பருத்திக் கொட்டையை வைக்கலாம். (3) மூங்கில் தழை, காவல் புல், வெண்டைக்காய் இவைகளில் எதையாவது ஒன்றை மாடுகளுக்கு போட்டால் அதைத் தின்றவுடனே நஞ்சு போடும். அப்படி நஞ்சுபோட்டவுடன் அந்த நஞ்சை ஒரு வைக்கோல் சுருணையில் வைத்துக்கட்டி கள்ளியிலாவது அல்லது பால்மரங்களிலாவது கட்டினால் பால் நன்றாய்



சுரக்குமென்று தொன்றுதொட்டு நடத்திவருகிறார்கள். கன்றுபோட்டமாட்டை சுத்தமாய்தேய்த்து குளிப்பாட்ட வேண்டும். குளிப்பாட்டியவுடன் இடையில் மஞ்சளும் நல்லெண்ணெயும் பூசுவது நல்லது. அதனால் புண்களை ஆற்றிவிடும். கன்றுகளை மாட்டினிடம் ஊட்டி பழக்கி வரவேண்டும். பசுவின் கன்றுக்கு பால் அதிகமாக விடப்படுவதினால் கன்றுகள் சேதமடையாது. ஆனால் மனிதர்கள் கைவைத்து பழக்கி வரவேண்டும். அப்படி செய்யாவிட்டால் பால் கறக்க இடம் கொடுக்காது. அத்துடன் இல்லாமல் பாலும் வற்றிவிடும். எருமைகளுக்கும் மேற்சொன்ன விதமாக செய்யவேண்டும். எருமைப் பாலில் வெண்ணெய் சத்து அதிகமானபடியால் கன்றுகளுக்கு அதிக பால் விட்டால் கன்றுகளுக்கு அஜீரண நோய் உண்டாகி கன்றுகள் இறந்துவிடும். கன்றுகள் புல் பிடித்து மேயும்வரையில் மண்ணைத் தின்னும் பழக்கம் ஏற்படுவதால் மண்ணைத் தின்று கழிந்து இறந்துவிடும். ஆகையால் மண்ணைத் தின்னாமலும் வாயை புட்டிபோட்டு காப்பாற்றி வரவேண்டும்.

14. பசுமாடுகள் சினையாயிருப்பதை அடித்து கன்றுகள் வயிற்றில் மரித்துப்போனால் அக்கன்றுகளைத் தக்க வைத்தியர்களைக்கொண்டு வெளிப்படுத்தி அம்மாட்டிற்கு கோழிக்குஞ்சை துவைத்து அத்துடன் கால்சேர் சாராயத்தையும் கலந்து உள்ளுக்கு மூன்று பொழுது கொடுக்கவும். கெடையில் ஈ மொய்க்காமல் வேப்பெண்ணெய்யைத் தடவுவதுடன் காய்ச்சி ஒத்தடம்கொடுக்கவும் வேண்டும். நொய்யைப்போட்டு கஞ்சி தண்ணீர் காட்டக்கூடாது. காய்ச்சி தண்ணீர் காட்டவும்.

கன்றுகளின் தொப்புள் கொடியை அது காயும் வரையில் துணியினால் மறைத்துக் கட்டிக்காத்து வர வேண்டும். இளங் கன்றுகளாயிருக்கும்போது மாடுகளுக்கு தவிடு வைக்கக்கூடாது. கன்றுபோட்ட பத்து நாள் வரையில் அப்பாலை உபயோகிக்கக்கூடாது. ஆலயங்களுக்கு இரண்டு மாதத்திற்கு மேலும் விடைகளுக்கு பதினைந்து நாளுக்கு மேலும் உபயோகப்படுத்துவது நலம்.

கன்றுகளைப் பாதுகாக்கும் விஷயத்தில் ரொம்பவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கன்றுகள் மண் முதலியவைகளைத் தின்பதினாலும் பாலில் சத்துக்கள் அதிகமாயிருக்கும் பாலைக் குடிப்பதினாலும் காக்குப்பூச்சி, வயிற்றுப்போக்கு முதலியவை உண்டாகும். அதற்கு மாதத்திற்கொருதடவை ஒரு தந்தரிப்பிஞ்சை சுட்டுக் கொடுக்கவும்.

2. ஓமம், வேப்பல் கொழுந்து இவைகளையும் அரைத்து உள்ளுக்குக் கொடுத்து வரவேண்டும். (2) அரை ரூபாய் இடையுள்ள வேப்பெண்ணெய்யை வெண்ணீருடன் கலந்து கொடுக்கலாம். இன்னும் சில முறைகள் பின்னால் சொல்லப்படுகிறது.

15. மாடுகள் பலப்பட்டு 270 நாள் கழித்து கன்றுகள் போடும்.

சிலர் அபிப்பிராயப்படி 284, 300 நாட்களிலும் போடுவதுண்டு.

16. மாடுகள் 25 வருஷம் ஜீவித்திருக்குமென்றும், அதில் 4 வருஷத்திற்கு மேல் வேலை முதலியது செய்ய உபயோகமென்றும் 22 வயதிற்கு மேல் வேலைகள் செய்ய



சக்தியற்ற காலமென்றும், பாக்கி 18 வருஷ காலம் வேலை செய்யக்கூடிய காலமென்றும் சுக்கிர நீதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

பசுங்கிடாரி, எருமைக்கிடாரிகள் இரண்டு மூன்று வயதிற்குமேல்தான் சினைப்படும். பற்களைக்கொண்டு மாடுகளின் வயதை நிதானிக்கக்கூடும்.

கொம்பில் காணப்படும் வாய்ப்புகளைக்கொண்டு எத்தனை ஈற்று கன்றுபோட்டதென்று அறியலாம்.

17. சிலர் கிடாமாடுகளையும் காளை மாடுகளையும் வண்டியிலும் ஏரிலும் பூட்டி வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்வதால் காளை மாடுகள் சீக்கிரம் மெலிந்து போகின்றன. ஆதலால்தான் கிடாவும் காளையும் பிணைத்தாப்போல என்று சொல்லுகிறார்கள். அப்படி செய்தல் கூடாது.

18. உழவு வேலையோ வண்டி வேலையோ செய்யப்பட்டவர்கள் கூலி வேலைக்காரர்கள் அல்லாமல் சொந்தக்காரர்களாக இருப்பது நல்லது. அதனால் முதலுக்கு நஷ்டம் ஏற்படாது. பெரிய பண்ணைகளில் ஆட்களை வேலை செய்விக்கும் எஜமானர்கள் அல்லது காரியஸ்தர்களாவது அவசியம் உழவு செய்யப்பட்ட இடத்தில் கவனித்து வரவேண்டும். அப்படி இல்லாவிட்டால் ஆட்கள் தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளுக்குப் பதிலாக அதிகமாக உழவு முதலியவற்றைச் செய்தல், வெய்யில், மழை முதலியவற்றிலும் கடுமையாக வேலைகள் செய்தல், திறத்தி திறத்தி ஏரை ஓட்டுதல், நன்றாய் குளிப்பாட்டி மேய்த்து தீனி முதலியது போடாமல் மாட்டைக் கெடுத்து

விடுகிறார்கள். அதனால் சில பண்ணைகளில் விவசாய விஷயத்தில் நஷ்டம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நஷ்டம் ஏற்பட்டதற்கு இடங்கொடாமல் தங்களுக்கு முக்கிய ஆதாரமாகிய மாடுகளை தங்கள் குடும்பங்களைப் பாதுகாப்பதுபோல் காத்துவரவேண்டும்.

19. முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன :—

1. மாட்டுக்குச் சொந்தக்காரர்கள் காலை மாலையில் நேரில் ஒரு தரமாவது பார்வையிடவேண்டும்.

2. வேலைசெய்யும் மாடுகளையும் கறவை மாடுகளையும், வயதான மாடுகளையும், எருமைகளையும், நோய் கொண்ட மாடுகளையும் இளங் கன்றுகளையும் தனித்தனியே கட்டி அதற்குத் தீனிபோடவேண்டும்.

சி. வ. த. மோ. கோபு. 141, 142வது செய்யுள்.

கன்றினைக்களுந் தம்மொடு கட்டிக
மற்றிடங் குழக்கன்றுகள் வேறவு
முற்ற நோய்க கொண்டு மிடக்களு
முற்றுமா செய்க முற்ற முயற்சியால் 141

செய்க கொடிடஞ் சேர்மைய தாகவே
வெய்ய நோய்கள் விரவிடி லாக்கவைப்
பைய வக்க மருந்துகளைப் பார்த்தே
வைய நீர மருந்து மருந்திடே. 142

3. மாடுகள் தண்ணீர் குடிக்கத் தண்ணீர் தொட்டிகள் வசதியாக ஏற்படுத்தவேண்டும்.

4. ஞாயிறு, செவ்வாய், வெள்ளி இவ்வாரங்களில் மாட்டுக் கொட்டிலில் சாம்பிராணி தூபம் போடவேண்



டும். அப்படிச் செய்வதால் திருஷ்டி, தோஷம் நீங்கப் படுவதுடன், கொசு, ஈ, உண்ணி முதலியவைகளால் பிடிக்கப்படமாட்டாது.

சி. வ. தரு. கோ. 143, 144வது செய்யுள்.

உண்ணி வாய்தரு காற்றினை காணவே
பண்ணித் தோமயம் பற்றுக தீற்றிநற்
றண்ணி தாகவுஞ் சோதனை செய்தபி
னண்ணிடாமன் மசகமு ஈசொடு நம் 143

தூபந்தன்னை தூறைக்கத் தூலக்கவே
தீபந் தாருஞ் சிறக்கச் செறிக்கநற்
பூவினுற் றேவட வெகையும் பூட்டிக
கோவினைப் புரச் செய்க குறிப்பொடே. 144

5. அதிக மாடுகளில்லாமல் கொஞ்ச மாடுகள் உள்ளவர்கள் தங்கள் மாடுகளை ஊர் மாடுகளுடன் மேய்க்காமல் தனித் தனியாக மேய்ப்பது மிகவும் சிலாக்கியமானது. ஊர் மாடுகளுடன் சேர்த்து மேய்ப்பதால் உண்ணி, சென்று முதலியவை பிடித்து மாடுகளைப் பிடிக்கும் பல விதமான தொத்து வியாதிகளும் தொடரும். ஒன்று இரண்டு மேயக்கூடிய புற்களை பத்து மாடுகள் மேய்த்தால் மத்தியிலுள்ள ஒரு மாட்டிற்காவது வயிறு நிறையாட்டாது. மாடுகளுக்குப் போதுமான ஆகாரங்கள் போடாவிட்டால் கன்றுகள் போடப் பிரயாசப்படுவதுடன் கன்றுகளும் திரேக திடமுள்ளவைகளாக இருக்கமாட்டாது.

6. அதிக பாரமான சுமைகளை வண்டியில் ஏற்றி மாடுகளை வேலை வாங்குவதாலும், ஏற்றம் கபிலை முதலியவைகளில் கட்டி அதிகமாக வேலை செய்வதாலும், தேகம் மெலிந்து சீக்கிரத்தில் சாக நேரிடும். வேலை செய்ய சக்தி

யற்ற மாடுகளையும் மறுத்த மாடுகளையும், நோய்கொண்ட மாடுகளையும் காப்பாற்றாமலும், மேற்படி மாடுகளை அடிமாட்டுக்காரர்களிடம் விற்க உத்தேசிப்பவர்களும் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவார்கள். அப்படிக் காப்பாற்ற முடியாதவர்கள் செல்வ திரவியத்துடனும் காப்பாற்றும்படி காப்பாற்றக்கூடியவர்களிடம் விட்டுவிட வேண்டும்.

7. எந்த மனிதர்களும் மாடுகளை நன்றாய் கவனித்து காப்பாற்றி வருவார்களாகில் அவர்களுக்கு தரித்திரம் என்பது ஒருபோதும் கிடையாது. கோதனங்களால் ஐசுவரியமுண்டாகி குடும்பங்களும் சௌக்கியத்தை அடையுமென்பதற்கு சந்தேகமே இல்லை. எந்த இடங்களில் பசுக்கள் விருத்தியாக காணப்படுகிறதோ அவ்விடங்களில் உள்ளவர்களுக்கு தரித்திரமே உண்டாகமாட்டாது. ஆலயங்களில் பூஜை முடிந்தவுடன் பசுக்கள், பிராமணர், அரசர் மற்றும் உலகத்திலுள்ள ஜீவப்பிராணிகளும் சுகமாக வாழவேண்டுமென்று பிரார்த்திப்பது வழக்கமாயிருக்கிறது. ஒருவனுக்கு ஜன்மாந்தர பாக்கியத்தால் கிடைக்கக்கூடிய பொருள் நான்கு. அவையாவன:—

"ஞானபக்த ரூபேண பசுபதீ லோகாலயா"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் பசு மேலானது.

8. வருஷா வருஷம், தை அல்லது மாசி மாதங்களில் மாடுகளுக்கு மசாலை போடவேண்டும். வெய்யற்காலங்களில் முத்துச்சோளம், கம்பு இவைகளை மாவாக அரைத்து கூழ் காய்ச்சி வைப்பது ரொம்ப விசேஷமானது.



9. மாடுகள் கட்டப்பட்ட கொட்டகைகளில் மாதவிடாயான பெண்கள்* போகவும், பசுக்களைத் தீண்டவுங் கூடாது. தீண்டினால் பாபத்துக்குள்ளாகிறார்கள். பிரவேசிப்பதால் உண்ணி முதலியவைகள் உண்டாகி மாடுகளைப் பிடிக்கின்றன. பசுமாடுகள் கன்றுபோட்டு இரண்டு மாதம் வரையிலும் கன்றுகளுக்குப் பால் அதிகம் விடப்பட்டும் கறவை மறக்கும் சமயத்தில் மதார் பாலைக் குடிக்கும்படி விடப்பட்ட கன்றுகளும் தக்க பலமுள்ளவைகளாக இருக்கும்.

10. ஊர் மாடுகளில் வெக்கை முதலிய சீக்குகள் காணப்படுவதாய்த் தெரிந்தவுடன், வியாதி பரவாமலிருக்கும்பொருட்டு வெட்டர்னரி டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தருக்குத் தெரிவித்து, ஊரிலுள்ள மாடுகளுக்கு அம்மை குத்தப்பட்டால் அவைகள் நோயினால் பிடிக்கப்படமாட்டாது.

11. சரியான தீனி கிடைக்கக்கூடாத காலத்தில் சப்பாத்தியின் முட்களை எடுப்பதற்காக ஏற்படுத்தியிருக்கும் ஆயுதங்களால் எடுத்துவிட்டு அவைகளை போடலாம். கறவை மாடுகளுக்குப் போட்டால் பால் நன்றாய் கறக்கும். புளியங்கொட்டையை நன்றாய் ஊறவைத்து தவிட்டுடன் கலந்தும் வைக்கலாம். மேற்கண்ட விதமாய் உழவு மாடுகளுக்கும் வண்டி மாடுகளுக்கும் உபயோகிக்கலாம்.

12. மாடுகள் பால் அதிகம் கறக்கவேண்டுமானால் கடலை, பயறு, அரிசி, உளுந்து, கொள்ளு, கம்பு, சோளம், இவைகளில் எதையாவது மாவாக அரைத்து வைத்தாலும், கள்ளின் வண்டலை வைத்தாலும் நன்றாகக் கறக்கும்.

குறிப்பு:— ஐரோப்பிய வைத்தியர்கள் மூன்றும் சற்றுப் பசுவை முதுகைப் பிளந்து வயிற்றிலுள்ள கர்ப்பப்பையில் கர்ப்பம் தரியாமல் சிகிச்சை செய்துவிடுவார்கள். அதனால் அந்த மாடு கர்ப்பம் மறுபடியும் அடையாமல் எப்போதும் பால் கறந்துகொண்டிருக்கும்படி செய்கிறார்கள்.

மாடுகள் கட்டப்பட்ட முளைகளை அடிப்பு எறிக்கக்கூடாது. அப்படிச்செய்தால் மாடுகள் விருத்தியாகாது. கோவில்கன்ருப்பூர் என்னும் க்ஷேத்ரமாகாத்மியத்தில் ஈசுவரன் மாட்டு முளையினின்று தரிசனங்கொடுத்ததாக சொல்லப்பட்டிருக்கிறது.

13. பசுக்களின் வகை ஐந்து. அவை யாவன:— சுரபி, சுமனை, சுசீலை, நந்தை, சுபத்திரை.

பசுவின் பெயர்.

14. 1. குணமில்லாப் பசு—சுதை.
2. தலையீற்றுப்பசுவின் பெயர்—வத்ஸலை
3. பசுக்கூட்டத்தின் பெயர்—சாலி, காலேயம், கதம்பம்
4. பசு, காளை இரண்டிற்கும் பொதுப்பெயர்—ஆ, ஆன், குடஞ்சுட்டு, கோ.
5. பசுவின் பெயர்—ஆ, கபிலை, குரம், குரால், சுபம், பத்திரை.

---



# 4-வது அத்தியாயம்.

## மாட்டின் லட்சணம்.

(பிருகத்ஸம்ஹிதை சுக்கிரநீதி இவற்றில் உள்ளது).

1. பசுக்களையும் எருமைகளையும்பற்றி பிரகதருக்கு பராசரர் பிருகத்ஸம்ஹிதையில் சொல்லிய விஷயங்களை இங்கே சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

2. பசுக்களுடைய கண்கள் மங்கலாயும் கண்களில் நீர் வடிந்துகொண்டிருந்தாலும், கொம்புகள் அசைந்து கொண்டிருந்தாலும், காடு முரடாக இருந்தாலும், மாட்டின் நிறம் கழுதையின் நிறம்போலிருந்தாலும், பார்ப்பவர்களுக்கு அருவருப்பாக இருந்தாலும் துன்பத்தை உண்டுபண்ணும்.

3. பசு அல்லது எருதுகளுக்கு பத்து, அல்லது ஏழு, அல்லது நான்கு, அல்லது இரண்டே பற்கள் முளைக்கப்பட்டிருந்தாலும் எப்பொழுதும் தலை தொங்க விட்டுக்கொண்டிருந்தாலும், மயிர்கள் நன்றாய் முளைக்காமலிருந்தாலும், முதுகுமேலே வளைந்தாவது, இருந்தியாவது இருந்தாலும், கழுத்து குட்டையாக இருந்தாலும், உருவத்தில் வயிறு கோதுமைபோலிருந்தாலும், குளம்புகள் முறிந்திருந்தாலும் நாக்கு நீளமாயும், சிகப்பாயும் கருமையாயும் இருந்தாலும், முழங்கால் முண்டுகள் இல்லாததுபோலிருந்தாலும், முதுகில் பெரிய திமில்களிருந்தாலும், மெலிந்து பலஹீனமாயாவது அதிக அங்கமாகவாவதிருந்தாலும் துன்பத்தை உண்டுபண்ணும்.

5. எருதுகளுக்கு விதையானது பெரியதாகவும், தொங்கிக்கொண்டிருந்தாலும், மார்பானது சதைப்பிடிப்பினால், மூடப்பட்டிருந்தாலும் கன்னமானது பெரியதாகவும், காம்புகள் பெரியதாகவும் வெளியில் தெரியக்கூடியதாகவும் இருந்தாலும், துன்பத்தை உண்டுபண்ணும்.

6. கண்கள் பூனையின் கண்கள்போல் இருந்தாலும் தேகமுழுவதும் பழுப்பு நிறமாகயிருந்தாலும், சதைப்பற்று இல்லாமல் காடுமுரடாய் இருந்தாலும், உதடு, நாக்கு, கடைவாய் கருப்பாயிருந்தாலும், குறட்டைவிடுவதுபோல் பெருமூச்சுவிட்டாலும், பசு மந்தைகளில் சதா உபத்திரவம் செய்துகொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட மாடுகள் பிராமணர்களுக்கு யோக்யமல்ல.

7. எருதானது அதிகமாக சாணிபோட்டாலும், தேகமுழுவதும் கருப்பும் சிகப்பும் கலந்திருந்து அடிவயிறு மட்டிலும் வெளுப்பாகயிருந்தாலும், மான் வர்ணம்போலிருந்தாலும், சதா பசு மந்தைகளை உபத்திரவம் செய்தாலும், வீட்டில் வளர்ந்த மாடானாலும், நீக்கிவிடவேணும்.

8. எருதானது தேகமுழுமையும் கருப்பு அல்லது சாம்பல் நிறம் அல்லது சூரியன் போன்ற நிறமுள்ளதாக இருந்தாலும், கண்கள் பூனையின் கண்கள் போலிருந்தாலும் பிராமணர்களுக்கு உபயோகமானதல்ல.

9. எருது வேலை செய்யும்போது சேற்றிலிருந்து காலைத் தூக்கித் தூக்கி, வைப்பதுபோல் வைத்தாலும், கழுத்து மெல்லியதாகயிருந்தாலும், கண்கள் பயங்கரமாகயிருந்தாலும் அவைகளைத் தாழ்ந்த ஜாதி பிராணிகள் என்றே சொல்லவேண்டும். பளுவான சுமைகளை இழுக்காது. நன்றாய் வேலை செய்யாது.



10. எருதுகளுக்கு உதடு நெருக்கமாயும், மிருதுவாயும், சிகப்பாயும் இருந்தாலும், காதுகள் சிறியதாயும், எடுப்பாகவும், வயிறுகள் அதிக பருமனில்லாமலும் அதிகமாக ஒடுங்கியும் இருந்தாலும், கணுக்காலின் முன் பக்கம் காடுமுரடாக இருந்தாலும் நல்ல மாடுகள்.

11. குளம்புகள் சிகப்பாகவும், நெருக்கமாகவும் மார்புகள் உறுதியாகவும், முதுகுகொண்டை பெரியதாகவும், தோல், மயிர், சேர்த்தியாயும், கொம்புகள் சிகப்பாகவும் சிறியதாகவும், வாய்மெல்லியதாகவும் நீளமாகவும், கடைக்கண் சிகப்பாகவும், சுவாசம் விடுவதானது உற்றுக்கேட்கும்படி சிறியதாகவும், தோள்கள் சிங்கத்தின் தோள்கள்போலிருந்தாலும் கழுத்திலிருந்து தொங்கும் கட்டியின் சதையானது சிறியதாகவும் மிருதுவாகவும், நடையானது அழகாயிருந்தாலும் அப்படிப்பட்ட மாடுகள் நல்லமாடுகள்.

12. எருதுகளின் இடப்பாகத்திலுள்ள சுழியானது பிரதக்ஷணமாகவும், வலதுபாகத்திலுள்ள சுழியானது அப்பிரதக்ஷணமாகவும் இருந்தாலும், கணுக்கால்கள் மானின் கணுக்கால்கள்போலிருந்தாலும், நான்கு கால்களிலுமாவது ஒருகாலின் குளம்பாவது வெண்மையாகவும், வால்களிலுள்ள மயிர்க் குஞ்சமானது வெண்மையாகவும் இருப்பது சிலாக்கியம்.

13. எருதின் கண்கள் மல்லிகை அல்லது நீர்குமுளம் பூவைப்போலவும், இமைகளின் மயிர்கள் அடர்த்தியாகவும், குளம்புகள் நெருக்கமாகவும் இருப்பது சிலாக்கியம். அதிக பலமான சுமைகளை சுமக்கமுடியாது.

14. எருதின் மூக்கின் நுனியானது, மடிப்பு விழுந்திருந்தாலும், முகமானது பூனையின் முகம்போலிருந்தாலும், வலதுபக்கமட்டிலும் வெளுப்பாக இருந்தாலும், நீலநிறமாகவும் அல்லது செம்பஞ்சு போலவும் குதிரை போல வேகமுள்ளதாகயிருந்தாலும் விதையானது தொங்கிக்கொண்டிருந்தாலும் வெள்ளாட்டின் வயிறுபோலிருந்தாலும், குத்தரம்பட்டை, மார்பு இவைகள் ஒடுங்கியிருந்தாலும், அப்படிப்பட்ட மாடுகள் க்ஷேமத்தை உண்டாக்கும். அதிக பளுவான சுமைகளையும் சுமந்துகொண்டு வெகுதூரம் செல்லும்.

15. எருதுகளானது வெளுப்பு வர்ணமுள்ளதாகவும், கண்கள் பழுப்பு வர்ணமுள்ளதாகவும், கொம்புகள் சிவப்பும் முகம் பெரிதாயும் இருந்தால் அதற்கு ஹம்ஸம் என்று பெயர். அது க்ஷேமத்தையும் பசுக்கூட்டத்தின் அபிவிர்த்தியையும் கொடுக்கும்.

16. எருதின் வால் தரைமட்டம்வரையில் தொங்கிக்கொண்டிருந்தாலும், குத்தரப்பட்டை, கண்கள் கொஞ்சம் சிகப்பாகவும், முதுகிலுள்ள கொண்டைகள் சேர்ந்தியாயும், தேகத்தில் பலவிதமான வர்ணங்கள் கலந்திருந்தாலும், மயிலை நிறமாக இருந்தாலும் அப்படிப்பட்ட எருதுகளை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு ஏராளமான செல்வம் கைகூடும்.

17. எருதானது என்றுவர்ணமாகவும், கால்கள் ஒன்றுவது வெளுப்பாக இருந்தாலும் அதுவும் நல்ல மாடுகள்.

குறிப்பு:—இலக்கியமான எருதுகள் கிடைக்காவிட்டால், நடுத்தரமான எருதுகளை சம்பாதித்து உபயோகப்படுத்தலாம்.



## 1. கோம்புகள்.

18. 1. கிளிக்கொம்பு, உச்சிக்கொம்பு, மட்டைக்கொம்பு, பாட்டைக்கொம்பு உள்ளதும், மொட்டை மாடுகளும் நன்றாய் வேலைகள் செய்யும். வைத்திருப்பவனுக்கு சௌக்கியத்தையும் கொடுக்கும்.

2. கட்டைக்கொம்பு, விளைக்கொம்பு, தட்டைக்கொம்பு இவ்விதமான கொம்புகளுள்ள மாடுகள் வேலை சுமாராய்ச்செய்யும்.

3. கூட்டுக்கொம்பு, ஆடுகொம்பு, இக்கொம்புகளுள்ள மாடுகள் சுமாராய் வேலைசெய்யும்.

4. கொள்ளிக்கொம்பு, சொத்தைக்கொம்பு, ஆடுகொம்பு, பாடைக்கொம்பு இவைகள் நன்றாய்வேலைசெய்த போதிலும் வைத்திருப்பவர்களுக்குப் பலவிதமான கெடுதிகள் உண்டாக்கும்.

5. மாட்டின் கொம்பிலிருந்து வடியப்பட்டத் தண்ணீர் முன்னங்கால் குளம்பில் விழுந்தால் அம்மாட்டை வைத்திருப்பவனுக்கு கெடுதியை உண்டாக்கும்.

## 2. கண்கள்.

1. பார்ப்பதற்கு அழகாகவும், கருவிழிகள் நன்றாயும் கருப்பாகவும், மற்ற பாகங்கள் வெண்மையாகவும், கடைக்கண் கொஞ்சம் சிகப்பாகவும் புருவங்கள் மயிலை நிறமாகவும் இருப்பது உத்தம ஜாதி எனப்படும்.

2. கண்ணில் கருவிழி தவிர மற்ற பாகங்கள் சிவப்பாக இருந்தால் வேலையில் சூரனாகயிருக்கும். இது மத்திம ஜாதி என்று சொல்லப்படுகிறது.

3. இரண்டு கண்களும், மயிலை பார்த்திருப்பது வேலை செய்யும் உத்தமத்தில் மத்திமம்.

4. பூனைக்கண், பானைக்கண், பிலைக்கண், அழுகண், சுண்டெலிக்கண், மங்கலான கண், ஒரு கண் பொட்டை இவைகள் அதமம்.

### 3. காதுகள்.

1. காதுகள் நீண்டு சங்கைப்போலவும், தொங்கவிடாமலும், அதின் உட்பாகம் செந்தாமரை இதழ் போன்ற நிறமுள்ளதாக இருப்பது உத்தமஜாதி மாடுகள். வேலைகள் நன்றாய் செய்யும்.

2. மாடுகளுக்கு வியாதி உண்டானால் காது தொங்கவிட்டுவிடும்.

3. காதை அறுத்துவிடுவதனால் முகம் சிறுத்துக் காட்டும், பார்வைக்கு அழகாகவுமிருக்கும். காளை மாடுகளுக்குத்தான் காதை அறுக்கவேண்டும். பசுக்களுக்கு கூடாது. தஞ்சாவூர் ஜில்லா தென்பக்கத்திலுள்ள மாடுகள் விசேஷமாய் கொம்புகள் தீய்க்கப்பட்டும் காதுகள் அறுக்கப்பட்டுமிருக்கும்.

### 4. மூக்கு.

1. மூக்குத்துவாரங்கள் அதிக பெரிதில்லாமலும், மூச்சு அதிக சப்தத்தோடு விடாமலிருப்பது உத்தம ஜாதி.

2. பெரிய மாடுகள் சுமாரான மூச்சுவிடும்.

3. குறட்டை மாடுகள் கூடாது.

### 5. உதடு.

உதடு கறுப்பாக இருப்பது கூடாது.



### 6. நாக்கு.

1. நாக்கு அதிக நீளமாகவாவது, கறுப்பாகவாவது, அதிக சிகப்பாகவாவது இருப்பது கூடாது.

### 7. பற்கள்.

கன்றுகள் போட்டவுடன் இரண்டு பால் பற்களும், இரண்டாம் வாரத்தில் 4 பற்களும், மூன்றும் வாரத்தில் 6 பற்களும், ஒரு மாதத்தில் 8 பற்களும் முளைக்கின்றன. அப்பற்கள் 8-வது மாதத்தில் நடு இரண்டு பற்களும், 11-வது மாதத்தில் 4 பற்களும், 15வது மாதத்தில் 6 பற்களும், 18-வது மாதத்தில் எல்லா பற்களும் விழுந்துவிடும். பிறகு 2-வது வருஷத்தில் முன் இரண்டு பற்களும், 3-வது வருஷத்தில் 4 பற்களும் முளைக்கும். 4-வது வருஷத்தில் 6 பற்களும், 5-வது வயதில் 8 பற்களும் காணப்படும். 10 வயதில் பற்கள் தேய ஆரம்பிக்கும். நன்றாய்ப் போஷித்துக் காப்பாற்றப்பட்ட மாடுகள் 25 வயது வரையில் ஜீவித்திருக்குமென்று சுக்கிர நீதியில் சொல்லப்பட்டிருக்கிறது. வயது முடிய 2, 4, 5, 7 பற்கள் மட்டிலும் முளைத்திருக்கப்பட்ட மாடுகள் சிலாக்கியமானதல்ல. அப்படிப்பட்ட மாடுகள் கெடுதியை உண்டாக்கும். மாடுகளின் வயதை பற்களைக்கொண்டு அறியலாம்.

### 8. முகம்.

1. முகமானது அதிக நீளமாயும், அதிக குட்டையாகவுமிருப்பது கூடாது.

2. கருட முகமுள்ள மாடுகள் மூர்க்கமுள்ளதாயும் வேலையில் சுறுசுறுப்பாகவுமிருக்கும்.

3. மாட்டின் முகம் கழுதையின் முகம்போலிருப்பது அவ்வளவு சிலாக்கியமானதல்ல.

## 9. தாடைகள்.

1. தாடைகள் கழுத்து முதல் முன்னங்கால் சப்பை வரையில் கறைவாயும் மெல்லியதாயும் தொங்கிக்கொண்டிருப்பது லக்ஷணமாகவும் சுறுசுறுப்பாகவுமிருக்கும்.

2. அதிக நீளமாகவும் ரொம்ப கனமாகவும் பார்வைக்கு விகாரமாகவுமிருப்பது வேலையில் மந்தமாக இருக்கும்.

3. அரிகண்டம். இது மாட்டின் கழுத்தைச்சுற்றிலும் மாலைபோல் கருப்பு மயிர் அடர்ந்திருப்பது கூடாது.

## 10. கழுத்து.

1. கழுத்துகள் கனமாயிருப்பது நல்லது. மாடுகள் தலையை கீழே சாய்க்கும்போது, கழுத்தின் அடியில் ஒரு வரம்புபோல பள்ளமாகவும், கழுத்தில் சதை புடைப்பாகவுமிருப்பது இரட்டை நாடி என்று பெயர். வேலைக்கு ரொம்ப சிலாக்கியமானது

2. ஒத்த நாடி கழுத்து மெல்லியதாயிருக்கும். வேலைக்கு அவ்வளவு சிலாக்கியமானதல்ல.

3. ஜரிக்கழுத்து மாடு வேலை செய்ய வண்டியில் பூட்டினால் கழுத்தில் புண் உண்டாகும்.

4. மாடுகளின் கழுத்து அதிக நீளமாகவாவது அதிக குட்டையாகவாவது இருப்பது சிலாக்கியமானதல்ல.

## 11. கொண்டைகள்.

1. சிறியதாகவும் அமுக்கமாகவும் இருப்பது நல்லது.

2. பெரியதாயும் நடக்கும்போது சாய்ந்து ஆடிக்கொண்டிருப்பதும் வேலைகளில் மெதுவாயிருக்கும்.

## 12. முன்பக்கம் கால்கள்.

1. முன் கால்கள் மேற்பக்கம் கனத்தும், அடிப்பக்கம் சிறுத்தும், குளம்புகள் நெருக்கமாயும் சந்திர வட்டம்



போல விருத்தமாகவுமிருப்பது உத்தமம். ஒரு காலுக்கொருகால் சவடுகள் அடிபடுவது கூடாது.

2. குளம்புகளில் புரட்டலாவது, பொருத்த பிளவாவது, அதிக வளர்ச்சியுள்ளதாகவாவதிருந்தால் நடையிலும் வேலையிலும் சிரமப்படும்.

3. பின் கால்கள் அதிக வளைவில்லாமலும், நேராகவும், குளம்புகள் முன் சொன்னபடியே சுத்தமாகவுமிருக்க வேண்டும். குளம்புகள் வளர்ந்திருந்தாலும் நடக்கும்போது பின்கால் முன்காலில் இடித்தாலும் அவைகள் வேலைக்கு லாயக்கல்ல.

4. கட்டுத்துரை வாதம். இம்மாடு கட்டுத்துறையிலிருந்து வெளியில் போகும்போது காலை இழுத்து இழுத்து நடக்கும். கொஞ்ச தூரம் நடந்த பிறகு வேலைகள் நன்றாய்ச் செய்யும்.

5. சிறுக்கு வாதம். இது நடக்கும்போது எப்போதும் கால் சொடுக்கிக்கொண்டும் உதரியும் நடக்கும். இது வேலைக்கு அவ்வளவு சிலாக்கியமானதல்ல.

## 13. குளம்புகள்.

1. குளம்புகள் அர்த்த சந்திரன்போலவும், நெருக்கமாயும், கெப்பு அல்லது வெள்ளை நிறமாயுமிருப்பது உத்தமம்.

2. இழுவைக் குளம்பு அல்லது வளர்ந்த குளம்புள்ள மாடுகள் நடக்கமுடியாது.

## 14. வயிறு.

1. வயிறு குதிரையின் உடல்போலுள்ளது. சவாரி வண்டியில் நன்றாக வேலை செய்யும்.

2. பருமனாகயிருப்பது பாரமான சுமைகளை சுமக்கவும், பாரமான வண்டிகளை இழுக்கவும் உத்தமம்.

15. தொப்புள்.

சிந்தாரைகள் அதிகமாகத் தொங்கிக்கொண்டிருப்பது கூடாது.

16. விதைகள்.

ஒரு விதையுள்ள மாடுகள் கூடாது. இரண்டு விதைகள் உள்ளதாக இருக்கவேண்டும். பெரியதாயும் விகாரமாயுமிருப்பது நன்றாய் வேலை செய்யாது.

17. விலாப்புறம்.

1. இரண்டு பக்கத்து விலா எலும்புகளும் சமனாயிருக்கவேண்டும்.

2. கிளிச்சரகு. இரண்டு பக்கங்களிலும் பழு வெலும்பானது குறைவாயிருக்கும்.

3. குறைப்பழு. ஒரு பக்கத்து விலா எலும்பு குறைவாயிருக்கும். இவ்வித மாடுகள் கூடாது.

18. முதுகு.

1. மாட்டின் முதுகின் பாகம் உட்புறம் வெளிப்புறம் கூனலாயிருப்பது வேலையில் மந்தமாயிருப்பதுடன் பார்வைக் குறைவாயுமிருக்கும்.

2. சம முதுகு. பார்வைக்கு அழகாயிருப்பதுடன் வேலைகளும் நன்றாய்ச் செய்யும்.

19. வால்.

1. அரணை வால் என்பது வாலின் அடிப்புறம் பெருத்து நுனி சிறுத்து, பூமியில் படும்படியாயும், மயிர் குஞ்சங்கள் அடர்த்தியாயுமிருப்பது வேலையில் சுறுசுறுப்பாகவும், லக்ஷணமாகவும் பல மாடுகளுடனும் வசிக்கும்.

2. தடி வால் என்பது அடி முதல் நுனி வரையில் சமனாயிருப்பதும் வேலையில் மந்தமும் பார்வைக்கு அழகில்லாமலுமிருக்கும்.



3. எலி வால். முழங்காலுக்குமேல் வால் தொங்கிக்கொண்டிருக்கும். வேலையில் சுறுசுறுப்பாயிருக்கும்.

4. தட்டடிக்கூழை, கண்ணடிக்கூழைகள் ஆகாது.

19. மாட்டின் நிறமும் அதன் குணமும்.

1. சுத்த வெள்ளைநிறமுள்ளதும், மயிர் அழுத்தமாகவும், பளபளப்பாகவும் உள்ள மாடுகள் வேலைக்கு அஞ்சாது. காற்று மழை முதலியவைகளுக்கும் பயப்படாது.

2. சுத்த சிகப்பு, மயிலை, மறை, இந்த நிறமுள்ள மாடுகளும் வேலைகள் நன்றாய்ச்செய்யும்.

3. பச்சடி நிறமுள்ளதும், கருப்பு பழுப்பு நிறம், கபிலை நிறமுள்ள மாடுகள் வேலை சுமாராய்ச்செய்யும். காரை நிறமுள்ள மாடுகள் மயிர் பஞ்சையானதால் மழை வெய்யில்களுக்குப் பயப்படும்.

குறிப்பு:—ஆனால் நல்ல நிறங்கள் லக்ஷணமுள்ளதாக இருந்தபோதிலும், தாமஸம், சாத்வீகம், ராஜஸம் என்னும் குணங்கள் இவைகளுக்கும் உண்டு. மனிதர்களில் சோம்பேறி, பாசாங்கு செய்பவர்கள், செயலற்ற சுபாவமுள்ளவர்களைப்போல இவற்றிலும் இருப்பதால் அவற்றைப் பரீக்ஷித்துப் பார்த்து வாங்கவேண்டும். சிலமனிதர்கள் எஜமானன் திறமைக்குத்தக்கபடி நடப்பதுபோல மாடுகளும் அதை வேலை வாங்குபவர்களுக்குத் தக்கபடி நடக்கும்.

20. பசு, எருமைகளின் நிறங்களும் அவைகளின் பால் முதலியவைகளின் குணங்களும் உபயோகமும்.

1. வெள்ளை நிறமான பசுவின் பால் பித்தரோகத்தைப் போக்கும்.

2. சிகப்பு நிறமுள்ள பசுவின் பாலினால் வாதரோகம் போகும்.

3. கருப்பு நிறமுள்ள பசுவின் பால் சிலேஷ்ம ரோகத்தைப் போக்கும்.

4. கபில நிறமுள்ள பசுவின் பால் மேலேகண்ட மூன்று விதமான தோஷங்களையும் போக்கும்.

5. காராம் பசுவின் பால், கண்நோய், கபரோகம், இரத்த பித்தரோகங்கள் முதலியவைகளைப் போக்குவதுடன் இராஜவசியமும் உண்டாகும்.

6. சாமைப் பசுவின் பாலினால், முயல்ரோகமும், மான் நிறமான பசும்பாலினால் மூன்றுவிதமான தோஷங்களும் போம். செம்பு அனையும் பசுவின் பாலினால், பித்தம் போம். ஆனால் வாதம், சிக்கு கஷ்டம், கபம் உண்டாகும்.

7. மூன்றும் ஈற்றுப்பசுவின் பால் கபத்தைப் போக்கும். முதல் இரண்டாவது ஈற்றைவிட மூன்றும் ஈற்றில் பால் ஜாஸ்தியாக கறக்கும்.

8. நான்காம் ஈற்றின் பால் மூன்றுவித தோஷங்களையும் நிவர்த்தித்து சுகத்தைக்கொடுக்கும்.

9. ஆகாரமுறி பசுவின் பால் நோய்கொண்டது. மலம், கமொட்டு, எலும்பு முதலியவற்றைத் தின்கிற பசுவின் பாலும், சதா அலைந்து திரியும் பசுவின் பாலும் கபரோகத்தை உண்டாக்கும். ஆயுளைக் குறைக்கும்.

10. பகல் முழுவதும் படிசார்ந்து இராத்திரியில் கறக்கும் பசுவின் பால், உஷ்ணத்தையும் அனலையும் போக்கும். கபரோகத்தை உண்டாக்கும்.



11. இராத்திரிமுழுவதும் சார்ந்து காலையில் கறக்கும் பசுவின்பால், சுழல், கபம், சளி, பித்தரோகம், கண்ரோகம் முதலியவற்றைப் போக்கி தாதுவிருத்தியைக் கொடுக்கும்.

எருமைப்பாலின் குணம் திமிர்வாயுவுண்டாகும். மருந்தின் குணத்தைக் கெடுப்பதுடன், புத்தி மந்தத்தையும் உண்டாக்கும்.

12. உபயோகம்: மனிதர்களுக்கு ஜெனனம் முதல் மரணபரியந்தம் தாயைப்போல காப்பாற்றுகிறது. கிழவர், பழய ஜுரம் பிடித்துக் கொண்டிருப்பவர்கள், புண்ணாளர், குலைமேக நோய் கொண்டவர்கள், துர்பலதேகி, இளைத்தவர்கள் பசுவின் பாலை அருந்துவதனால் குணமடைவார்கள்.

13. கன்றுபோட்டவுடன் பால் தடிப்பாயிருக்கும். அந்தப் பால் வயிற்றுப்போக்கை உண்டாக்கும். இதனால் கன்றுகள் அப்பாலை இரண்டு மாதம்வரையில் அதிகமாய் சாப்பிட்டால் அதன் வயிற்றிலுள்ள கல்விஷங்கள் வெளிப்படும். இரண்டு மாதத்துக்கு மேற்பட்ட பாலில் தண்ணீர் அதிகம் கலந்திருக்கும். அப்பால் ஈசுவர அபிஷேகத்துக்கும், பத்தியத்துக்கும் சிலாக்கியம்.

14. முதார் பாலில் கன்றை வளர்க்கக்கூடிய சத்துக்கள் அதிகமாயிருப்பதால் கன்றுகளுக்கு முதார் பால் விடுவது சிலாக்கியம். கன்றின் இளம்பிராயத்திலுள்ள பால் தண்ணீர் அதிகம் கலந்திருந்தாலும் பின்பு வரவர தேக வளர்ச்சிக்கு அனுகூலமாகிய சத்துக்கள் இருப்பதனால் இளங்குழந்தைகளுக்கு இதுவே சிறந்தது.

15. பசு வைக்கோல் தின்றால் பால் ருசியாகவும் கொஞ்சமாகவுமிருக்கும். புல் தின்றால் பால் தண்ணீர் போலவும் அதிகமாகவும் கறக்கும்.

16. காலையில் கறக்கப்படும் பாலில் தண்ணீர் குறைவாகவும் கனத்த சத்துக்களும் இருக்கும். கடைசியாய் கறக்கப்படும் பாலில் ஆடை அதிகமாயிருக்கும்.

17. பசுவின் பால் கொஞ்சம் பழுப்பு வர்ணமாய் இருக்கும்.

18. எருமை பால் தடிப்பாகவும் வெண்மையாகவும் சத்துக்கள் அதிகமாகவுமிருக்கும்.

19. சுத்தமான தண்ணீராயிருந்து சீக்கிரத்தில் கெடுதலடையப்படும் குளம், கிணறு முதலியவைகளில் பசுவின் பாலைக் கொஞ்சம் மந்திரித்து மேற்கண்ட தண்ணீரில் விட்டால் அந்தத்தண்ணீர் முன் இருந்ததுபோல் ஆகிவிடும். ஆதலால் பசு மேன்மையானது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

20. பாலைக்கறக்கும்பொழுது பசுவின் மடியை நன்ருய் சுத்தம் செய்து சுத்தமான பாத்திரத்தில் பாலை கறக்க வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் பாலின் குணம் கெட்டுவிடும்.

21. பசு, ஆடு, மனிதர் இம்மூன்று பாலுக்குமுள்ள வித்தியாசங்கள்.

| 100% | நசை வளர்க்கும் சத்து. | கொழுப்பு. | சர்க்கரை. | உப்பு. | தண்ணீர். |
|---|---|---|---|---|---|
| முலைப்பால் | 2·29 | 3·81 | 6·20 | 0·30 | 87·40 |
| பசுவின்பால் | 3·35 | 3·69 | 4·48 | 0·71 | 87·17 |
| வெள்ளாட்டு பால் | 4·30 | 4·78 | 4·46 | 0·75 | 85·71 |

## 22. பசுவின் தயிரின் குணம்.

1. அஜீர்ணம், தாகம், இளைப்பு, இருமல், திரேக எரிவு இவைகளைப்போக்கி பசியை உண்டாக்கும். அபி



ஷேகத்துக்கும், பஞ்சகவ்யத்துக்கும் உதவும். நிறம் கொஞ்சம் மஞ்சளாயிருக்கும்.

2. எருமைத் தயிரின் குணம். எரிச்சல் நோயைப் போக்கி கண்ணுக்கு குளிர்ச்சியையும் உண்டாக்கும். க்ஷயம், காய்ச்சல், வாதரோகம், புத்தி மந்தம் இவைகளைக் கொடுக்கும். ஆடை எடுத்த தயிர் கபம், மூத்திரகிருசனம், வாயு, கிராணி, மேகம் இவைகளைப் போக்கும்.

## 23. மோரின் குணம்.

1. பசுவின் மோரினல், வீக்கம், மகோதரம், வயிற்று வலி, பாண்டுரோகம், பித்தகோபம், பேதி, திருவித தோஷங்களும், அக்னிமந்தங்களையும் போக்கும். பத்தியத்துக்கும் உதவும்.

2. எருமை மோரின் குணம். தாகம், கிராணி, சகல கழிச்சல், காமாலை, கிருமி இவைகளைப்போக்கி, போகத்தில் விருப்பத்தைக் கொடுத்து வாயில் உண்டாகக் கூடிய சகலரோகங்களையும் தீர்க்கும். மோரினல் வயிற்றில் சேரப்பட்ட மண் கல் முதலியவைகள் வெளிப்படும். மூல ரோகமும் போம்.

## 24. வெண்ணெய்யின் குணம்.

1. பசுவின் வெண்ணெய், கண் நோய், கண் எரிவு, கண்ணில் பீளை சாய்தல், கீல் வாயு, பிரமேகங்களை போக்கி பலவித மருந்துகளுக்கும் உபயோகப்படும். பசுவின் வெண்ணெய்யை 3 கழஞ்சி வீதம் காலை நேரத்தில் சாப்பிட்டுவர மலடு நீங்கும்.

2. எருமை வெண்ணெய்யினல், பித்தம், மூத்திரகிருசனம், மலாசயத்திலுள்ள கிருமிகள், அக்னிமந்தம், வாதரோகம், கபரோகம், தொந்தரோகம் இவைகளைப்

போக்கி சில மருந்துகளுக்கும் அஷ்டபத்தன மருந்துக்கும் உபயோகப்படும்.

### 25. நெய்யின் குணம்.

1. பசு நெய்யின் குணம். தாகம், கழலைப்பிணி, அஷ்ட குல்மரோகம், வாயுவு, பித்தாதி ரோகம், விஷம், ரணப்பிரமேகம், வயிற்றுவலி, எரிவு, இசிவு, சொறி சிரங்கு, இருமல், குடல்நோய், அஸ்தி ஜுரம் இவைகளைப் போக்கி மருந்துகளுக்கும் தெய்வ பிதுர் எக்ஞங்களுக்கும் உபயோகமாகும். ஆலயங்களில் தீபம் போட விசேஷம்.

2. காராம் பசுவின் நெய்யின் குணம். சரீரத்திற்கு புஷ்டியும், நேத்திரத்திற்கு ஒளியும் உண்டாக்கும். கண், புருவம், நெற்றி, சிரசு இவைகளில் உண்டாகும் நோய்களையும் குணமாக்கி, மருந்துக்கும், ஹோமங்களுக்கும், ஆலயங்களில் தீபத்துக்கும் விசேஷ உபயோகமாகிறது.

3. எருமை நெய்யின் குணம். அறிவு, அழகு, கண் ஒளி இவைகளுக்கு மத்திமம். வாதபித்த தொந்தம், கரப்பான் இவைகள் உண்டாகும். பத்தியத்திற்கு கூடாது.

4. பலகலப்புள்ள நெய்யின் குணம். சுக்கிலம் பெருகி பசி தீபனம் உண்டாக்கி பித்த ஜுரத்தை போக்கி உடலை கொழுக்க வைக்கும்.

### 26. பசுவின் சாணியின் குணம்.

விபூதி செய்யவும், பஞ்சகவ்யத்துக்கும், விதைகளை காப்பாற்றவும், கல் முதலியவைகளால் அடிக்கப்படும் வீக்கங்கள், ஒழுகிக்கொண்டிருக்கும் ரத்தம், கிருமி ரோகம், சுபஜுரத்தினால் உண்டாகும் தாகம் இவைகளைப் போக்கி



அடுப்பெரிப்பதற்கும், நிலங்களுக்கு எருவாகவும் உபயோகப்படும். பசுவின் சாணியைத் தண்ணீரில் கலந்து அசுத்தமான இடங்களில் தெளித்தால் துர்நாற்றம் முதலியவைகளைப் போக்கும். பசுவின் மூத்திரம் வீக்கம், பாண்டு, சோகை, பற்பல வீக்கம் சகல விஷம், காமாலை, பல் நோய் இவைகளை நீக்க உபயோகிக்கலாம். சில சரக்குகளை சுத்திசெய்யவும், எருவுக்கும் உபயோகிக்கப்படும்.

### 27. எருமைச்சாணியின் குணம்.

வயிற்றுப் பொருமல், காமாலை இவைகளை நீக்கவும் அடுப்பெரிக்கவும், நிலங்களுக்கு எருவாகவும், உபயோகப்படுத்தலாம். அதன் மூத்திரம் பெருவயிறு, பாண்டு, காமாலை, சோகை, பிரமியம், கிருமிகள் முதலிய ரோகங்களை போக்கும்.

28. மாட்டின் கோம்புகள். சிமிள், சீப்பு, கத்திப்பிடி, கம்மாளர்கள் ஆயுதங்களுக்கும் உபயோகமாகிறது.

29. குளம்புகள். ஒருவித வஜ்ஜிரப் பசை காய்ச்ச உபயோகமாகிறது.

30. எலும்பு. சர்க்கரை சுத்தி செய்யவும், எருவாகவும் உபயோகப்படுகிறது. மாட்டின் தலைப்பக்கம் எலும்புக் கூட்டை பயிர் செய்யப்பட்ட புலங்களில் ஒரு கழியை நட்டு அதில் மாட்டிவைத்தால் திருஷ்டிதோஷங்கள் நீக்கப்படுமென்று சிலர் செய்து வருகிறார்கள்.

31. மாம்சம். மரம் செடிகளுக்கு எருவாகவும் சில ஜாதியார்களுக்கு உணவாகவும் உபயோகிக்கிறார்கள்.

32. கொழுப்பு. யந்திரங்களுக்கும், சோப்பு முதலிய சாமான்கள் செய்யவும் உபயோகப்படுகிறது.

33. தோல். யந்திரங்களுக்கும் தப்பு, தம்பட்டங்கள், கபிலை, ஜோடு, தலையணை முதலிய இன்னும் பலவித வேலைகளுக்கும் உபயோகமாகிறது.

34. பசுவின் வயிற்றிலிருந்து கோரோசனை உண்டாகிறது. அது ஔஷதங்களுக்கும் சகல அபிஷேகத்துக்கும் முக்கிய உபயோகமானது.

35. மடி. பசுக்களுக்குப் பால்மடி என்றும் சதைமடி என்றும் இரண்டுவித மடிகள் உண்டு. சில மாடுகளின் மடியானது பெரியதாகவும், காம்பு அழுத்தமாகவுமிருக்கும். இதனால் பால் அதிகம் கறக்காது. சில மாட்டுகளின் மடி அடக்கமுள்ளதாகவும், காம்புகள் மிருதுவாகவும் பால் அதிகமாக கறக்கக்கூடியதாயுமிருக்கும். சில மாடுகள் கவுட்டுத்தனமாக பாலை அடக்கிக்கொண்டு கறந்தபிறகு தன் கன்றுக்குக் கொடுப்பதுமுண்டு. சில மாட்டுகளுக்குக் காம்புகள் இரண்டாகவும் மூன்றாகவுமிருப்பதுண்டு. அவைகள் அவ்வளவு விலாக்கியமல்ல.

### 36. பசு சகுனம்.

1. ஆடிமாதத்தில் ரோகிணி நக்ஷத்திரத்தன்றைய தினம், ஊர் மாடுகள் சாயந்திரம் மேய்ந்து விட்டு வரும்போது சிகப்பு நிறமுள்ள பசுவானது மற்றவைகளுக்கு முந்தி வந்தால் அவ்வருஷம் நல்ல மழையுண்டு.

2. பசுவானது பலஹீனமாயும் சந்தோஷமில்லாமலும் காணும் பக்ஷத்தில் எஜமானனுக்கு துக்கமும், பின்பக்கம் கால்களால் பூமியில் அடிக்குமானால் சிக்குகளும், கண்களில் நீர்தாரைகள் ஏற்பட்டாலும் தன் எஜமானனை கண்டு பயந்தாலும், திருடர்களை கண்டு கதறினாலும், பந்துக்களுக்கு சாவும், பசுக்களை ஜனங்கள் தொந்தரவு செய்யா


513

திருக்கையில் கதறினால் குடும்பத்துக்குக் கெடுதியும், ராத்திரியில் கத்தினால் பயமும் ஏற்படும்.

3. பசுக்களை சக்கள், நாய் இவை தொந்தரை செய்தால் உடனே மழைபெய்யும். பசுக்கள் வீட்டுக்கு திரும்பிவரும்போது பம், பா என்று கதறினாலும், எருதுகள் தாத்தி வரக்கண்டாலும் பசுக்களுக்கு விருத்தி யேற்படும். பசுக்கள் நனைந்து மயிர் கூச்சல் உண்டாகியாவது சுகமாக வாலதிருக்கக்கண்டால் தன விருத்தியுண்டாகும். எருமைகளுக்கும் இவ்விதமே. பசுவானது கட்டுத்துறையிலிருந்து ஆடிக்கொண்டிருந்தாலும், கழுத்தை முறுக்கி முறுக்கிக் கொண்டு ஆகாரம் தின்றுகொண்டிருந்தாலும், கொம்புகளால் கட்டுத்தரியை தட்டிக்கொண்டிருந்தாலும், கட்டுத்தரியில் பின்காலால் அடிக்கடி வரண்டினாலும் எஜமானனுக்கும், கூட வசிக்கப்பட்ட மாடுகளுக்கும் துன்பத்தைக் கொடுக்கும்.

### 37. மாடுகளுக்கு சூடு போடல்.

1. தை மாசி மாதங்களில், ஞாயிறு செவ்வாய்க் கிழமைகளில் சூரிய உதயகாலத்தில் சூடுகள் போடவும். அனுபவசாலிகளைக்கொண்டு லக்ஷணங்கள் அமைந்தகோலினால் சூடு போடவேண்டும். பிறகு ஒவ்வொரு நாள் காலை நேரங்களிலும் தண்ணீரில் அடித்து வைத்து அச்சூட்டின் பேரில் முட்டைசாம்பலை நீராகத்தண்ணீரில் கறைத்து மேற்கண்ட சூட்டின் பேரில் புண் ஆறுகிறவரையில் ஒவ்வொரு நாளும் பூசி வரவேண்டும். அப்படி பூசாவிட்டால் தோல்கள் பேர்ந்தவுடன் புண்களின்பேரில் காக்கைகள் கொத்தி ஈ முதலியது உட்கார்ந்து பூச்சி புழுக்களை உண்டாக்கும். இச்சூடானது கன்றுகளுக்கு ஒருவயதுக்குமேல்தான் சூடு

போடவேண்டும். வேலைசெய்து இளைத்தபோன மாடுகளும் வறட்டு மாடுகளுக்கும் வியாதியுள்ள மாட்டிற்கு அவசியம் சூடுபோடவேண்டும். அப்படி சூடுபோடுவதனு லாட்டின் அசுத்த ரத்தங்கள் மாற்றப்பட்டு நல்ல ரத்த முண்டாகி மயிர்கள் முளைத்து, மாடுகள் லக்ஷணமாக காணப்படுவதுடன் வறட்டுமாடுகளும் சினைப்பட்டு கன்று போடும். சூட்டின் அடையாளத்தினால் இன்னார் மாடென்று கண்டுபிடிக்கவும், திருடர்கள் மாடுகளைத் திருடி போனாலும் சூட்டின் அடையாளங்களைக் கொண்டு கண்டு பிடிக்கவும் கூடும். வியாதிகண்ட காலத்தில் சூடுபோடப்படுவதினால் ரத்தம் சுத்தமடைந்து வியாதிகள் நிவர்த்தி உபகாரமுமாக. குழந்தைகள் ஜலதோஷமுடன் வயிற்றும் கெட்டிவிடாம் சிறிய ஊசியினால் சூடுபோடுவதையும் சில குழந்தைகளுக்கு மார்பு உயர்ந்து இளைப்படை திருப்பதற்கு எதிர் புள்ளி கண்டு முப்பூன்று புள்ளியா சூடுபோடுவதனால் மார்பு அமர்ந்து சரியாய்விடுவதுண்டு அனாவசியில் மனிதர்களுக்கு ஜன்னி முதலிய நோய் கண்டால் அதற்கு பிளாஸ்டர் போட்டு அந்த இடத்தில் புண் உண்டாக்கி சலத்தை வெளிப்படுத்துவதுண்டு மாட்டு வாகடங்களில் சொல்லியபடி ஒவ்வொரு வியாதிக்கும் இன்னின்ன விதமாக சூடு போடப்பட்டால் குணமடையுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தோல் வியாதிகளுக்கு மாத்திரம் சூடுபோடுவதனால் தோஷத்துக் கெடுதி உண்டாகுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள் சில தேசங்களில் சிலகாலங்களுக்குத் தக்கவாறு சூடு போடுவதில்லை. கொம்புகள் காளைக் கன்றுகளுக்கு நீய்க்கப்படுவதனால் மாடுகளுக்கு அழகில் பாதிக்கப்பிலாமலிருப்ப





துடன் அக்கொம்பின் சத்துக்கள் எலும்புகளில் சுவரி எலும்புகள் பலமுள்ளவைகளாகி தேகம் புஷ்டியடைகிறது. முகமும் சிறந்து லக்ஷணமாக காண்கிறது. இங்கிலீஷ் வைத்தியர்கள் கன்றுபோடப்பட்ட இரண்டு மூன்று மாதங்கள் ஆனவுடன் கன்றின் கொம்பு முளைக்கப்பட்ட இடத்தில் ஜலத்தைத்தடவி காஸ்டிக் பொட்டாஷ் என்னும் அக்கினிக் குச்சியைத் தடவி விடுவார்கள். அதனால் அந்த இடத்தில் கொம்புகள் முளைப்பதில்லை. வியாதி கண்ட மாடுகளுக்கு சூடுபோட மாதக்கணக்காவது நாள் கணக்காவது பார்க்கவேண்டிய அவசியமில்லை.

38. காய் பிடித்தல்:—எருதுகளுக்கு காய் பிடிப்பதனால் அதனுடைய இந்திரியம் தேகத்தில் சுவரி பலத்தை உண்டாக்குகின்றன. பசுக்களைப் புணர விடுவதனால் காளைகளுக்கு பலம் குறைந்து வேலைசெய்ய சக்தியற்றவையாகின்றன. சில சமயங்களில் அடங்காமல் வெறிகொண்டு மனிதர்களுக்குக் கெடுதியை உண்டாக்கும். ஆகையால் அவசியம் காளைமாடுகளுக்கு காய்பிடித்தல் வேண்டும். இரண்டு பற்கள் காணப்படும் போதாவது பிந்தியாவது, வெட்டர்னெரி டாக்டர்களைக் கொண்டாவது விதையையெடுத்து விடலாம். அல்லது நாட்டு வைத்தியர்களைக் கொண்டாவது விதைபிடித்தல் வேண்டும். அப்படி பிடித்தவுடன் விதைவீக்கம் கொடுக்கும். அதற்காக பசு மஞ்சள் கோழி முட்டை, நல்லெண்ணெய் இவைகளைக் கலந்து, மாட்டுக்கு மேற்படி விதைகளின் மேல் தடவவேண்டும். இவைகளுடன் உளுத்தமாவையும் சேர்த்து சீராத்தில் கரைத்து உள்ளுக்கு போடவேண்டும். காயடித்த மாட்டை கிரிப்பிள்ளை, எலி, நாய் முதலியவை விதையை கடித்து

விடாமல் ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ள வேண்டும் பத்து தினங்களுக்குள் ஆறிவிடும். விதை எடுப்பதைப் பார்க்கிலும் விரையடிப்பதுதான் விசேஷம் என்பதும் பலர் அபிப்பிராயம். காயடித்தல், விதையடித்தல் இவைகளைவிட நரம்புகட்டல் என்ற ஒரு சிகிச்சை இட்டாலியில் கண்டு பிடித்திருக்கிறார்களாம்.

ஐரோப்பவைத்தியர்கள் காயைக்கீறி விதை எடுத்தவுடன் அந்த இடத்தில் துத்தியப் பொடியை அடைத்து இரும்புகம்பியை காய்ச்சி அதில் காட்டுவர்கள். மூன்றுவது நாள் 40 மடங்கு தண்ணீருடன் ஒரு பாகம் கார்பாலிக் ஆசிட்டைக் கலந்து அந்த நீரினால் மேற்படி இடத்தை சுத்தம் செய்வார்கள். இப்படிச் செய்தால் ஒரு மாதத்தில் சுத்தமாய் ஆறிவிடும்.


39. மாடுகளுக்கு மூக்குகுத்தல்:—மூக்குக் குத்துவதனால் முறட்டுத்தனம் அடங்கி மனிதர்கள் இஷ்டம்போல் வேலைகள் செய்யும்.

### 40. சுழிகளின் இலக்ஷணம், அவை இருக்குமிடம், அதற்குப் பலன்கள்.

1. பிள்ளையார் சுழி. எருதுகளின் முதுகின் வால் முதல் கொண்டைவரையில் நேர் கோடாக உள்ள ஒரு வரையிருக்கும். அவ்வரையின்மேரில் முதுகில் உள்ளது நல்ல சுழி.

2. பட்டிச்சுழி அல்லது ராஜாச் சுழி அல்லது கோபுரச்சுழி என்றும் சொல்லுவதுண்டு. இது மாட்டின் முன்பக்கம் நின்று மாட்டைப்பார்த்தால் பார்ப்பவருக்குத் தெரியும்படியாய் கொண்டையின்மேரில் இருக்கும். இத்தச்சுழியுள்ள மாடு எங்கே இருந்தபோதிலும் அநேகமாடு






சுழிகள் இருக்கும் இடங்களைக் காட்டும் படம்.

களைச் சேர்த்துக்கொண்டிருக்கும். வைத்திருப்பவனுக்குச் செல்வத்தையும் சந்தோஷத்தையுங் கொடுக்கும்.

3. தாவணிச்சுழி. இச்சுழி மாட்டினுடைய முன் பக்கம் கால்களுக்கும் கழுத்துக்கும் மத்தியில் ஒரு பக்கத்திலாவது இரண்டு பக்கத்திலுமாவது இருக்கும். இந்தச் சுழியுள்ள மாடு கட்டப்படும் தொழுவங்களில் அநேகம் மாடுகள் சேரும். உடையவன் மிக்க சந்தோஷத்தை அடைந்துகொண்டிருப்பான்.

4. கோம்புத்தாறு. இது மாட்டின் கொம்பின் அடிப்பாகத்தில் உள்ளது. இது நல்ல சுழி. மாடுகள் விருத்தியுண்டாகும்.

5. முக்கண்சுழி அல்லது அக்கினிச்சுழி. இரண்டு கண்களுக்கும் மத்தியில் முக்கோணமாக உள்ள மூன்று சுழி. இதைச்சிவனுடைய முக்கண் என்றும் சொல்லுவார்கள். இச்சுழி உள்ள மாடு இருக்கும் குடும்பங்கள் பலவிதமான ஆபத்துக்குள்ளாகுமென்று சொல்லுவார்கள்.

6. இருகண்சுழி. அதே இடத்தில் இரண்டு சுழிகளும் நேர்நேராக இருப்பது. இச்சுழியுள்ள மாடு நன்மையைத்தரும்.

7. ஏறுசுழி. இது தாவாக்கட்டையின்பேரில் உள்ளது. இந்த மாட்டை உடையவன் ரோகவானாக இருப்பான்.

8. விபூதிச்சுழி அல்லது பாஷிகம். கலியாணப்பெண்களுக்கு நெற்றியில் கட்டப்பட்ட குஞ்சம்போல மாட்டின் நெற்றியில் இருக்கும். கலியாணமாகாதவர்கள் இதை வாங்கினால் அவர்களுக்குக் கலியாணம் ஆகும். அது

இருக்கப்பட்ட குடும்பங்களில் எப்போதும் கலியாணம் முதலிய சுபகாரியங்கள் நடந்துகொண்டிருக்கும்.

9. கோடைமேற் கோடை. இது மாட்டின் நெற்றியில் ஒன்றின் மேல் ஒன்றாய் இருக்கும். இச்சுழியுள்ள மாட்டை வைத்திருப்பவர்களுக்குப் பலவிதமான துன்பம் உண்டாகும்.

10. பூரான்சுழி. இரண்டு விதம். (1) ஆள் பார்த்த பூரான்: முதுகின் மத்தியில் சுழித்து வால்புரமாக நீண்டிருப்பது கூடாது. (2) ஏர்பார்த்த பூரான்: இது முன் சுழி போல மாட்டினுடைய முன்பக்கமாக நீண்டிருப்பது. அதிர்ஷ்டமானது. சம்பத்தைக் கொடுக்கக்கூடியது.

11. முன்பாடை, பின்பாடை. இது பின்பக்கம் சப்பையில் வாலின் முன்பாவது பின்பாவது சுழித்திருப்பது. இது கெட்டது. இதை வாங்கினவன் இறந்துபோய் விடுவான்.

12. புட்டாணிச்சுழி. இது இடுப்புக்கும் வாலடிக்கும் மத்தியிலுள்ளது. இது கெட்ட சுழி.

13. ஏழுகட்டேச்சுழி. இது மாட்டின் உதட்டின் பேரில் உள்ளது. இது கெட்ட சுழி. மாடுகளைக் கலைத்துவிடும்.

14. பெண்டிழந்தான் சுழி. இது வாலடிக்கு பக்கத்தில் குதத்துக்குமேல் உள்ளது. ஒரு பக்கத்திலாவது இரண்டு பக்கங்களிலுமாவது இருக்கும். இது எஜமானன் மனைவியைக் கொல்லும்.

15. வால்முடக்கிச்சுழி அல்லது துடப்பச்சுழி. இது வாலடிக்கு உள்பக்கத்தில் உள்ளது. இவ்விதமான



மாட்டை வாங்கினால் கொட்டிலிலுள்ள மாடுகளையும், பொருள்களையும், குடும்பத்தையும் அடியோடு தொலைத்துவிடும்.

16. ஏறுநாகம் அல்லது நாகப்படம். இது வாலின் மேற்புறத்தில் சுழித்து மேல் முகமாக ஏறி இருக்கும். இது நல்ல சுழி.

17. இறங்குநாகம். அதே விதமாக கீழ்பக்கம் நோக்கி இருக்கும். இது கெட்ட சுழி.

18. கருநாகம். மாட்டின் கழுத்தில் மாலையைப் போல கருப்பு மயிர் அடர்ந்து இருப்பது. இப்படிப்பட்ட மாடுகள் இருக்கப்பட்ட குடும்பத்தில் மிகக்கெடுதல்கள் அடுத்தடுத்து வரும்.

19. விலங்குச்சுழி. இது மாடுகளின் முன்பக்கம் பின்பக்கம் கால் குளச்சுகளிலாவது, கணுக்கால்களிலாவது இருக்கும். இச்சுழியுள்ள மாட்டை வாங்குபவன் சிறைச்சாலையில் வாசஞ்செய்ய நேரிடும்.

20. ஜயலெக்ஷ்மிச்சுழி. இது கண் புருவத்தில் ஒட்டினாற்போல் இருக்கும். எஜமானனுக்கு நினைத்த காரியத்தையும் ஜயமுண்டாக்கும்.

21. எச்சப்புள்ளி. வாலடிக்கும் ஆசனத்துக்கும் இடையில் ஒரு சிறு வெள்ளைப்புள்ளியாக இருக்கும். இது கெடுதலான சுழி.

22. இரட்டைக்கவர். முன்கால் கட்டின் இரண்டு பக்கத்திலும் கவர்போல இரண்டு பிளவாக இருப்பது. இது அதிர்ஷ்டத்தைக்கொடுக்கும். ஒத்தைக்கவர் இது மாதிரி ஒரு பக்கத்தில் இருப்பது. இது தூர் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும்.

23. நீர்ச்சுழி. இது அடிவயிற்றில் மூத்திரத்துவாரத்துக்கு எதிரில் இருப்பது. இதை வைத்திருப்பவனுடைய குடும்பம் பெருகினாலும் பெருகும் அல்லது நசித்தாலும் நசிக்கும்.

24. மேன்னிப்பிடியன். மாட்டின் கழுத்தில் அடிப்பாகத்தில் இரண்டு கவராக கழுத்தைப் பிடிப்பதுபோல இருப்பது. இதை வைத்திருப்பவனுக்குப் பலவித துன்பம் உண்டாகும்.

குறிப்பு:—வீட்டில் போடப்பட்ட கன்றுகளுக்கும், 21 மாடுகளுக்குமேல் இருக்கப்பட்ட இடத்துக்கும் இவ்வித தோஷங்கள் பாதிக்கப்படமாட்டாதென்பது சிலர் கருத்து. ஆனால் துஷ்டர்கள் சவகாசத்தினால் ஏற்படும் லாபநஷ்டங்கள் போலத்தான்.



ஸ்ரீராமஜெயம்

## 5-வது அத்தியாயம்.

## ஆயுர்வேத வயித்தியம்.
(மாட்டு வாகடம்)

### 1. ஸகல நோய்களுக்கும் மருந்து.

1. கருநாவி விராகனிடை 5, வேப்பம் பருப்பு வி. 5, வெங்காயம் வி. 5, நேர்வாளம் வி. 10, கடுக்காய் வி. 10, உள்ளிப்பூண்டு வி. 10, கடுகு வி. 10, கார்த்திகை கிழங்கு வி. 10 இவைகளையெல்லாம் வேலிப்பருத்திச்சாற்றில் அரைத்து வேப்பெண்ணெய்யில் குழப்பி ¼ விராகனிடை எடுத்து வெற்றிலையில் வைத்து மாட்டுக்குக் கொடுக்க தொண்டை அடைப்பன், முன்னடைப்பன் பின்னடைப்பன், தெரியன், கொள்ளுத்தெரியன், சந்நடைப்பன், பன்னிக்கொல்லி, குதிரை வலிப்பு முதலிய வியாதிகள் தீரும். இதுகளுக்கு 3 வேளை கொடுக்கவும். கருநாவியை மனிதனுடைய மூத்திரத்தில் 30 நாள் ஊரவைத்து கழுவி எடுத்து சுத்திசெய்து சேர்க்கவும். நேர்வாளத்தை சுத்தி செய்து நஞ்சை எடுத்துவிட்டு ஒரு ஜாமம் அரைத்து எடுத்து மாட்டுக்கொம்புச் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

2. பெருமருந்து வேரைத் துண்டு துண்டாக நறுக்கி வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

3. அரைப்பலம் பெருங்காயத்தை வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

4. பெருங்காயத்தை எருமை நெய்யில் உரைத்து மூக்கில் நசியமிட சகல வியாதியும் நீங்கும்.

5. வியாதி கண்டிருப்பதாகத் தெரிந்தவுடன் 2, 3 நண்டுகளைப் பிடித்து கால்களை எடுத்துவிட்டு வைக்கோலுக்குள் வைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

6. ஞாயிற்றுக்கிழமையில் சூரிய உதயமாகும்போது வடக்கு முகமாக ஓடுகிற காங்தொட்டி வேரைப் பிடுங்கி நான்கு துண்டாக நறுக்கி 4 மண்கலயத்தில் போட்டு கலயம் 1-க்கு பன்றி நெய்யில் கால்படி வீதம் விட்டு கலயங்களின் வாயை அகல்களினால் மூடி கொட்டிலின் நான்கு மூலைகளிலும் புதைத்துவைத்து 40 நாள் கழித்து எடுத்து அந்த நெய்யை வியாதிகண்ட மாடுகளுக்கு அரைக்கால் படி வீதம் உள்ளுக்குக் கொடுத்து கொம்புகளிலும் கால்களிலும் கொஞ்சம் தடவ சகல வியாதிகளும் நீங்கும்.

7. முருக்கம் பூ, சுக்கு, வில்வப்பழம், நாகல் பட்டை இவைகளை சமஎடையாய் இடித்து ஒரு மண்பாத்திரத்தில் போட்டு எருமை மாட்டுக் கட்டுத்தரியில் ஒரு மண்டலம் புதைத்து வைத்து எடுத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒருபிடி தூள் வீதம் காடியில் கலக்கி மூன்று நாளைக்கு காலை ஒரு வேளை உள்ளுக்குக் கொடுக்க சகல நோயும் தீரும்.

8. 1. கடுக்காய், 2. வெண்கடுகு, 3. இந்துப்பு, 4. பெருங்காயம், 5. வெண்காரம், 6. ரசம், 7. மனோசிலை, 8. அரிசித்திப்பிலி, 9. தாளகம், 10. சீரகம், 11. கடுகுரோகணி, 12 நாவி இந்தப் பனிரெண்டு சரக்குகளையும் ஒவ்வொரு



சரக்குகளும் விராகனிடை 1 வீதம், சுத்திசெய்யப்பட்ட வாளம் 12 விராகனிடை சேர்த்து தேங்காய் கொட்டங்கச்சி சுட்ட சாம்பல் விராகனிடை 5, பனை வெல்லம் வி. 5 இவைகளை உத்தாமணிச் சாற்றில் 8 ஜாமம் அரைத்து மறுபடியும் தேங்காய்ப் பால் விட்டு ஒரு ஜாமம் அரைத்து எருமைக்கொம்பு சிமிழில் வைத்துக்கொண்டு வெக்கை நோய் தவிர மற்ற வியாதிகளுக்கு சுண்டக்காய் அளவு வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக்கொடுக்க சகல வியாதிகளும் தீரும். ரசத்தை செங்கொட்டைப் பாலில் சுத்தி செய்யவும். தாளத்தை வெள்ளாவியில் வைத்து சுத்தி செய்யவும். நாவி, வாளம் இவற்றை எருமைச்சாணிப் பாலில் சுத்திசெய்யவும்.

9. சுத்தி செய்யப்பட்ட பச்ச நாவி விராகனிடை 2, சுத்தி செய்யப்பட்ட வெள்ளைப் பாஷாணம் வி. 2, சுத்தி செய்யப்பட்ட வாளம் வி. 4, கழச்சிபருப்பு வி. 5, மஞ்சள் கிழங்கு அரைத்தபொடி ஒரு பிடி இவற்றை ஆழாக்கு சதுரக் கள்ளிப்பால் விட்டு அரைத்துக் கம்பியாக நீட்டி, உளுந்து பிரமாணம் உருண்டையாகச்செய்து வியாதி கண்ட மாட்டுக்கு ஒரு உருண்டையை வெற்றிலையில் வைத்து மூன்று நாளைக்கு காலையில் கொடுக்கவும். மூன்றும் நாள் தண்ணீரைச் சுடவைத்துக்காட்டவும். நான்காம் நாள் வெளியில் விடலாம்.

10. 1. சுக்கு, 2. அரத்தை, 3. கண்டத்திப்பிலி, 4. ஆனைத்திப்பிலி, 5. கோஷ்டம், 6. அக்கிராகாரம், 7. அதிவிடயம், 8. காட்டுக்கருணைக்கிழங்கு, 9. பெருஞ்சீரகம், 10. காட்டுச்சீரகம், 11. பெருமருந்துவேர், 12. சங்கம் வேர், 13. கொடிவேலிவேர், 14. மாசிக்காய், 15. குரோ

சாணி ஓமம், 16. சூடம், 17. வசம்பு, 18. மிளகு, 19. குதிரைவாலி வேர், 20. வெப்பாலை அரிசி வகைக்குப் பலம் 1. இந்த சரக்குகளைத் தில்லம்பால் விட்டு அரைத்து சுண்டக்காய் அளவு உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி எடுத்துவைத்துக்கொண்டு வெக்கை தவிர எந்த வியாதிக்கும் குப்பைமேனிச் சாற்றிலாவது வேப்பெண்ணெய்யிலாவது கொடுக்கவும், அடைப்பானுக்கு வெந்நீரில் கொடுக்கவும்.

11. 1. பச்சைநாவி, 2. பாஷாணம், 3. கௌரிபாஷாணம், 4. இந்துப்பு, 5. பூவந்திக்கொட்டை, 6. பரங்கிப்பட்டை, 7. எட்டிக்கொட்டை, 8. சேங்கொட்டை, 9. ஜாதிலிங்கம், 10. ரசம், 11. சீரகம், 12. கடுகு, 13. திப்பிலி இந்தப் பதிமூன்று சரக்கையும் 1, 2, 3, 7, 8, நம்பருள்ள சரக்கைச் சுத்திசெய்தும், மற்றச் சரக்கில் 10வது தவிர 4, 5, 6, 11, 12, 13 நம்பருள்ள சரக்கை வறுத்துப் பொடி செய்து எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு நோவு வந்த மாட்டுக்கு மாட்டின் நோவுக்குத் தக்கபடி கொடுக்கவும்.

12. 1. மாம்பட்டை, 2. மருதம்பட்டை, 3. மகிழம் பட்டை, 4. ஒதியம்பட்டை, 5. அத்திப்பட்டை, 6. இலந்தைப்பட்டை, 7. வரச்சுண்டிசமூலம், 8. வாப்பூலாவேர், 9. காரைவேர், 10. ஆவாரை வேர், 11. ஆலம் விழுது, 12. விடத்தாரை வேர், 13. வெதுப்படக்கைசமூலம், 14. நாகல்பட்டை, 15. பெருமரப்பட்டை (பீநாரி) இவைகள் சமவிடை வீதம் வறுத்து இடித்து ஈர வெங்காயம் பலம் 3, வெந்தயம், வசம்பு, பேய்ப்புடல் வகைக்குப் பலம் 1 இவற்றை நன்றாய்ப் பொடிசெய்து எல்லாவற்றை




யும் மோரில் குழப்பி ஒரு கவளம் கொடுக்கவும். கேழ்வரகு மாவுபோட்டு கஞ்சி காய்ச்சிவைக்கவும்.

13. கல்லுப்பு படி 1, காவல்கொட்டைபடி 1, ஆடுதின்னாப்பாளை பிடி 1, குளித்தாமரை பிடி 1, விழுதி இலை பிடி 1, இவற்றை எல்லாம் நிழலில் உலர்த்தி இடித்து தூள் செய்து கலயத்தில் வைத்துக்கொண்டு, எருமை, பசு எந்த மாடுகளுக்கும் நோவுகண்டால் வீசம்படி உள்ளுக்கு கொடுக்கவும்.

14. ஊமத்தம் வேரை அரைத்து கொம்புத் தேன் கூட்டி மாட்டுக் கொம்பு சிமிழில் வைத்துக்கொண்டு நோவு வந்த மாட்டுக்கு நாக்கில் கொஞ்சம் சிறு மிளகு பரிமாணம் தடவத் தீரும்.

15. கொட்டிக்கிழங்கு, நாய்கொட்டிக்கிழங்கு வகைக்குப் பலம் 1 வீதம் வெந்நீர்விட்டு அரைத்துப் புகட்டவும்.

2. சகலவியாதிக்கும் நசியம் :—1. ரசம், கண்டங்கத்திரிப்பழம் 3, வெற்றிலை 5, மிளகு 11, இவற்றை அரைத்து நசியம்செய்ய சகல வியாதியும் தீரும். கார்வைக்கோல் போடவும், வெந்நீர் வைக்கவும்.

2. 1. வேளைவேர், 2. நாய் வேளைவேர், 3. சிறுகீரை வேர், 4. முடக்கத்தான் வேர், 5. குப்பைமேனி வேர், 6. தும்பைவேர், 7. கோழி ஆவாரைவேர் இவற்றை இடித்து உள்ளி, வசம்பு, மிளகு, இவற்றைச்சேர்த்து அரைத்து பிழிந்து வெள்ளைத் துணியில் வைத்து நசியமிட சகல வியாதியும் தீரும்.

3. ஆனைச்சிலந்தியின் குணம் :—மாட்டின் மேலெல்லாம் கட்டி கட்டியாய் மயிர் உதிரும். அசதியாய் நாளுக்கு நாள் இளைக்கும். இரையை அதப்பித்தள்ளும்.

மருந்து: வேப்பெண்ணெய் சேர் 1, அடைப்பன் பட்டை சார் சேர் 1, எட்டிக்கொட்டை சேர் ¼ இவைகளை எல்லாம் ஒன்றாய்ப்போட்டு எரித்து வேளை ஒன்றுக்கு ¼ சேர் வீதம் 3 நாளைக்கு 3 வேளை கொடுக்கவும். வீட்டில் கட்டிவைக்கவும். 20 நாளைக்கு தினம் காலை மாலை தண்ணீரில் அடிக்கவும்.

4. சுழல் நோயின் குணம்:—சுற்றிச்சுற்றி வரும், கடை தள்ளாடும், இரை எடுக்காது, வாயிலிருந்து நீர் விழும்.

மருந்து: கழற்கொடி இலை, வெள்ளை இண்டு இலை, குப்பைமேனி இலை இவைகளை ஒரு பிடி வீதம் வெந்நீர் விட்டு அரைத்து, மிளகு விராகனிடை 5, பூண்டு விராகனிடை 5, வசம்பு விராகனிடை 3, ஓமம் விராகனிடை 5 இவைகளை இஞ்சி சார்விட்டரைத்து குழப்பி மூன்று வேளை கொடுக்கவும். ஆகாரம்: பழைய வைக்கோல் போடவும். புழுங்கல் அரிசிக் கஞ்சியைக் காய்ச்சி வைக்கவும். 5வது நாள் தெளியும். [ | | ] இந்த விதமாய் இரண்டு விலாவிலும் சூடு போடவும்.

5. தவளை நோயின் குணம்:—நான்கு கால்களையும் தத்தித்தத்தி அடிவைக்கும், கால்கள் சோரும், நடக்க முடியாது, படுத்தால் எழுந்திருக்க முடியாது, இரை எடுக்கும், சாணிபோடும். நெஞ்சு, தொப்புள் இவற்றில் பெரிதாகக் கட்டி வீங்கி இருக்கும்.

மருந்து: 1. கற்பூரவல்லி இலை, சங்கம் இலை இவைகளை துவைத்து ¼ படி சார் பிழிந்து வைத்துக்கொண்டு, மிளகு விராகனிடை 3, ஓமம் விராகனிடை 3, மஞ்சள் விராகனிடை 5, கல்லுப்பு விராகனிடை 2 இவைகளை அரைத்து நான்கு நாளைக்கு காலை மாலை கொடுக்கவும்.





ஆகாரம்: புழுங்கல் அரிசிக் கஞ்சியும், பழைய வைக்கோலும் போடவும். புற்றுமண், செங்கமாத்தூள், மஞ்சள் இவற்றை அரைத்து கொதிக்க வைத்து மேலுக்கு பற்றுபோடவும். ll ll ll ll ll ll இந்த விதமாய் 6 புள்ளடி சூடுபோடவும்.

2. ஒரு இளநீரைக் கொண்டுவந்து ஏழு வரட்டியைக் கீழே வைத்து அதன்மேல் இளநீரை வைத்து மறுபடியும் ஏழு வரட்டியினால் இளநீரை மூடி நெருப்பு மூட்டிப் புடம் போடவும். வரட்டி நன்றாய் எரிந்தவுடன் மேற்படி இளநீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொண்டு மேற்படி கோம்பையை உரலில் போட்டு இடித்துப் பிழிந்து வடிகட்டி எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்க வியாதி குணமாகும்.

6. பொருமல் நோயின் குணம்:—வயிறு உப்பி பொருமியிருக்கும், வயிற்றில் இரைச்சல் கொடுக்கும், வாயினால் நுரை நுரையாய்த் தண்ணீர் வடியும், படுத்துப் படுத்து எழுந்திருக்கும், சாணம் போடாது, ஆகாரம் தின்னமாட்டாது.

மருந்து: 1. எருக்கன் இலை, வெதுப்படக்கி இலை இவைகளை இடித்து ¼ படி சார் பிழிந்து, கல்லுப்பு விராகனிடை 10, ஓமம் விராகனிடை 10 இவை இரண்டையும் அரைத்து மேற்கண்ட சாற்றில் குழப்பி 3 நாளைக்கு தினந்தோறும் காலை நேரம் ஒருவேளை கொடுக்கவும். ஆகாரம்: பழைய வைக்கோல், தும்பை இலைச் சார் பிழிந்து அதில் மிளகு, அரிசித்திப்பிலி இந்த இரண்டையும் இஞ்சி சாற்றில் உரைத்து கண்ணில் கலிக்கம் போடவும். சாணி போடும், நீர்விடும்.

2. சாரணைவேர், உப்பு, கடுக்காய், இவற்றை மோர் விட்டு அரைத்து மோருடன் கலந்து புகட்டவும். இந்த விதமாய் சூடு போடவும்.

7. நீர்க்குன்னலின் குணம்:—நடுக்கும், வாயிலிருந்து நீர்விடும், சாணி இருகலாய்ப் போடும். முதலில் குன்றிமணிக்கொடியை மேற்படி வியாதிகண்ட மாட்டின் கழுத்தில் 3 சுற்றுச் சுற்றிக் கட்டிவைக்கவும்.

மருந்து: சுக்கு, ஓமம், மிளகு, பூண்டு, வசம்பு, குன்றிமணி இலை இவற்றை சமனிடையாய்ச் சேர்த்துப் பசுவின் பால் விட்டு அரைத்துக் காலையில் 3 பொழுது கொடுக்கவும். அரிசித்திப்பிலி, மிளகு இவற்றை வெற்றிலைச்சாற்றில் அரைத்துக் கண்ணில் கலிக்கம் போடவும். ஆகாரம்: பழைய வைக்கோல், தண்ணீர் காட்டக்கூடாது. 5வது நாள் ஒரு பிடி வெதுப்படக்கை இலையையும், அரைப்படி புழுங்கல் அரிசி நொய்யையும் ஒரு மரக்கால் தண்ணீர் விட்டுக் காய்ச்சி முக்கால் மரக்கால் ஆனதும் மேற்படி கஞ்சியை ஆறவைத்துக் காட்டவும்.

8. வாக்குன்னலின் குணம்:—மயிர்க்காம்பு சிலுத்திருக்கும், வைக்கோலை பொய்க் கடியாய்க் கடிக்கும். நீர் விடாது, சாணி ஆட்டுப் புழுக்கையைப்போல் போடும், வயிறு ஏறக்கட்டியிருக்கும், ஆகாரம் எடுக்காது.

மருந்து: விளக்கெண்ணெய் சேர் ½, கொட்டை நீக்கிய புளி சேர் ¼, எள்ளு படி ¼, எள்ளுக்காடி படி 1 இவற்றை விட்டு அரைத்து நல்லெண்ணெய் ¼ சேர் விட்டுக் குழப்பி 3 நாள் காலையில் கொடுக்கவும்.

2. பெருங்காயம், சுக்கு, அரத்தை, கண்டத்திப்பிலி, பெருமருந்துவேர் இவற்றை வகைக்கு பலம் ½ விதம் அரைத்துக் கொடுக்க குணமாகும்.



3. வாகை விதை விராகனிடை 1, வெற்றிலை 15ம் சேர்த்து அரைத்து உள்ளுக்கு கொடுக்கவும். உள்ளிப் பூண்டு விராகனிடை 1, சுக்கு விராகனிடை 1, காயம் விராகனிடை ½, அரிசித்திப்பிலி விராகனிடை 2 இதுகளை குப்பமேனிச்சாற்றில் அரைத்து நல்ல வெள்ளைத் துணியில் வைத்துக் கண் மூக்கு இவற்றில் நசியமிடவும். ஆகாரம்: பழைய வைக்கோல், நொய்க்கஞ்சி.

4. அரைப்பலம் காயத்தை ஒரு வெற்றிலையில் வைத்து உள்ளுக்கு கொடுக்கலாம்.

5. மஞ்சள் விழுது மாங்காய் அளவு, வெங்காயம் படி 1/4, ஒரு முற்றிய தேங்காய் திருகின பூ இந்த மூன்றையும் நன்றாய் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கலாம்.

6. முற்றின தேங்காய் திருகின பூவுடன், பசு மஞ்சள் தேங்காய் அளவு அரைத்து அத்துடன் 1/8 படி நல்லெண்ணெய் சேர்த்துப் பிசைந்து, நல்ல காட்டாமணி இலை ஒன்பது கொண்டுவந்து அதில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கலாம். ஆகாரம்: மறுநாள் நொய்க் கஞ்சி வைக்கவும். 7வது நாள் வியாதி குணமாகும்.

7. முசுமுசுக்கைச் சார் படி ¼, ஆடுதின்னாப்பாளை சார் படி ¼, பெருமருந்து வேர் அரைப்பலம் இம்மூன்றையும் அரைத்து பசுவின் கோமயத்தில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

9. இரத்தக் குன்னலின் குணம்:—நீர் இரத்தம் போலவும், எள்ளு கழுவிய ஜலம் போலவும், சிகப்பாகவும் நீர் விடும். இரண்டு நாளானதும் அசந்து விழும், நடக்க முடியாது, இரை எடுக்காது, மாடு கட்டப்பட்ட இடத்தில் வீச்சு அடிக்கும்.

மருந்து: எள்ளு படி ¼, பச்சை பயித்தம் பருப்பு படி ¼, ஓமம் விராகனிடை 10, விருக்ஷிப்பூ பலம் 2, தாழைமோத்தை சார் படி 1, வாழைக்கிழங்குச்சார் படி ¼ இவைகளை விட்டரைத்துக் குழப்பி மூன்று நாள் ஆறுபொழுது கொடுக்கவும். ஓரிலைத் தாமரையை எலுமிச்சங்காய் அளவு அரைத்து அரைப்படி பசம்பாலில் குழப்பிக்கொடுக்க குணமாகும். ஆகாரம்: பழைய வைக்கோல். வெதுப்புடிக்கை இலையைத் தண்ணீரில் போட்டுக்காய்ச்சி தண்ணீர் வைக்கவும். வியாதிகண்ட மாட்டை காற்றுப்படாத இடத்தில் கட்டிவைக்கவும். நாலாவது நாள் தெளியும்.

10. திமிலை நோயின் குணம்:— நான்கு கால் குளம்புகளும் வளர்ந்துகொண்டு வரும். கால்களைத் தூக்கித் தூக்கி வைக்கும். கால்கள் நிமிர்ந்து அடிவைக்க முடியாது.

மருந்து: வேப்பெண்ணெய் படி ¼, சேங்கொட்டை பலம் 2, குதிரைக்குளம்பு பலம் ½, நிரடிமுத்து பலம் ½, வேப்பம் பருப்பு பலம் ½, கருஞ்சீரகம் பலம் 1, மிளகு பலம் 1, வேப்பம்பட்டை சார் படி ½ மேற்படி சரக்குகளை நன்றாய்ப்பொடிசெய்து தெள்ளி எடுத்துக்கொண்டு வேப்பம்பட்டைச் சாற்றில் குழப்பி அரைப்படி வேப்பெண்ணெயும் ¼ படி வெந்நீரையும் கலந்து மூன்று நாள் காலை வேளையில் கொடுக்கவும். 30 நாளில் குளம்பு தெரிக்கும்.

11. எலும்புருக்கி நோயின் குணம்:— இரண்டு கண்களிலிருந்து பீளைசாறும், நீர்வடியும். நாளுக்கு நாள் உடம்பு இளைக்கும். மாமிசம் குறைந்துகொண்டு வரும். இருமி நின்றும்.



மருந்து: ஆடுதின்னாப்பாளை, காரை இலை, விருக்ஷிப் பட்டை இவைகளை ஒவ்வொன்றும் மாங்காய் அளவு சமனாய் அரைத்துச் சேர்த்து வைத்துக்கொண்டு, வெந்தயம், ஓமம், வெங்காயம், பச்சைப்பயர், வகைக்கு விராகனிடை 10 விதம் எருமை மோர் விட்டு அரைத்து இந்தப் படி 5 பொழுது கொடுக்கவும். ஆகாரம்: பழைய வைக்கோல், வெந்நீர்த் தண்ணீர் காட்டவும். 20 நாளில் குணமாகும்.

12. உதிர வேக்கையின் குணம்:—இரத்தமாகக் கழியும், சாணத்தோடு சேதக்கட்டு விழும், சில சமயத்தில் இரத்தமாகவும், குடகுடவென்றும் கழியும்,

மருந்து: தென்னம் பாளையை அரைத்த விழுது மாங்காய் அளவு, பச்ச மஞ்சள் சார் படி ¼, நல்லெண்ணெய் சேர் ½, உள்ளிப்பூண்டு விராகனிடை 10, கடுக்காய் விராகனிடை 5, குருவச்சிச் சார் சேர் ½, அத்திப்பட்டைச் சார் சேர் ½, ஷை சரக்குகளை அரைத்து எல்லாவற்றையும் கலந்து உள்ளுக்கு இரண்டு நாள் நான்கு பொழுது கொடுக்கவும். ஆகாரம்: பழைய வைக்கோல். நான்கு படித்தண்ணீரில் அத்திப்பட்டை சேர் 1, நொய் படி ¼ போட்டு 3 படியாகக் காய்ந்தவுடன் ஆறவைத்து தண்ணீர் காட்டவும்.

2. அரைப்படி எள்ளை நன்றாய் தோல்போக கழுவி பட்டுப்போல் அரைத்து பசம்பாலிலாவது அல்லது கள்ளிலாவது கலந்து கொடுக்கவும்.

3. மயிர் மாணிக்கம் இடித்த சாற்றை வாங்கி பவழ பஸ்பம் போட்டுக்கொடுக்கவும். ஆகாரம்: பழைய வைக்கோல், நொய்க்கஞ்சி.

4. அரசம்பட்டை, ஆலம்பட்டை, உதியம்பட்டை, கருவம்பட்டை இவற்றை இடித்து வகைக்கு கால்படி சார் விதம் எடுத்துக்கொண்டு இத்துடன் வெங்காரச் சார் படி 1/4, பசுவின்பால் படி 1/4 எல்லாவற்றையும் ஒன்றாய்ச்சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவும். இதில் படியாவிட்டால் வெங்காரம் படி 1/4, மிளகு படி 1/8 இவற்றை அரைத்து 1/8 படி நல்லெண்ணெய்யில் கலந்து கொடுக்க குணப்படும். ஆகாரம்: பழைய வைக்கோல்.

5. 1. கோரைவேர், 2. பொன்னாங்கண்ணி வேர், 3. மயிர் மாணிக்கம், 4. நாணிவேர் 5. சவெங்காரம், 6. கொத்தான், 7. நற்சீரகம், வகைக்கு பலம் 1 விதம் தேங்காய்ப் பாலில் அரைத்து சொரசம் செய்து உள்ளுக்குப் புகட்டவும்.

6. 1. மாம்பட்டை, 2. வில்வப்பட்டை, 3. பனம் பட்டை, 4. காரை இலை, 5. கோவை இலை, 6. சிவனார் வேம்பு, 7. சவெங்காரம், 8. கொத்தான், 9. நற்சீரகம் இவைகளை எல்லாம் வகைக்கு பலம் ½ விதம் அரைத்து பசுவுக்கு எருமை மோரிலும், எருமைக்கு பசு மோரிலும் கொடுக்கவும்.

**13.** குடல்வாதத்தின் குணம். வயிர் எப்பொழுதும் மளமளவென்று இரையும். வயிர் உப்பும். பெருஞ்சாணி போடும். இரையை குதப்பும். பலவிதமாய்ச் சுழியும். படுத்துப் படுத்துப்புரளும். நான்கு கால்களையும் பரப்பிக்கொள்ளும்.

மருந்து: சங்கம் இலை, குப்பமேனி இலை, பிக்களாத்தி இலை, வெருப்புடிக்கை இலை, தழுதாழை, சுக்கு, மிளகு, பூண்டு, ஓமம், வசம்பு, வகைக்கு பலம் 1; பச்சரிசி



இடித்த மாவு படி ¼ இவைகளை எல்லாம் நன்றாய் அரைத்து இவற்றுடன் நல்லெண்ணெய் சேர் 1/4 சேர்த்துப் பிட்டு. நான்கு பொழுது கொடுக்க குணமாகும். ஆகாரம்:—பழைய வைக்கோல், வெந்நீர் தண்ணீர் காட்டவும். ஆறும் நாள் மாட்டை வெளியில் விடவும்.

**14.** கழி வெக்கையின் குணம். மாடு கட்டி இருக்கிற இடம் நாறும். சாணி சக்கைசாரமாய் பீச்சும். வெள்ளையாகவும், இரத்தமாகவும், சீதமாகவும், கொடிப்போலவும் விழும். கண்ணிலிருந்து நீர் வடியும்.

1. மருந்து: முசுமுசுக்கைச் சார் படி 1/2, வெங்காயம் விராகனிடை 10, சீரகம் விராகனிடை 10, ஓமம் விராகனிடை 5, வசம்பு விராகனிடை 5, தென்னம்பாளை விராகனிடை 5, அரைத்த விழுது மாங்காய் அளவு, பச்சைமஞ்சள் சார் படி 1/4, பசுவின் மோர் படி 2 மேற்படி சரக்குகளை அரைத்து மோரில் குழப்பி எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து கலந்து இந்த விதமாய் நாலு வேளை கொடுக்க குணமாகும். ஆகாரம்: கொய்க்கஞ்சி, பழைய வைக்கோல்.

2. சுக்கு, கண்டத்திப்பிலி, கடுக்காய்ப்பூ, அரிசித்திப்பிலி, சிறுநாகப்பூ, காட்டாத்திப்பூ, இரும்பு, வெள்ளை மிளகு வகைக்கு சேர் 1/4, பூண்டு சேர் 1/2, ஓமம் சேர் 1, நெய் சேர் 1½ மேற்படி சரக்குகளை பொன் வறுவலாக வறுத்து, ஓமத்தை மட்டும் மூன்று தடவை வறுத்து எல்லாவற்றையும் இடித்துப் பொடி செய்து, கொடிவேலி வேர் சேர் 1/4 மாவிலிங்கம் பட்டை சேர் 1, இவ்விரண்டையும் பச்சையாக அரைத்து மேற்படி பொடியுடன் கலந்து நெய்யைவிட்டு லேகியமாகக் கிளறி மெழுகு

பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு எலுமிச்சங்காய் அளவு கொடுக்க குணமாகும். ஆகாரம்: பழைய வைக்கோல். கால் பனி நேரம் கழித்து நொய்க்கஞ்சி கொடுக்கவும்.

**15.** அழல் வேக்கையின் குணம். மாடு செருமும். உள் அழன்று வாய் நாறும். மேலெல்லாம் அட்டிகட்டியாக நெருப்பு சுட்டதுபோல வெந்து வழன்று இருக்கும். வைக்கோல் தின்னாது. புல் தின்னும். தண்ணீர் குடிக்கும். வாரா அசதி கொடுக்கும்.

1. மருந்து: பசுமஞ்சள் சார் படி ¼, நல்லெண்ணெய் படி ¼, வெதுப்புடுக்கை சார் படி ¼, கடுக்காய் விராகனிடை 5, ஓமம் விராகனிடை 5, பச்சைப்பயர் படி 1½ மேற்படி சரக்குகளை வெந்நீர்விட்டு அரைத்து மேற்படி சாற்றில் குழப்பி 3 நாள் 6 பொழுது கொடுக்க குணமாகும். கறிமஞ்சளை அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி புண்களின்மேல் போடவும். ஆறு நாளைக்குமேல் 10 நாள் வரையில் தண்ணீரில் அடிக்கவும்.

2. அரைப்பலம் பெருங்காயத்தை 5 வெற்றிலையில் வைத்துக்கொடுக்க குணமாகும்.

3. மாவலிங்கப் பட்டை, பெருமருந்துவேர், கொடிவேலிவேர், சுக்கு, அரத்தை, கண்டத்திப்பிலி வகைக்குப் பலம் ஒன்று வீதம் வைத்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க இவ்வியாதி ஒன்பதாவது நாள் தீரும். ஆகாரம்: பழைய வைக்கோல், நொய்க் கஞ்சி. மாட்டை வெய்யிலிலும், சாற்றுப்பிடிப்பான இடத்திலும் கட்டக்கூடாது.





4. வெதுப்புடுக்கைச் சார், இளம்பாளைச் சார், அத்திப்பட்டைச் சார், நல்லெண்ணெய் இவைகளை சமனாய்க் கலந்து காய்ச்சி ஆறவைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

5. அம்மான் பச்சரிசி, வல்லாரை இலை இவற்றை அரைத்து இதற்குள் இரசபஸ்பத்தை வைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

6. அரைப்படி கழுதாழைச் சாற்றுடன், 1 பலம் மிளகை பால் விட்டரைத்து ½ சேர் நல்லெண்ணெய் விட்டுக் குழப்பி உள்ளுக்கு கொடுக்கவும். மறுநாள் வஞ்ச திலியப்பட்டை, நாகப்பட்டை, மருதம்பட்டை, அடப்பன்பட்டை இவைகளை இடித்து அரைச்சேர் சார் பிழிந்து புகட்ட குணமாகும். நாலாம்நாள் அரிசி இடித்து கஞ்சி காய்ச்சி தண்ணீர் காட்டவும்.

**16.** உடக்கை நோயின் குணம்:—வயிர் உப்பி இருக்கும், உடம்பு குன்னிப்போய் தலைநிமிர்ந்து நிற்காது, கீழே படுக்கமாட்டாது, வாயிலிருந்து நீர் வடியும், அசைவு போடாது, நடக்கமாட்டாது, நின்ற இடம் விட்டு நகராது.

மருந்து: பெருங்காயம் விராகனிடை 1, கல்லுப்பு விராகனிடை 5, ஓமம் விராகனிடை 5, சுக்கு விராகனிடை 5, பிரண்டைச் சார் படி ¼, எருக்கன் இலைச் சார் படி ½ மேற்படி சரக்குகளை மேற்படி சாற்றில் அரைத்து இதே விதமாக 3 பொழுது கொடுக்கவும். அரிசித் திப்பிலி, மிளகு இவற்றை வெற்றிலைசாற்றில் உரைத்து கண்களில் கலிக்கம் போடவும். ஆகாரம்: பழைய வைக்கோல், நொய்க்கஞ்சி, மூன்றும் நாள் கஞ்சி வைக்கவும்.

**17.** கோரோசனைகொண்ட மாட்டின் குணம்:—நாளுக்கு நாள் உடம்பு இளைக்கும். மாமிசம் வற்றிப்போய் உடம்பு எலும்பும் தோலுமாக இருக்கும். புல், வைக்கோல் தின்னாது. இரை செரிக்கும் சமயத்தில் அசந்தாற்போல் குன்னி நிற்கும். சரீரத்தில் இரத்தம் இருக்காது.

மருந்து: வேப்பெண்ணெய் சேர் 1, விளக்கெண்ணெய் சேர் ½, செங்கொட்டை சேர் 1/16, எட்டிக்கொட்டை சேர் ½, வசம்பு சேர் ¼, பெருங்காயம் பலம் 1/16, வெள்ளைக் குங்கிலியம் பலம் ½, கற்பூரவல்லிச்சார் படி 1/16 மேற்படி சாற்றில் மூன்று வகை சரக்கை அரைத்துப்போட்டு மேற்படி எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி பெருகுப்பக்குவத்தில் இறக்கி 2 பொழுது கொடுக்கக் குணமாகும். ஆகாரம்: பழைய வைக்கோல், வெந்நீர் தண்ணீர் காட்டவும்.

**18.** குதிரை வலியின் குணம்:—நாலு கால்களையும் உதைத்துக்கொள்ளும். வாயில் நுரை நுரையாகத் தள்ளும். வயிறு உப்பி இருக்கும். பளிச்சுப் பளிச்சு என்று எழுந்திருக்கும். இசிவு காணும்போது மேல் மூச்சு விடும், கண் சிவக்கும், பிடித்தால் நிற்கமாட்டாது.

1. மருந்து: வேப்பெண்ணெய் சேர் ½, பூண்டு பலம் 1, குதிரைக் குளம்பு சீவிய தூள் பலம் ½, மாட்டின் குளம்பு சீவிய தூள் பலம் ½ மேற்படி சரக்குகளை வேப்பெண்ணெயில் கலந்து காய்ச்சி மேற்படி தைலத்தில் 1 சிரட்டை விதம் மூன்று வேளை கொடுக்க குணமாகும். ஆகாரம்: பழைய வைக்கோல், நொய்க்கஞ்சி.

2. அரைப்பலம் பெருங்காயத்தை 50 வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். மூக்கையும் காதை



K231 N27 66

யும் சுற்றி சூடு போடவும். நெஞ்சில் இந்த விதமாய் III புள்ளடிச் சூடுகள் போடவும்.

3. எருக்கம்பூ மூன்று பிடி கொண்டுவந்து பசுமாட்டின் நீரில் அரைத்துக் கொடுக்க குணமாகும்.

**19.** குடல் வெக்கையின் குணம்:—குடகுடவென்று கழியும், குடல் இத்து இத்து விழும்.

1. மருந்து:— ஒரு பிடி பிரண்டை, ஒரு குத்து மிளகாய் இரண்டையும் அரைத்து நல்ல காட்டாமணி இலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

2. பசுமஞ்சள் அல்லது கரிமஞ்சளை ஒரு நெற்றுத் தேங்காய் திருவின பூவுடன் நார்த்தங்காய் அளவு அரைத்து, நல்லெண்ணெய், வெங்காயச் சார் வகைக்குப் படி ¼ விதம் சேர்த்துக் கலந்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும். இதில் படியாவிட்டால் மறுபடி இந்த மருந்துகளுடன் ¼ படி உருத்தம்மாளை அரைத்து இத்துடன் சேர்த்துக் கொடுக்கவும்.

85495

**20.** சந்தடைப்பான் குணம்:—உடல் குன்னிப்போய் நிற்கும், கழியும், நான்கு கால்களும் வீங்கியிருக்கும்; தடுமாறி நடக்கும்.

1. மருந்து: 1 பலம் கல்லுப்பை வேப்பெண்ணெய் விட்டு அரைத்து வெந்நீரில் குழப்பி கொடுக்கவும். எருக்கம் இலை, எருக்கம் வேர், எருக்கம் பூ இவைகளை இடித்து சார் பிழிந்து உடம்பின்மேல் பூசவும். ஆகாரம்: பழைய வைக்கோல் 3வது நாள் நொய்க் கஞ்சி வைக்கவும்.

2. ஆடாதொடை இலையை இடித்து ¼ படி சார் பிழிந்து, ¼ படி குழந்தைப் பிள்ளைகளின் சிறுநீருடன், கலந்து இரண்டு பொழுது கொடுக்க குணமாகும்.

**21.** படுபிணியின் குணம்:—மாட்டின் காதுகளின் வலப்புறத்திலாவது இடப்புறத்திலாவது தடித்திருக்கும். முன் கால் சப்பை ஓரத்தில் மயிர் சிலுத்திருக்கும்.

மருந்து: அம்மான் பச்சரிசியை அரைத்து ரஸ பதங்கத்தை வைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

**22.** மேன்னி அடைப்பனுக்கு:—குமட்டிக்காய் லேகியம், கோழிக்குஞ்சு, சிறியாநங்கை இவற்றில் ஒன்றை உள்ளுக்குக் கொடுக்க குணமாகும். சதுரக்கள்ளிப் பாலையும், செம்மறியாட்டுப் புழுக்கையையும் பிசைந்து மேன்னியிலும், முன்னங்கால் சப்பைகளிலும் பத்துப் போடவும்.

**23.** விஷக்குன்னலின் குணம்:—தலையை கடிக்கும். உடல் குன்னியிருக்கும். சாணி இளகிப்போகும். மூச்சுகள் அதிக வேகமாகவும் சூடாகவும் வரும்.

1. மருந்து: ஒரு பலம் மிளகை 5 வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

2. ஒரு பலம் பெருங்காயத்தை ஒரு கத்தரிக்காய்க்குள் வைத்துக் கொடுக்க குணமாம்.

**24.** மாடுகளுக்கு மலடு நீங்க:—1. 10 பலம் ஆனை நெரிஞ்சிலைக் கொண்டுவந்து ஒரு முற்றிய தேங்காய் திருகிய பூவுடன் கலந்து இடித்து தினம் காலை மாலை இரண்டு வேளையும் மூன்று நாள் 6 பொழுது கொடுக்க மலடு நீங்கி மாடுகள் சினைப்படும். மருந்து கொடுத்து 10 நாழிக்குமேல் தண்ணீர் காட்டவும்.

2. இரண்டு பலம் அரப்பு, காட்டுக் குறிஞ்சா, குப்பமேனிசமூலம் வகைக்கு ஒரு பிடி வீதம் அரைத்து





பச்சைத்தண்ணீரில் குழப்பி கொடுக்க மலட்டுப் பூச்சிகள் விழுந்து மலடு நீங்கி மாடுகள் சினைப்படும். சாயந்திரம் வெந்நீர் தண்ணீர் வைக்கவும்.

3. பாதாள மூலிகையும், தேங்காய் பூவையும் சேர்த்து புட்டவித்துக் கொடுக்க மலடு நீங்கி மாடுகள் சினைப்படும். 20 நாழிகைக்கு மேல் தண்ணீர் காட்டவும்.

4. தென்னம்பாளை 1, ஜாதிக்காய், ஜாதிபத்திரி வகைக்குப் பலம் 1, கிராம்பு, ஏலக்காய் வகைக்குப் பலம் 1/2 பசுவின் பால் விட்டு இடித்து உள்ளுக்குக் கொடுக்க மாடுகளின் வயிற்றில் கெர்ப்பப்பையிலிருக்கும் பூச்சிகள் விழுந்து மாடு சினைப்படும்.

**25.** கன்றுபோட வருத்தப்படும் மாடுகளுக்கு:—நாகதாளி இலைச்சாறு, விளக்கெண்ணெய் வகைக்குப் படி 1/4 இரண்டையும் கலக்கிப் போட்டினால் சிரமப்படாமல் கன்று போடும்.

**26.** வயிற்றில் மறித்துப்போன கன்றுகள் வெளிப்பட:- இந்துப்பு; பெருங்காயம் வகைக்குப் பலம் 1/2 இரண்டையும் தூள் செய்து வெந்நீரில் கலக்கி மாட்டுக்கு கொடுக்க கன்று உடனே வெளிப்படும்.

**27.** கற்பம் அடிபட்ட மாட்டுக்கு:—8 ரூ. எடை பேதி உப்பை ஒரு ஆழாக்கு கஞ்சியில் கலந்து கொடுக்க பேதியாகி பிண்டம் வெளிப்படும்.

**28.** கன்றுபோட்ட மாடுகள் நஞ்சு போடாவிட்டால்:-

1. இரண்டு படி நெல்லை ஒன்று இரண்டாகக் குத்தி உமியைப் புடைக்காமல் 1/2 சேர் பனைவெல்லம் கலந்து மாடு தின்னும்படி வைத்தால் 5 நிமிஷத்திற்கெல்லாம் நஞ்சு போகும்.

2. மூங்கில் தழை அல்லது நாணல் புல், பேய்க்கரும்பு அல்லது வெண்டைக்காய் 15, இவைகளில் ஏதையாவது போட்டு தின்னும்படி செய்தாலும் நஞ்சு போகும்.

3. ஒரு படி கம்புமாவைப் புட்டாக அவித்து அத்துடன் 2 பலம் பனைவெல்லத்தை சேர்த்துக் கொடுக்க நஞ்சு போகும்.

4. எள்ளு, பனைவெல்லம் வகைக்கு 10 ரூ. எடை சேர்த்து நன்றாய் இடித்து ஒரு படி கஞ்சியில் கலக்கிக் கொடுக்க நஞ்சு போகும்.

5. 10 அவுன்ஸ் நாட்டு சாராயமும் அதற்கு சமன் தண்ணீரும் கலந்து கொடுக்க நஞ்சு போகும்.

**29.** நஞ்சுக்கொடியை தின்ற மாட்டுக்கு:—நஞ்சு வயிற்றில் போய் இரத்தங்களில் கலந்து நாளுக்கு நாள் பால் வற்றி கன்றுகளுக்குப் பால் இல்லாமல் போய் விடும். மாடும் இளைத்துப்போகும்.

மருந்து: ஒன்னரைச்சேர் முடக்கத்தான் செடியை சமூலத்துடன் பிடுங்கி வந்து இடித்து, 6 படி புளித்தகாடி விட்டுக் கலக்கி ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் முதல் 3 நாளைக்கு நாள் 1-க்கு இரண்டு வேளை ஒரு படி பசுவின் மோருடன் கலந்து போட்டிவரில் வயிற்றில் தங்கியிருக்கும் நஞ்சு ஜீரணமாகி சாணியுடன் கலந்து விழும். உடல் தேறும். ஆகாரம்: பழய வைக்கோல், தண்ணீரை சுட வைத்து ஆறின பிறகு தண்ணீர் காட்டவும்.

2. புளியம் பிரண்டையை சுட்டு காடியில் கலக்கி கொடுக்கவும். அல்லது குமட்டி இலையை இடித்துச்சாறு பிழிந்து கொடுக்கவும். அல்லது விளக்கெண்ணெய் அடிப்பட்ட வண்டியைப் புகட்டவும்.



**30.** 1. கன்றை விரும்பாத மாட்டிற்கு:—உத்தாமணி இலை 3 பிடி, கீழா நெல்லி இலை 2 பிடி இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து அரைத்து தாயின் முதுகிலும் கன்றின் முதுகிலும் தடவ தாய் கன்றை நத்தும்.

2. தாளி இலை பிடி 3ஐ அரைத்து 1/8 படி நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து உருண்டையாகச் செய்து காலை, மாலை இரண்டு வேளை மூன்று நாளைக்கு ஆறு பொழுது கொடுக்கவும்.

3. எழுத்தாணிப்பூண்டும் அம்மான் பச்சரிசி இவ்விரண்டையும் பசும்பால் விட்டு அரைத்து பசும்பால் கலந்து புகட்டவும்.

4. வேலிப் பருத்தியும், வெண்குன்றியும் அரைத்து பசுவின் பேரிலும் கன்றின் பேரிலும் தடவவும்.

5. கோரோசனையும் குன்றுமணி வேரும் பில்லுடன் சேர்த்துக் கொடுக்கவும்.

6. சிறுபுள்ளடி, சித்தாரை, அழிஞ்சிக் கொழுந்து, இண்டங்கொழுந்து, வேளைவேர், நாய் வேளைவேர், குமளம் வேர், கீழாநெல்லி, திருமேனிப்பருத்தி இத்துடன் வெள்ளுள்ளி, வசம்பு இவற்றை நறுக்கி நசியமிடவும்.

7. ஆலம்பட்டை, அத்திப்பட்டை இவற்றைக் கொண்டுவந்து பசுவின்பால் விட்டு அரைத்து கன்றின் முதுகிலும், பசுவின் முகத்திலும், உடம்பிலும் பூசவும்.

8. கீழாநெல்லி சமூலத்தைக்கொண்டுவந்து கொஞ்சம் உப்பும் பழம்மோரும் கூட்டி அரைத்து பசுவுக்கும் கன்றுக்கும் முகத்தில் தடவவும்.

**31.** பால் இல்லாத மாட்டிற்கு:—1. பனைவெல்லம் 1 தூக்கு, வெங்காயம் 1 தூக்கு, முலை சாப்பான் கிழங்கு

½ தூக்கு இம் மூன்றையும் இடித்து ஒவ்வொரு வேளைக்கு ஒரு தடவையாக 3 நாள் காலை நேரத்தில் கொடுத்து வர, பால் நன்றாய்ச் சுரந்து நன்றாய்க் கறக்கும்.

2. தினமானம் கள்ளு அடி மண்டி 2 படி வீதம் 3 நாளைக்கு காட்டினால் நன்றாய் பால் பெருகும்.

3. கொள்ளு அல்லது பச்சப்பயர், கடலை, பருத்திக் கொட்டை, அரிசிமா, உளுத்தம்மாவு, அகத்திக்கீரை, தேங்காய்ப்புண்ணாக்கு, எள்ளுப்புண்ணாக்கு இவற்றில் ஏதுகளை வைத்து வந்தாலும் பால் சுரக்கும். பருத்திக் கொட்டை, அரிசிமாவு, உளுத்தம்மாவு, சோளக்கூழ் இவைகளுக்கு ஜாஸ்தியாய் பால் விருத்தியாகும்.

4. கெப்பு இண்டங்கிழங்கையும் முத்துச்சோளத்தையும் அரைத்து கழுநீரில் குழப்பி மூன்று நாள் வைத்திருந்து நாலாம் நாள் காட்டவும்.

**32.** ஆமணக்குபூ கோட்டை முதலியவற்றை தின்ற மாடுகளுக்கு:—வயிர் பொருமும், இரை எடுக்காது.

மருந்து:—கொவிஞ்சி இலை ¼ படி. கொண்டுவந்து இடித்து வெந்நீரில் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும்.

**33.** சோளப்பயிர் தின்ற மாடுகளுக்கு:—வயிர் பொருமி வயிர் உப்பும்.

1. மருந்து:—இரண்டு பலம் மிளகை அரைத்து அவுரி இலைச்சாற்றை மூக்கிலும், காதிலும் கசியவிடவும்.

2. குப்பைமேனி இலை, நாயுருவி இலை, பழம்பாசி இலை இம்மூன்றையும் சமனிடையாக அரைத்துக் காடியில் கலக்கிக்கொடுக்க குணமாகும். 2, 3 மணிக்கு மேல்படில் மருந்தினால் பிரயோஜனப்படமாட்டாது.





**34.** பாம்புகடித்தால் அதன் குணம்:—இரு கண்களும் நீலம்போல இருக்கும், நான்கு கால்களும் தடுமாறும், வயிர் உப்பும், கண், மண்டை இவைகளிருக்கும் மயிரைக் கையினால் தொட்டு பிடுங்கினால் தொடுவதற்கு முந்தி கையோடு வந்துவிடும்.

1. மருந்து:—பெருமருந்து வேர்ப்பட்டை, அழிஞ்சி வேர்ப் பட்டை, எட்டிவேர்ப் பட்டை, குட்டித் தக்காளி வேர்ப் பட்டை; இலுப்பைப் புண்ணாக்கு, கஸ்தூரி மஞ்சள், வசம்பு, வெள்ளுள்ளி, கருஞ்சீரகம் இவைகளை ஒரு சமனிடை ஊமத்தை இலைச் சாற்றினாலும், குப்பைமேனி இலைச் சாற்றினாலும் அரைத்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் மாத்திரைசெய்து வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

2. மிளகை, மிளகுசாரணைச் சாற்றில் அரைத்துக் கண்ணிலும், குப்பைமேனிச்சாற்றில் அரைத்துக் காதிலும் கசியவிட சகல விஷங்களும் தீரும்.

3. ஆகாச கெருடன் கிழங்கையாவது கொடியையாவது பசம்பாலிலாவது வெந்நீரிலாவது அரைத்து உள்ளுக்கு கொடுக்கச் சௌக்கியமாகும்.

4. ஆடுதின்னாப்பாளை, குப்பைமேனி இலை, சங்கம்வேர் பட்டை, வெள்ளெருக்கம்வேர் பட்டை, ஆகாயக் கெருடன் கிழங்கு, இலுப்பைப்புண்ணாக்கு, உத்தாமணி இலை, மாவலிங்கப்பட்டை, காட்டு முருங்க இலை, எட்டிவேர் பட்டை, வசம்பு, கருஞ்சீரகம், பெருமரத்துப்பட்டை, சிராசுக்கொடி, ஊமத்தை இலை, நாயுருவி இலை, அவுரி இலை, பெருந்துத்தி இலை இவைகளை சமனிடை அரைத்து நெல்லிக்காய் பிரமாணம் உருண்டை செய்து பேய்ச்சுரை

இலையில் வைத்து பாம்பு கடித்த மாட்டுக்கு உள்ளுக்குக் கொடுக்கவும்.

5. சிறியாநங்கை வேரை அரைத்துக் கொடுக்க குணமாகும்.

6. முளகாய் நங்கைவேர் 1 பிடியும், 1/4 பலம் மிளகையும் அரைத்துக் கொடுக்க குணமாகும்.

7. கருஊமத்தைச் சாற்றை மூக்கில் நசியமிட குணமாகும்.

8. தும்பை இலை சாற்றில் முலைப்பாலைக் கலந்து 1/4 சேர் உள்ளுக்கு கொடுக்க குணமாகும்.

9. மிதிபாகல் இலை சாற்றை பிழிந்து காடியில் கலந்து 3 நாள் 6 பொழுது கொடுக்க சகல வியாதியும் தீரும்.

10. பாம்பு கடித்த மாட்டின் காதுகளை நுனியில் கொஞ்சம் அறுத்து இரத்தம் வடியும்படி விட்டால் விஷம் இறங்கும்.

11. வெள்ளை பூண்டு, முருங்கை இலை, பாகல் இலை, வசம்பு, மிளகு, இவற்றை நறுக்கி இவற்றுடன் சிறு நீர் கூட்டி வெள்ளைத் துணியில் வைத்து மூக்கில் பிழிய சௌகரியமாகும்.

12. கொல்லன் கோவைக் கிழங்கு, கரிலைக் கிழங்கு இவற்றை இளம் வெந்நீரில் அரைத்துப் புகட்டவும்.

13. வேலிப்பருத்தி, பேய்பீர்க்கு, விழுதி இலை, சிறுகுறிஞ்சா, வசம்பு, மிளகு, பூண்டு இவற்றை அரைத்து உள்ளுக்குப் புகட்டவும்.

**35.** மாகேளுக்கு விஷம் வைக்கப்பட்டால் மருந்து:—

1. நாயின் மலத்தை தண்ணீரில் கரைத்து உள்ளுக்கு கொடுக்க குணமாம்.



2. மாசிக்காயை கஷாயம் போட்டு 1/4 மணிக்கு ஒரு தரமாக ஐந்து பொழுது கொடுக்க சௌகரியமாகும்.

**36.** விஷங்களுக்கு கோழம்பு:—1. வெள்ளைப் பாஷாணம், 2. நாடமிடுபிசிதி, 3. ரசம், 4. கந்தகம், 5. மனோசிலை, 6. கல்நார், 7. பெருங்காயம், 8. குருந்துருசு, 9. நிம்ப விதை இவைகளுக்கு சமனிடை நேர்வாளம், சமனிடை எட்டிக்கொட்டை இவைகளை சுத்தி செய்து எருக்கம்பால் விட்டு அரைத்து ஒரு ஜாமம் ஆனபிறகு வேப்பெண்ணெய் விட்டு அரைத்து மாட்டுக்கொம்புச் சிமிழில் வைத்துக்கொண்டு மிளகு பிரமாணம் உருட்டி சகல வியாதிக்கும் சகல விஷத்துக்கும் கொடுக்க தீரும்.

1. பவளக் குன்றிமணி, 2. அழிஞ்சி விதை, 3. வாகை விதை, 4. கழக்கோடி விதை, 5. எட்டி விதை, 6. பேய்ப்பீர்க்கு விதை, 7. பேய்ச்சுரை விதை, 8. சேருக்காரம், 9. கற் கடுகு, 10. நவசாரம், 11. கெவுரி பாஷாணம், 12. அரிதாரம், 13. தில்லை விதை, 14. மாவிதை, 15. நேர்வாளம் படி (கால்), 16. பச்சநாவி, 17. வெங்காரம், 18. துருசு, 19. துத்தம், 20. நீலம் வகைக்கு விராகனிடை 2, விதை வகைகள் விராகனிடை 4 இந்த 20 சரக்குகளையும் சமானமாக கூட்டி வெயிலில் உலர்த்தி 4 நாழி கழித்து எடுத்து ஒரு ஜாமம் அரைத்து ஒரு மாட்டுக்கொம்பு சிமிழில் வைத்துக்கொண்டு எந்த நோய் வந்தாலும், விஷம் தீண்டினாலும் ஒருபணவிடை வெற்றிலையில் வைத்து உள்ளுக்கு கொடுக்க சகலவிஷ நோயும் தீரும். இவ்விதமாக மனிதருக்கு நல்ல பாம்பு, வழலை, புடையன் முதலிய விஷங்களுக்கும் நாக்கில் தேய்த்து வெந்நீர் தண்ணீர் கொடுக்க குணமாகும்.

**37.** கழுத்தில் வலியுண்டாகி வேலைகள் செய்ய சிரமப் படும் மாடுகளுக்கு: உடனே அந்த மாட்டை வேலை செய்யாமல் கட்டிவைத்து, நல்லெண்ணெய்யைக் காய்ச்சி உப்பைத் துணியில் பொட்டணமாகக் கட்டி நெய் எண்ணெய்யில் தோய்த்து ஒத்தடம் கொடுக்கவும்.

2. விரளிமஞ்சள் அல்லது மிளகு பொடி செய்து நல்லெண்ணெய்யில் குழப்பி பத்துப்போடவும்.

3. புழுங்கல் அரிசியை அரைத்து தண்ணீர் விட்டுக் குழப்பி புளிக்க வைத்து கழுத்தில் தடவி வண்டியில் பூட்டலாம்.

4. விரளிமஞ்சள், செம்மறிஆட்டுச்சாணி, புத்துமண், கேழ்வரகு, மிளகு இவைகளை அரைத்து அத்துடன் 1/4 சேர் நல்லெண்ணெய் விட்டுக் கொதிப்பித்து பற்றுப் போடவும்.

5. விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெய்யை எருக்கம்பாலில் கலந்து பற்றுப்போட குணமாகும்.

**38.** வாய்க்கோமாரியின் குணம்:—வாயிலிருந்து நீர் வடியும், வைக்கோல் தின்னாது, மேயாது.

மருந்து: அளிந்த மொந்தம் பழம் 50, நாட்டுச் சர்க்கரை பலம் 5, கடைநெய் பலம் 5, இவைகளை சேர்த்து பிசைந்து உள்ளுக்கு கொடுக்கவும், ஒரு ஜாமம் கழிந்து பச்சைப்பயர் 1/2 படி பச்சை அரிசி 1/2 படி சேர்த்து கஞ்சி காய்ச்சி தண்ணீர் காட்டவும்.

**39.** மாடுகட்டுமிடத்தில் மாடுகளுக்கு வியாதி உண்டாகாமல் தடுக்கக்கூடிய உபாயங்கள்.

1. குரைக்கொம்பை ஏழு புள்ளாக நறுக்கி அத்துடன் அழிஞ்சிக்கொம்பு, பூலாங் கொப்பு இவைகளைச்



சேர்த்து மாடுகட்டப்படும் இடத்தில் புதைத்து வைக்க வியாதி உண்டாகாது.

2. பன்றி நெய்யை ஒரு மண் பாண்டத்தில் விட்டு துணியால் மூடி கொட்டிலில் கட்டிவைத்தால் வியாதி அணுகாது. வியாதி கண்ட மாட்டுக்கு 1/16 படி நெய்யை உள்ளுக்கு கொடுக்கலாம்.

3. சிவனார் வேம்புக்கிழங்கை செவ்வாய் கிழமையில் பிடுங்கிவந்து மாட்டுக்கட்டுத்தரியில் வைத்து பச்சையரிசிப் பொங்கலிட்டு தூப தீபம் கொடுத்து அந்த சாதத்தில் பிடி சாதமும் அந்த கிழங்கையும் கட்டுத்தரியிலும் கொட்டிலின் வாசல் படியிலும் புதைத்து வைக்க மாடுகளுக்கு வியாதி யுண்டாகாது.

அதிகமாய்க் கழிகிற மாட்டுக்கு:—பெருமருந்து

**40.** வேர் பலம் 1, மிளகாய் பலம் 1 இவற்றை அரைத்து 1/2 சேர் நல்லெண்ணெய்யில் குழப்பி உள்ளுக்கு கொடுக்க கழியப்பட்ட மாடுகள் சாணி இருகி புழுக்கை போடும்.

கழியப்பட்ட மாட்டுக்கும்

2. வண்டியில் பூட்டினால் கழியப்பட்ட மாட்டுக்கும் எப்பொழுதும் கழிந்து கொண்டிருக்கிற மாட்டுக்கும் இளைத்த மாட்டுக்கும் அதிகமாக சாணி போடப்பட்ட மாடுகளுக்கும் அடியில்கண்ட மருந்தை கொடுத்து மறு நாள் பச்சரிசி நொய் கஞ்சி வைக்கவும். 10 நாள் வரையில் மாட்டை வண்டியில் பூட்டப்படாது.

3. ஒரு பிடி பிரண்டையும், ஒரு பிடி உப்பும் வைத்து அரைத்து கழிகிற மாட்டுக்கு கொடுத்தால் சௌகரியமாகி விடும்.

4. ஒரு பிடி கஞ்சா இலையை அரைத்து வில்லை தட்டி எருமை மோருடன் கலந்து கொடுக்கத் தீரும்.

மேற்கண்ட மருந்தில் நிரவிடில் அம்மான் பச்சரிசி இலை, துத்தி இலை, உளுந்தம்மாவு, அரிசிமாவு இவைகளைச் சேர்த்து கவளமாகப் போட கழிச்சல் நிற்கும்.

5. வட்டத்துத்தி, ஆகாசத்தாமரை, காரை இலை. வெடத்தாரை இலை, சங்கம் இலை, பெருமருந்து இலை, கோழி ஆவாரை இலை, குப்பமேனி இலை வகைக்கு ஒரு பிடி, மாவலிங்கப் பட்டை, மருதம் பட்டை, முள் இலவம் பட்டை, வகைக்குப் பலம் 1, மொசுதம் பூ, தென்னம் பாளை, கார்நெற்பொரி படி 3, விராளி மஞ்சள் சேர் 1, கடுக்காய்ப்பூ சேர் 1, மாசிக்காய் பலம் 1, வெள்ளை மிளகு பலம் ¼, கசகசா பலம் 1, குரோசாணி ஓமம் பலம் 1, சோம்பு பலம் ½, சுக்கு பலம் 2, வெங்காயம் சேர் ௨, வெற்றிலை 50, மேற்கண்டவற்றை பொடி செய்து எல்லாவற்றையும் ஒன்றாய் சேர்த்து நல்லெண்ணெய் 1½ சேர் விட்டுப் பிசைந்து வெற்றிலைக்குள் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். மருந்து கொடுத்த 3 மணி நேரம் கழித்து வைக்கோல் போடவும். மேல்கண்ட அளவு இரண்டு மாடுகளுக்கு கொடுக்கலாம்.

**41.** விரியன் கடியின் குணம்:—விதை, நாக்கு, கனைக்கால் இவ்விடங்களில் வீங்கும் நாக்குத் தடித்திருக்கும்.

1. மருந்து:—அகத்திக் கொழுந்து, வசம்பு, உத்தாமணி இலை, பூண்டு, குப்பைமேனி இலை இவைகளை ஒரு நிரையாய் அரைத்து உள்ளுக்குக் கொடுத்து உடம்பிலும் பூசவும்.

2. மாவலிங்கப் பட்டை, குருஞ்சா வேர், வசம்பு, புனைபூரல் பட்டை வகைக்கு பலம் மூன்று விதம் அரைத்து சிறு நீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.



3. தும்பை இலை, பேய்ச்சுரை இலை, காட்டுக்கரணைக் கிழங்கு இவைகளை சமனிடையாய் அரைத்து செய்யில் குழப்பிக் கொடுக்கத்தீரும்.

**42.** குளவி கொட்டின மாட்டின் குணம்:—திரேகம் எங்கும் தடிக்கும்.

மருந்து:—சுக்கு பலம் 1, சீரகம் பலம் 1; நொச்சிக் கொழுந்து பிடி 3 இவற்றை அரைத்து தண்ணீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும். ஆகாரம்: பழைய வைக்கோல், மருந்து கொடுத்த 3 மணி நேரத்திற்குப் பிறகு சூடாரிய வெந்நீர் தண்ணீர் காட்டவும்.

**43.** புடையன்குத்து வியாதியின் குணம்:—உடம்பு முழுதும் வெடிப்பு கண்டு விரியும்.

மருந்து:—குருஞ்சா இலைச்சார் படி ½ பசுவின் பால் படி ½யும் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவும். ஆகாரம்: பழைய வைக்கோல், சூடாரிய வெந்நீர் தண்ணீர் காட்டவும்.

**44.** சாரையடியின் குணம்:—மாட்டிற்கு இரண்டு கண்ணும் தெரியாமல் நிற்கும்.

மருந்து:—1. நறுவிலிப்பட்டை பலம் 2, செல்லிப் பட்டை பலம் 2 இவற்றை வெந்நீர் விட்டு இடித்து வெந்நீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க வியாதி தீரும்.

2. இலந்தை பட்டையும், பச்சை அரிசியும் இடித்து மூன்று கவளம் உள்ளுக்கு கொடுக்கவும்.

3. நான்கு வாழைப்பூவையும் வெடத்தாரை இலையும் இடித்துக்கொடுக்கவும். மறுநாள் புத்தான் சோறு

கொண்டுவந்து 4 படி தண்ணீரில் கலந்து வைக்கவும். பழைய வைக்கோல் போடவும். நான்காம் நாள் வெந்நீர் தண்ணீர் வைக்கவும்.

4. நறுவிலிப்பட்டை, சங்கம்வேர், கோழிக்காரம் இம்மூன்றையும் அரைத்து தண்ணீரில் கலக்கிப்புகட்டவும்.

5. காரை இலை, கிளுவைப்பட்டை இவை இரண்டையும் அரைத்து ஒரு உரித்த தேங்காய் பிரமாணம் எடுத்து நீராகத் தண்ணீரில் கலக்கிப்புகட்டவும்.

6. புரசம் விரை, 2. மாம் பருப்பு, 3. புங்கம் விரை, 4. பீர்க்கம் விரை, 5. பேய்ச்சுரை விரை, 6. சுக்கு, 7. திப்பிலி, 8. மிளகு, இவற்றை சமனாய்க்கூட்டி எலுமிச்சம்பழச் சார் விட்டு அரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி முலைப்பாலிலாகிலும் வெந்நெய்யிலாகிலும் உரைத்து கலிக்கமிட குணமாகும்.

**45.** கண்ணில் பூவிழுந்த மாட்டின் குணம்:—மேயும் போது நாணல் குச்சிகள் முதலியன குத்தப்படுவதினாலும், மாடுகள் சண்டை போடும்போது கொம்புகள் கண்ணில் படுவதினாலும், அடிக்கும்போது தவறி படுவதினாலும் கண்ணிலிருந்து நீர் வடியும், நாளுக்கு நாள் பார்வை குறையும். கருவிழியில் நாளுக்கு நாள் வெள்ளைப் புள்ளிகள் காணப்பட்டு அதிக வெள்ளையாக கருவிழி மாறிவிடும்.

1. மருந்து:—மிளகு, புழுங்கல் அரிசி இவற்றை நன்றாய்ப்பொடிசெய்து பேய்க்கும்மட்டிச் சாற்றில் கலந்து ஒரு வெள்ளைத் துணியில் வைத்து கண்ணில் பிழிய சௌகரியமாகும்.



2. ஆமணக்கு இலையும் உப்பும் வைத்துக் கசக்கி வெள்ளைத்துணியில் வைத்து மூன்று நாள் 6 பொழுது கண்ணில் பிழிய சௌகரியமாகும்.

3. சிறுகீரைத்தண்டு சுட்ட சாம்பலைத் தேனில் குழைத்து கண்ணிலிட குணமாகும்.

4. மூக்கரைச்சாரணை வேரைக்கொண்டுவந்து பசும்பாலில் அவித்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலில் குழப்பி கண்களில்போட குணமாகும்.

5. வெள்ளைப்பீக்கானை நன்றாய் பொடி செய்து கண்ணில் கலிக்கமிட குணமாகும்.

6. ஆலம்பாலில் மிளகை அரைத்து கண்ணில் கலிக்கமிட குணமாகும்.

7. கொள்ளு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் மாடுகளுக்கு இரவில் கண் தெரியாது. இன்னும் அளவிற்கு மிஞ்சி போட்டால் பகலில்கூட கண் தெரியாது. கொம்பில் அடிப்பட்டாலும் காளை இடிக்கப்பட்டாலும் கண் மறைவதும் உண்டு. இதற்கு தினம் 1 தூக்கு கீரை அகத்திக்கீரையை உபயோகப்படுத்தினால் கண்ணில் உள்ள நீர் விலகி கண் நன்றாய் தெரியும். அல்லது பருத்திக்கொட்டை, காராமணிப்பயர் இந்த ஆகாரங்களை கொள்ளுக்குப் பதிலாக மாற்றி வைத்தால் கண் நன்றாய் தெரியும்.

**46.** சேரியாமை அல்லது அஜீரண நோயின் குணம்:—ஆகாரம் ஜீரணமாகாமல் வயிர் உப்பும், காற்றுப்பரியும். சாணம் போடும். அசை போடாது.

மருந்து:—1. 2 பலம் மிளகை 15 வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

**47.** வயிர் உப்பிசத்திற்கு மருந்து. 1. காட்டுத் துவரை, 2. விடத்தாத்தி இலை, 3. ஆத்தி இலை, 4. வரப்பூலா, 5. நாகல், 6. துடரிக்கொழுந்து, 7. கருவைக் கொழுந்து, 8. எலந்தைக்கொழுந்து, 9. காரைக் கொழுந்து, 10. நீர்ப்பூலா இந்த பத்துவகைக் கொழுந்தையும் கொண்டுவந்து, பிலாப்பிஞ்சு, ஆவாரங்கொழுந்து, மாவலிங்கப்பட்டை, பெருமருந்து வேர் சமனிடையாய்ச் சேர்த்து காடிவிட்டு அரைத்து வேளை ஒன்றுக்கு ஒரு கவளம் தேங்காய்ப் பிரமாணம் விதம் மூன்று நாளைக்கு கொடுக்கவும். அத்திப்பட்டையைக் கஞ்சி காய்ச்சி வைக்கவும்.

2. உளுத்தம்மாவு, பச்சைபயத்தம்மாவு, அரிசிமாவு வகைக்கு அரைக்கால் படி சீரகம் 2 பைசா, வெங்காயம் 2 பைசா, இவற்றை சேர்த்து அரைத்து கொடுக்கவும்.

**48.** கெற்பப் பை வெளியில்தள்ளுவதின் குணம். பலஹீனமான மாடுகள் கெற்பமானால் கன்று போட 2, 3, மாசத்திற்கு முன்பே மாடு படுக்கும்போது கெற்பப்பையின் சிலபாகம் வெளியில் வரும். எழுந்தால் உள்ளே போய்விடும்.

மருந்து:—புளி அல்லது பூலா அல்லது பிரம்பு இவைகளில் எதையாவது சிறிய வளையம் செய்து மாட்டின் இடையில் உள்பாகத்தில் வைத்துவிட்டால் பிறகு அவ்விதமாக உண்டாகாது.

**49.** கொம்பு ஒடிந்த மாட்டுக்கு:—ஒடிந்த கொம்பின்மேல் வெள்ளைத் துணியைச்சுற்றி மண்ணெண்ணெய்யையாவது தேங்காய் எண்ணெய்யையாவது விளக்கெண்



ணெய்யாவது ஏதாவது ஒன்றை அடிக்கடி போட்டுவந்தால் புண் ஆறி சார்ந்துவிடும்.

2. கர்பாலிக் ஆஸிட் என்ற மருந்தை தேங்காய் எண்ணெய்யில்குழப்பி கொம்பின்மேல்தடவி மேலே துணியைச்சுற்றி வைக்கவும். அடிக்கடி தேங்காய் எண்ணெய்யை மேலே போட்டு வரவேணும்.

3. ஆலம்பாலைக் கறந்து அந்த இடத்தில் விட்டு துணியைச்சுற்றி கட்டிவைக்க ஆறிவிடும்.

**50.** புண் புழுக்கள் உண்டாகும் மாட்டுக்கு:—மாடுகள் சண்டைப்படுவதனாலும், கீழே விழுந்து புண்கள் உண்டாவதினாலும், அந்தப்புண்களின்பேரில் ஈக்கள் உட்கார்ந்து ஷை புண்களில் புழுக்கள் உண்டாகி நாளடைவில் நாற்றம் அடித்து மாடுகளின் தேகத்தை துளைத்து கெடுதல் உண்டாக்கிவிடும்.

1. மருந்து:—வெந்நீர் தண்ணீரினால் புண்ணை சுத்தப்படுத்தி புண்களின்பேரில் மிந்திரிக்கொட்டை எண்ணெய் அல்லது வேப்பம் எண்ணெய்யாவது போட்டுவர சீக்கிரம் புண்கள் ஆறிவிடும். புழுக்களும் உண்டாக மாட்டாது.

2. சவுக்காரத்தை தண்ணீரில் போட்டுக் காய்ச்சி அத்தண்ணீரினால் சுத்தம்செய்து, ஓட்டடை, சுண்ணாம்பு இவற்றை இரண்டையும் கலந்து, ஷை புண்களில் வைத்து வந்தால் சீக்கிரம் குணமடையும்.

3. புண்ணை வெந்நீரினால் சுத்தப்படுத்தி தாரைப் பூசிவிட்டால் புழுச்சறிந்து புண் ஆறிவிடும்.

4. மஞ்சளையும், கல்யாண முருங்கை இலையையும் அரைத்து புண்ணின் மேல் தடவினால் புண் ஆறிவிடும்.

அல்லது புது செங்கலைப் பொடி செய்து அந்தப்பொடியை புண்ணின்பேரில் போட்டால் புண் ஆறிவிடும்.

5. குன்றிமணி வேரை பழுந்தக்குள் வைத்துத் திரித்து, "ஆரம் பூண்ட மணிமார்பழகா உந்தன் திருநாட்டில், வீரம் பூண்ட மரங்களிலெல்லாம் இலைகள் உதிர்ந்து கிடப்பானேன். வாரம் பேசி வழக்குரைத்து மண்ணிலிருந்து வறுப்பேசி, ஊருஞ்சொல்வான் கிளையதுபோல் உப்பு உதிர்ந்ததுபோல உதிர்ந்துபோகக் கடவது. நாம் மயிலாமணி, விடமயிலே, அஞ்சு வர்ணத்திலும், அஞ்சு நிறத்திலும் அரக்கனுனே. ஜெகத்திலும் அவிஞ்ச புண் மாண்டுபோக சுவாகா" என்ற மந்திரத்தை ஜபித்து பூச்சி உண்டான மாட்டுக் கழுத்தில் கட்டினால் பூச்சிகள் விழுந்து புண் ஆறிவிடும்.

6. அவரை இலைச்சாறும் சுண்ணாம்பும் போட்டால் புண் ஆறும்.

7. சாணக்கி என்ற பச்சிலை சமூலத்தை பழந்துணியில் வைத்து திரியாகத் திரித்து மாட்டின் கழுத்தில் கட்டினால் புழுச்சரியும்.

8. அத்தி இலையைக் கசக்கி புண்ணின் மேல் போட்டு அதன்மேல், வேப்பெண்ணெயை கைபடாமல் சொரி இறங்கினால் கடவும்.

**51.** லாடம் அடித்தல். வண்டிகளில் பூட்டி வேலை செய்யப்பட்ட மாடுகள் அடிக்கடி கப்பி ரோட்டு, கருங்கல் தரை முதலியவைகளில் நடப்பதால் கால் குளம்புகள் தேய்ந்து புண் உண்டாகி குளம்பின் அடி பாகத்தில் ரத்தம் முதலியது உண்டாகி நடக்கமுடியாது. அப்படிப்





பட்ட மாடுகளுக்கு அவசியம் லாடம் அடிக்கவேண்டும். உழவு மாடுகளுக்கு லாடம் அடிக்கவேண்டியதில்லை.

**52.** கொழு குத்தின மாட்டுக்கு:—வயல்களில் மாடுகள் உழும்போது காலில் கொழுவை எத்தி விடப்படுவதால் மாடுகளுக்குக் காலில் புண் உண்டாகும். அப்படிப்பட்ட மாடுகளை மறுபடியும் சேற்றில் கட்டி உழுவது நல்லது. அல்லது சேற்றிலாவது இறக்கிவைத்தால் புண் ஆறிவிடும். வேப்பெண்ணெயைக் காய்ச்சி இளஞ்சூட்டுடன், கொழுக்குத்தின இடத்தில் விட்டால் குணமாகும்.

**53.** மாட்டின்பேரில் உண்ணி பிடித்தால்:—சாயந்திர நேரத்தில் உண்ணிபிடித்த மாட்டின்பேரில் நல்லெண்ணெயைத்தடவி, வெளி இடத்தில் கட்டினால் உண்ணி உதிர்ந்துவிடும்.

2. பீக்களத்தி இலைச்சார் அல்லது தும்பை இலைச்சாற்றையாவது மாட்டின்பேரில் தடவி வைத்தால் உண்ணி உதிர்ந்துவிடும். காலை நேரத்திலும் சாயந்திர நேரத்திலும் தண்ணீரில் அடித்து வந்தால் உண்ணி உதிர்ந்துவிடும்.

3. முன்னை மரத்தடியில் கட்டி வைத்தால் உண்ணி உதிர்ந்துவிடும்.

4. பினாயிலை தண்ணீரில் குழைத்து மாட்டின்பேரில் தடவி வைத்து ஒரு மணி நேரம் கழித்து, குளிப்பாட்ட உண்ணி உதிர்ந்துவிடும்.

5. உள்ளொட்டி, பிறவொட்டி இவற்றைக் கொண்டுவந்து சதுரக்கள்ளி விரையை கீழே விழாமல் எடுத்து இம்மூன்றையும் அரைத்து ஒன்றாய் சேர்த்து மாட்டுக்கட்டுத் தரியில் புதைத்துவைக்க உண்ணி அற்றுபோம்.

**54.** நாவரணை நோயின் குணம்:—மாடுகள் இரையை சரிவரத் தின்னாது. மாடுவரவர இளைக்கும்.

மருந்து: சனிக்கிழமை ராத்திரி பின்னிரவில் வைக்கோல் போடாமல் வைத்திருந்து ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் ஷை மாட்டினுடைய நாக்கைப் பிடித்துப் பார்த்தால் பின்புறம் நாக்கில் உள்ள நரம்பானது உள்ளிரத்தம் போல் நீல நிறமாகவாவது, கருப்பு நிறமாகவாவது காணப்படும். அப்படிக் காணப்பட்ட நரம்பை கோணி ஊசியால் குத்தி இரத்தத்தை வெளிப்படுத்தி அந்த இடத்தில் உப்பும் புளியும் வைத்து தேய்த்து முன் பக்கம் நாக்கை கொஞ்சம் மட்டிப் பொடியால் தேய்த்து நாக்கை வைக்கோலால் கட்டி வைத்து பிறகு 2 மணி நேரம் கழித்து அவிழ்த்து விட்டால் ஷை வியாதி சவுக்கியமாகிவிடும்.

**55.** பூசணிக்காய் மசாலை:—1. பூசணிக்காயை கொஞ்சம் துளை செய்து அதற்குள் அது கொள்ளும்படியான கொள்ளைச் செலுத்தி ஷை பாகத்தை மூடி நீரோடப்பட்ட வாய்க்காலில் புதைத்து வைத்து ஒருவாரங் கழித்து எடுத்து மேல்ஓட்டை நீக்கி அதற்குள்ளிருக்கப்பட்ட மற்ற பாகங்களையும் கொள்ளையும் சேர்த்து பிசைந்து மாடு ஒன்றுக்கு ஒரு உரித்த தேங்காய் பிரமாணம் கொடுத்து 4 மணி நேரத்திற்கு பிறகு வெந்நீர்த் தண்ணீர் காட்ட வேண்டும். பழைய வைக்கோல் போடவும். இளைத்துப்போனது, சால் வற்றியது, பலஹீனமான மாடுகள் நன்றாய்த் தேறும்.

2. அரைப்படி பனங்கள்ளில் ½படி கொள்ளை ராத்திரி ஊறவைத்து காலையில் எடுத்து அரைத்து ½படி



பனங்கள்ளில் குழப்பி இளைத்த மாடுகளுக்குப் புகட்டி வந்தால் மாடுகள் நன்றாய் தெளிந்து விடும். மறுநாள் நொய்க்கஞ்சித் தண்ணீர் காட்டவும்.

3. குளத்தில் கிடக்கப்பட்ட மட்டியை 2 மரக்கால் கொண்டுவந்து அத்துடன் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து சற்று நேரம் அவித்து எடுத்து அதன் உள் இருக்கப்பட்டவற்றை எடுத்து அரைச்சேர் மஞ்சளையும் சேர்த்து அரைத்து ½படி நல்லெண்ணெய்யை விட்டுக் குழப்பி உள்ளுக்குக் கொடுக்க மாடுகள் நன்றாய்த் தெளியும்.

4. மாடு 1-க்கு உளுத்தம்மாவு படி ½, இரண்டு முத்திய தேங்காய் திருகியது, விரளி மஞ்சள் சேர் ½, வெங்காயம் படி ½ இவைகளை அரைத்து நான்கு கோழி முட்டையை உடைத்துவிட்டு அத்துடன் நல்லெண்ணெய் ஒரு சேர் விட்டுப்பிசைந்து களமாக உருட்டியாவது அல்லது 2 படி நீராகத்தில் சேர்த்துக் குழப்பி உள்ளுக்குப் புகட்டலாம். அல்லது மருந்து கொடுக்குமுன் நீராகத் தண்ணீரைப் புகட்டிவிட்டு மருந்தை உருண்டையாகக் கொடுக்கலாம். அல்லது மருந்து கொடுத்த பிறகு 2 படி நீராகத் தண்ணீரை புகட்டவேணும். இரண்டு மணி நேரம் கழித்து பழைய வைக்கோல் போடவும். கோழி முட்டையைத் தனியாகவும் உள்ளுக்குக் கொடுக்கலாம். மறுதினம் புழுங்கல் அரிசி நொய் போட்டு கஞ்சி காய்ச்சி வைக்கவும். இப்படிச்செய்வதினால் மாட்டுக்கு நல்ல இரத்தம் உண்டாகி மயிர்கள் முதிர்ந்து நல்ல பலம் உண்டாகும். வேலை செய்து களைத்துப்போன மாடுகளும் தேரும்.

5. பெருமருந்து சமூலத்தை அரைத்து எலுமிச்சங்காய் அளவு கொடுத்து 3 மணிக்குமேல் தண்ணீர் காட்டவும்.

**56.** வலிப்பு அடைப்பானுக்கு மருந்து:— ஒரு பெட்டைக்கோழி குஞ்சை கால்களையும் மயிர்களையும் போக்கி 1. கருஞ்சீரகம், 2. கஸ்தூரிமஞ்சள், 3. வால்மிளகு, 4. மிளகாய், 5. சுருக்கம்பூ, இவைகளை வகைக்கு ¼ பலம் அரைத்துச் சாராயத்தில் கலந்து கவளமாய் ஒரு கவளம் உள்ளுக்குக் கொடுக்கவும். ஆகாரம்: மூங்கில் தழை கூடாகிய வெந்நீர்.

**57.** கழலை நோயின் குணம்:—அழன்று, சுழன்று திரியும், வாயிலிருந்து நீர்வடியும். நான்கு காலும் வீங்கியிருக்கும்.

1. மருந்து: பேய்க் கும்மட்டிக்காய்ச்சார ¼ படி, எலுமிச்சம்பழச்சார் ¼ படி, குங்கிலியம் 1 பலம், இவற்றை காடி விட்டு அரைத்து புகட்டவும். இதற்கு இரண்டு விலாவிலும் (ஞ) இந்த விதமாய் சூடு போடவும்.

2. நான்குகாலும் வீங்கி இருப்பதற்கு விழுதி இலையை அவைத்து சார் பிழிந்து மோருடன் கலந்து கை மருந்து போட்டு கொடுக்கத் தீரும்.

**58.** சீதவெக்கையின் குணம்:—குடலிலிருந்து பூச்சி விழும், கண்ணில் நீர்வடியும், தீனி நன்றாய் தின்னாது, தண்ணீர் குடிக்கும், கிழே படுத்துக்கிடக்கும்.

மருந்து:—சிறுபயர் ஒரு படி, தான்றி இலை ஒரு பிடி, இவற்றை அரைத்து பாம்பால் விட்டு குழப்பிக் கொடுக்கவும்.



**59.** தலைபுற்றுக்கு மருந்து:—கண்ணில் பூளை சாறும். இந்தவிதமாய் இரண்டு விலாவிலும் சூடு போடவும்.

**60.** குடல் வியாதியின் குணம்:—மாடு செருமும், சால் குன்னி நிற்கும், வயிறு பொருமும், நன்றாய் மேயாது.

மருந்து:—இந்த (ஞ) விதமாக இடது விலாவிலும், நெஞ்சிலும், தலையிலும், சூடுபோடவும்.

**61.** நாவை நோயின் குணம்:—மூக்கு வீங்கும், நாசியை அடைக்கும், மேயாது, கிணைத்தாப்போல் விழும், குதிக்கும்.

1. மருந்து:—மூட்டிமேல் முடி சான்றும் பச்சிலையை, சுக்கை சிறு நீர் கலந்து நசியமிடவும்.

2. பசும்பால் நல்லெண்ணெய் வகைக்கு ¼ படி விதம் சேர்த்து உள்ளுக்கு புகட்டவும்.

3. ஆட்டுத்தலையை சூப்புவைத்துப் புகட்டவும்.

**62.** செவிக்கண்நோயின் குணம்:—இரண்டு கன்னமும் வீங்கும், மேயாது, கிணைத்தாப்போல் விழும். மேலெல்லாம் பிலாக தொண்டு அடித்தால், போலத்தடிக்கும். வெறுத்து நிற்கும்.

1. மருந்து:—இலுப்பை புண்ணாக்கை கரைத்துப் புகட்டவும். கண்ணைச் சுற்றிலும், நெற்றியிலும் சூடு போடவும்.

2. பூசணிக்காய் குடலை எடுத்து அத்துடன் இளநீரும் சிறுநீரும் கலந்து கொடுக்கவும். கழுதாழையை அரைத்து மேலெல்லாம் பற்றுப்போடவும்.

**63.** பெரும்வலியின் குணம்:—நடக்கமாட்டாது, மேயாது.

மருந்து:—காட்டாமணக்குப் பால் உழக்கு, விளக்கெண்ணெய் ஒரு நாழி, விழிச்சார் கால் படி. இவைகளை ஒன்றாய்ச் சேர்த்துக் கலக்கி உள்ளுக்குப் புகட்டவும். உடு, உடு இந்த விதமாய் சூடு போடவும்.

**64.** நோந்த மாட்டுக்கு:-1. விஷ்ணுக்கிராந்தி சமூலம், நெய் உழக்கு, மிளகு பலம் 1 இவற்றை அரைப்படி பசும்பால் சேர்த்து உள்ளுக்குப் புகட்டவும்.

2. வாகைமேல் புல்லுருவியை சித்திரை நக்ஷத்திரத்தில் பிடுங்கி மாட்டின் கழுத்தில் கட்டி வைக்கவும்.

3. பெருமருந்து சமூலத்தை எலுமிச்சங்காய் அளவு தண்ணீர் விட்டு அரைத்து 3 நாள் காலை நேரத்தில் கொடுக்கவும். 3 மணி நேரம் கழித்து வெந்நீர் தண்ணீர் காட்டவும்.

**65.** கோமாரியின் குணம்:—கண் பூளை சாயும், வாயிலிருந்து நீர்வடியும், மேயாது,

மருந்து: எருக்கம் பாலும் நல்லெண்ணெய்யும் கலந்து உடம்பில் தேய்க்கவும். வலது பக்கத்தில் இந்த (ரு) விதமாய் சூடு போடவும்.

திருஷ்டியினால் பால் கறவாத மாட்டிற்கு தண்ணீர் ஓதிக் கொடுக்க மந்திரம். குன்றுதிர், மேய்ந்து குளமதிர் நீர் குடித்து மன்னதிர் வரக்கண்ட பசுவை நடையழகு என்றாள், உடையழகு என்றாள், மடையழகு என்றாள், முலையழகு என்றாள், பாலழகு என்றாள். அவள் கண் உப்பும், பருத்திக் கொட்டையும் வெடித்தாற்போல



78

வெடித்துப்போக சுவாகா. இந்த விதமாக 108 தரம் ஜெபித்துக் கொட்டவும்.

**66.** வெக்கைக்கு நசியம்:—உள்ளி, வசம்பு, சுக்கு, மிளகு, சோம்பு, பெருங்காயம், முருங்கப்பட்டை, குப்பமேனி, நல்லெண்ணெய் இவற்றை எல்லாம் சேர்த்து நசுக்கி நசியமிடவும்.

**67.** மாடு சிறுமலுக்கு:—1. குப்பமேனிச்சார், உள்ளி, வசம்பு, இம்மூன்றையும் அரைத்து நீரில் கலக்கி உள்ளுக்குப் புகட்டவும். தலையைச்சுற்றி இந்தவிதம் + + + + சூடு போடவும்.

2. ஒரு பிடி புங்கம் வேர், ஒரு பிடி புங்கம் இலை இவற்றை பசும்பாலில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

3. மேனியிலை, வசம்பு, உள்ளி இவற்றை நீரில் கலக்கி நசியமிடவும்.

4. இரண்டு காடை இறகை வைக்கோலில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

**68.** மாடுகளுக்கு கால் ஒடிந்தால்:—1. ஆனை நெருஞ்சி இலையைத் துவைத்து சார் பிழிந்து சரிக்குச்சரி பசும்பால் சேர்த்து உள்ளுக்குப் புகட்டவும்.

2. சிறுபீளை வேர் அல்லது மயிர்மாணிக்கத்தை அரைத்து, பசும்பால் சேர்த்து உள்ளுக்குப் புகட்டவும்.

**69.** வயிர் போருமலுக்கு:—மயிர் சிலுத்து இருக்கும். வயிர் உப்பும்.

மருந்து:—1. பூமி சர்க்கரைக் கிழங்கு, மிளகாரணை வேர், வெள்ளைச்சாரணை வேர். இம்மூன்றையும் அரைத்துக் காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும்.

2. சிறு குறிஞ்சா வேரும், காட்டுச் சீரகமும் அரைத்து காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

**70.** மேயாமல் இருக்கிற மாட்டுக்கு:—பாகல் இலையை அரைத்து காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க மாடு மேயும்.

**71.** சிராணி கொண்ட மாட்டுக்கு:-தலைச்சுருளி வேரை அரைத்துக் காடியில் கலக்கிக் கொடுக்கவும். இரண்டு விலாவிலும் கீழ்க்கண்ட மாதிரி சூடு போடவும்.

+ +
+ +

**72.** மாடுகள் பாயாமல் இருக்க:—1. ஆலவணங்கிப் பூண்டை சிறு நீர்விட்டு அரைத்து மாடுகளின் மூக்கில் தெளிக்க முட்டுகிற மாடுகள் அடங்கிவிடும்.

2. வாச்சுண்டி வேரை மடியில் வைத்துக் கட்டிப் போக மாடுகள் பாயாது.

**73.** தேரியன் மாட்டின் குணம்:—தீனி தின்னும், முதுகு கருப்பேறி இருக்கும், மூக்கை சளிக்கச் சளிர்த்து மூச்சு விடும். நீர் அதிகமாக விடும்.

மருந்து:—ஆடுதின்னாப்பாளை, குப்பமேனி, பேய்த்தும்பை, உத்தாமணி, உள்ளி, வசம்பு இவற்றை சிறு நீர் விட்டரைத்து உள்ளுக்குப் புகட்டவும்.

**74.** கழுதை மயிர் உதிர மருந்து. தேங்காய் பால், பசும்பால், சிறு கறப்புட்டி இவற்றை அரைத்துக் கொடுக்க கெடுதலான மயிர் உதிர்ந்து நல்ல மயிர் முளைக்கும். மறுநாள் வெளியில் விடவும்.



**75.** மாட்டின் மயிர் உதிர்ந்தால் மருந்து. கழுதாழையை இடித்து அத்துடன் எலுமிச்சங்காய் அளவு மஞ்சள் கட்டி விளக்கெண்ணெய் கால் சேர் சேர்த்து கவளமாய் உள்ளுக்குக் கொடுக்கவும். ஒரு வேளை தண்ணீர் காட்டவும்.

**76.** மாட்டிற்கு வயிற்றிலுள்ள பூச்சிவிழ மருந்து:—

1. ஆத்தாசம் இலையை இடித்து சார் பிழிந்து பூளை வெல்லம் போட்டு கவளமாய் உள்ளுக்குக் கொடுக்கவும். ஒரு வேளை தண்ணீர் காட்டவும்.

2. கொல்லன் கோவைக்கிழங்கைக் கொண்டுவந்து இடித்து பசுவின் பாலுடனே கலந்து கொடுக்கவும்.

**77.** கால் கோமாரி கொண்ட மாட்டுக்கு. சூடுள்ள மணலில் நிறுத்திவைக்கலாம். அல்லது கால்களை நன்றாய் வெந்நீரினால் சுத்தஞ்செய்து புண்ணின்பேரில் தாரைப் பூசி வைத்தால் புண் ஆறிவிடும். அல்லது சேற்றில் நிறுத்தி வைக்கவும்.

**78.** முலைக்காம்பு வெடித்த மாடுகளுக்கு:—வெண்ணெயைத் தடவ குணப்படும். அல்லது படிக்கார ஜலத்தினால் கழுவி சிறிது சுண்ணாம்பும் விளக்கெண்ணெயும் குழைத்துத் தடவ குணமாம்.

**79.** 1. கன்றுகளுக்கு நாக்குப்பூச்சி இருந்தால் வெள்ளை அறுகை கொட்டைப் பாக்குப் பிரமாணம் அரைத்து உள்ளுக்குக் கொடுக்க பூச்சிகள் விழும்.

2. கொஞ்சம் வேம்பின் பட்டையை பொடி செய்து வடிகட்டி அதனில் ¼ பலம் தண்ணீரில் போட்டு கலக்கிக் கொடுக்க குணமாகும்.

3. நான்கு புரசங்கொட்டையை சாக்கடையில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் எடுத்து அரைத்து பாக்களவு கொடுக்க பூச்சிகள் விழும்.

4. வேம்பின் கொழுந்தும் ஓமமும் வைத்து அரைத்து நீராரத்தில் இரண்டு பலடை 15 நாளைக்கு ஒருதடவை புகட்டி வந்தால் வயிற்றில் பூச்சிகள் தங்காது.

**80.** கன்றுகள் கழிந்தால் ¼ ஆழாக்கு விளக்கெண்ணெயுடன் கால் ரூபாய் எடை சுக்கை தூள் செய்து 1¼ ஆழாக்கு கஞ்சியும் கலந்து புகட்ட குணமாகும்.

2. காலே அரைக்கால் ஆழாக்கு விளக்கெண்ணெயை இரண்டரை ஆழாக்கு கொ[illegible] கஞ்சியுடன் கலந்து புகட்ட சகல விதமான மலங்க[illegible]ளும் வயிற்றிலிருந்து நீங்கி குணப்படும். அப்படியே பே[illegible]தியானவுடன் சீமை சுண்ணாம்பு 2½ ரூ. எடை, காசக்கட்[illegible] 5 ரூ. எடை அபினி ½ ரூ. எடை, வேப்பமயிரின் கா[illegible] அரைக்கால் ரூபாய் எடை இவற்றை அரைத்து ஒன்றாய்ச் சேர்த்து ஒரு நாளைக்கு மூன்று பொழுது கொடுக்கவும். இத்துடன் கஞ்சியும் பாலும் கலந்து ஒரு வாரம் வரையில் புகட்டி வரவும்.

3. ஒரு பலம் பெருஞ்சீரகத்தை அரைத்து தேன் விட்டு கிளறி ஒரு எலுமிச்சங்காய் அளவு கொடுத்தால் பேதியாவது நின்றுவிடும்.

**81.** தொட்டித் தண்ணீர் குடிக்காத மாட்டிற்கு:— காலை நேரத்தில் மாட்டிற்கு வைக்கோல் போடும்போது வைக்கோலில் 2 பலம் உப்பைக் கரைத்து தெளித்து



வைத்தால் சுமார் 2 மணிக்குப் பிறகு தண்ணீர் காட்டினால் தொட்டித் தண்ணீர் குடிக்கும்.

சாதாரணமாக வண்டி வேலை செய்யும் பெரிய மாடுகளுக்கு 1 மரக்கால் தவிடு, 2 சேர் பருத்தி, 1 படி கடலை அல்லது கொள்ளு அல்லது பச்சை பயர், 2½ சேர் புண்ணாக்கு வீதமும், நடுத்தரமான மாட்டிக்கு 2 படி தவிடு, 1 சேர் பருத்தி, ½ படி கடலை அல்லது கொள்ளு அல்லது ½ படி பயர், 1¼ சேர் புண்ணாக்கு இவைகள் போதுமானது.

உழவு மாடுகளுக்கு தொட்டித் தண்ணீரில் புண்ணாக்கு தவிடு போட்டு தண்ணீர் காட்டி வருவது போதுமானது. உழவு மாடுகளை காலை நேரங்களில் உழவுக்குப் போகும் போது தண்ணீர் காட்டி ஓட்டிப்போகவேண்டும்.

**82.** நாயடித்தலுக்கு மருந்து:—நாயடிக்க முதல் நாள் இராத்திரி 2 அவுன்ஸ் நல்ல எண்ணெயும், இரண்டு கோழி மு[illegible]டையும் கொடுக்கவேண்டும். மறுநாள் காலையில் காயமு[illegible]த்தவுடன் 2 படி நீராரத்தில் மஞ்சள் பொடி சேர் ¼, ந[illegible]ய எண்ணெய் சேர் ½, உருத்தம்மாவு படி ½, 2 கோழி மு[illegible]ட்டையை உடைத்துவிட்டுக் கலந்து உள்ளுக்கு கொடு[illegible]கவேண்டும்.

2. 2 [illegible]படி மோரில் 1 சேர் வெங்காயத்தை அரைத்து அத்துடன் [illegible] சேர் மஞ்சள் பொடியும் கலந்து புகட்ட.

3. [illegible] படி பசும்பாலில் பெருங்காயம் 1 பலம், நெய் 1 பலம் இவை[illegible]ளைக் கலந்து புகட்ட.

நாயடி[illegible]த உடன் விதையின் மேல், நல்ல எண்ணெய், ம[illegible]ஞ்சள் கோழி முட்டையை உடைத்துக் கலந்து பூசிவக்கவேண்டும். நாய், நரி முதலியவைகள்

கடித்து விடாமல் காப்பாற்றவேண்டும். மாட்டை வெயிலில் கட்டக் கூடாது. தண்ணீர் காட்டக்கூடாது. மறுநாள் நொய்போட்டு கஞ்சி காய்ச்சி ஆறிய பிறகு காட்டவேண்டும். நாலாம் நாள் முதல் ஒரு வாரத்திற்கு மாட்டைத் தண்ணீரில் நீச்சலடிக்கவேண்டும். அதனால் விதை நன்றாய் சுருங்கிவிடும். விதை நன்றாய் சுருங்க 25 நாள் செல்லும்.

மேலே சொல்லப்பட்ட முறைகள் ஒரே வியாதிக்கு பல முறைகளாக பலரிடமும் கேட்டு எழுதப்பட்ட படியாலும், பல ஏட்டுப் பிரதிகளைப் பார்த்து எழுதப்பட்ட படியாலும் அவைகளுக்கு வரிசையாக தொடர்ந்த நம்பர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் அவற்றில் சமயத்துக்குத் தக்கவாறு எதையாவது உபயோகப்படுத்தவும்.

இனி வைத்திய விஷயமாய்க் கிடைக்கப்படும் முறைகள் 2-வது புத்தகமாக வெளியிடப்படும்.



## 6-வது அத்தியாயம்.

## இங்கிலீஷ் வைத்தியம்.

மிருக வைத்தியர்களின் சகாயம் கிடைக்கக்கூடாத காலத்திலும், இடத்திலும் அடியில்கண்ட மருந்துகளை உபயோகப்படுத்தலாம். பேட்டைப்புறம், கிராமங்களிலும் கால்நடைகளின் சொந்தக்காரர்கள் சகலரும் அவசியமாய் வைத்திருக்கவேண்டியது. அவைகள் பட்டணங்களிலும் பெரிய கிராமங்களிலும் கிடைக்கும். இங்கே குறித்திருக்கும் மருந்து அளவுகள் 500 பவுன் நிறையும் அதற்கு அதிகப்பட்ட நிறையுமுள்ள வயது வந்த மாடுகளுக்காகவும், எருமைகளுக்காகவும் ஏற்பட்டவை. சிறு பிராணிகளின் விஷயத்திலும் அவைகளின் நிறைக்கும் வயதுக்கும் தக்கபடி மருந்தின் அளவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

நிறை.

| | | |
|---|---|---|
| 1 ட்ராம் | = | 3/8 ரூ. எடை. |
| 3 ட்ராம் | = | 1 தோலா அல்லது 1 ரூ. எடை. |
| 1 அவுன்ஸ் | = | 1/2 சிட்டாக் அல்லது 2 1/2 ரூ. எடை. |
| 1 பவுன் அல்லது ராத்தல் | = | 8 சிட்டாக் அல்லது 1/2 சேர். |
| 1 சேர் | = | 16 சிட்டாக் அல்லது 80 ரூ. எடை. |

அளவு.

| | | |
|---|---|---|
| 1 திராம் அவுன்ஸ் | = | 1/2 சிட்டாக் அல்லது 1/32 படி, |
| 1 பைண்ட் | = | 10 சிட்டாக் அல்லது 5/8 படி, |
| 1 குவார்ட் | = | 20 சிட்டாக் அல்லது 1 1/4 சேர் அல்லது 5/4 படி. |

**1.** பேதி மருந்துகள்:—பேதியுப்பு 1½ பவுன், சுக்குப்பொடி ½ அவுன்ஸ், கந்தகப் பொடி 1 அவுன்ஸ், வெல்லப்பாகு 8 அவுன்ஸ் இவைகளை ஒரு கவார்ட் அல்லது பட்டணம்படிக்கு அரையே அரைக்கால் படி வெந்நீரில் கலந்து குளிர்ந்தபின் கொடுக்கவேண்டும்.

2. ஆளி விரை எண்ணெய் அல்லது ஆமணக்கெண்ணெய் 10 அவுன்ஸ், நல்லெண்ணெய் 10 அவுன்ஸ், சேர்வாள எண்ணெய் 20 துளி இவைகளைக் கலந்து பானமாக கொடுக்கலாம்.

3. பேதியுப்பு 15 ரூ. எடை, கந்தகம் 10 ரூ. எடை, நிலவேம்பு, இஞ்சி வகைக்கு 2½ ரூ. எடை இவற்றை வெந்நீரில் கலந்து புகட்ட இலகுவாக பேதியாகும்.

4. பேதி உப்பு 50 ரூ. எடை, சர்க்கரை 5 ரூ. எடை, சுக்கு, சோம்பு வகைக்கு 1¼ ரூ. எடை இவற்றை கலந்து கொடுக்க பேதியாகும்.

5. சிற்றாமணக்கு எண்ணெய் 3¾ ஆழாக்கு, பட்டைச்சாராயம் ½ ஆழாக்கு, வேப்பம்பட்டை தூள் 1¼ ரூ. எடை இவற்றைக் கொடுக்க பேதியாம்.

**2.** உற்சாக மருந்துகள்:—சாட்டுச் சாராயம் 4 அவுன்ஸ், சுக்கு பொடி ½ அவுன்ஸ், சாதாரண மிளகு பொடி 2 ட்ராம் இவைகளைக் காலே விசம்படி கஞ்சியில் கலந்து கொடுக்கவும். அவசியமாயிருக்கிறவரையில் நான்கு மணி நேரத்திற்கு ஒரு தரம் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்.

2. நவச்சாரம் ½ அவுன்ஸ், சுக்குப்பொடி ½ அவுன்ஸ், எட்டிக்கொட்டை 1 ட்ராம் இவைகளைக் காலே விசம்படி குளிர்ந்த கஞ்சியில் கலந்து கொடுக்கவேண்டும்.



அவசியமாயிருக்கிறவரையில் நான்கு மணி நேரத்திற்கு ஒரு தரம் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்.

3. ஆளிவிதை 2½ ரூபாய் எடை, கொதிநீர் 2¾ ஆழாக்கு. ஆளிவிதையை சட்டியில் போட்டுக் கொதிநீர் விட்டு 4 மணி நேரம் மூடிவைத்து இறுத்துக் கொடுக்கவும்.

**3.** ஆளிவிதைக்களி, ஆளிவிதை மாவு 10 ரூபாய் எடை, நல்லெண்ணெய் 1¼ ரூபாய் எடை, கொதிநீர் 1¼ ஆழாக்கு இவற்றைக் களியாகக் கிண்டி கட்டிகளின்மேல் கட்டினால் சீக்கிரம் பழுத்து உடையும். ஆளிவிதையை மற்ற ஆகாரங்களுடன் கலந்து உள்ளுக்குக் கொடுத்தால் பாலுக்கடுத்த ஆகாரமாக உபயோகப்படும். பலத்தைக் கொடுக்கும். அழற்சியைத் தணிக்கும்.

**4.** பலமுண்டாக பானங்கள்:—1. சோம்பு 2½ ரூ. எடை, சுக்கு, மலைவேம்பு வகைக்கு 1¼ ரூ. எடை, சர்க்கரை 5 ரூ. எடை இவற்றை வெந்நீர்விட்டு அரைத்து வெந்நீரில் கலக்கிப் புகட்ட பலமுண்டாகும்.

2. அன்னபேதி, நிலவேம்பு வகைக்கு ⅛ ரூ. எடை, சுக்கு 1/16 ரூ. எடை இவற்றை அரைத்து வெந்நீரில் புகட்ட பலமுண்டாகும்.

**5.** பலவிருத்தி மருந்தும் கிருமிகளைக் கொல்லும் மருந்தும்:—அன்னபேதிப் பொடி ½ அவுன்ஸ், எட்டிக்கொட்டை பொடி 1 ட்ராம், நிலவேம்புப்பொடி 1 அவுன்ஸ் இவைகளைக் கலந்து பொடியை ஆகாரத்திலாவது 1 பைண்ட் அல்லது காலே விசம்படி கஞ்சியிலாவது சேர்த்து தினம் ஒருமுறை கொடுக்கவேண்டும்.

**6.** உடற்குணம் மாற்றும் மருந்து:—வெடியுப்பு பொடி ½ அவுன்ஸ், எட்டிக்கொட்டை பொடி 1 ட்ராம், ஓமத்தூள் ½ அவுன்ஸ், கந்தகப் பொடி 1 அவுன்ஸ் இவைகளைக் காலே வீசம்படி கஞ்சியில்கலந்து பிரதி தினமும் கொடுக்க வேண்டும்.

**7.** உள்ளுக்குக் கொடுக்கும் துவர் மருந்து:—சீமைச் சுண்ணாம்பு பொடி 1 அவுன்ஸ், காசுக்கட்டிப் பொடி ½ அவுன்ஸ், ஓமத்தூள் ½ அவுன்ஸ் இவைகளை 1 பைண்ட் அல்லது காலே வீசம்படி கஞ்சியில் கலந்து பிரதி தினமும் இரண்டு முறை கொடுக்கவேண்டும்.

2. துவர் மருந்தும் கிருமிகளைக்கொல்லும் மருந்து:—மயில் துத்தம் பொடி 1 ட்ராம், தண்ணீர் 1 பைண்ட். மருந்தின் அளவுகள் மாடுகளுக்கு ஒரு பைண்ட் அல்லது காலே வீசம்படி கொடுக்கவும்.

**8.** வேதனையைக் குறைக்கும் மருந்து—அபினிப் பொடி அல்லது கஞ்சா இலை 3 ட்ராம், பெருங்காயம் பொடி 3 டிராம், சுக்குப்பொடி ½ அவுன்ஸ், நாட்டுச் சாராயம் 4 அவுன்ஸ் இவைகளை ஒரு பைண்ட் அல்லது காலே வீசம்படி கஞ்சியில் கலந்து கொடுக்கவேண்டும்.

2. கற்பூரத் தைலம் 1 அவுன்ஸ், ஆளிவிதை எண்ணெய் 1 பைண்ட், இவைகளை கலந்து மருந்து பானமாகக் கொடுக்கவேண்டும்.

**9.** கிருமிகளைக் கொல்லும் மருந்து:—பெருங்காயப் பொடி ½ அவுன்ஸ், கந்தகப் பொடி 1 அவுன்ஸ், பலாஸ் முருக்கம் விதைப் பொடி 1 அவுன்ஸ் இவைகளைக் கலந்து ஒரு பைண்ட் அல்லது காலே வீசம்படி கஞ்சியில்



சேர்த்து 10 நாள் வரையில் தினம் ஒரு முறை கொடுக்க வேண்டும்.

**10.** வாய் கழுவும் மருந்து நீர்:—வெண்காரப்பொடி அல்லது படிக்கார பொடியை 1 அவுன்ஸ் தண்ணீரில் கரைத்து வாய்கழுவும் மருந்து நீராக உபயோகிக்க வேண்டும். வெண்காரம் கலந்த மருந்து நீரை கண்களைக் கழுவுவதற்காகவும் உபயோகிக்கலாம்.

**11.** சபக்காரடியுப்பு 5 குன்றுமணி எடை, சுத்த ஜலம் 1¼ ஆழாக்கு இவற்றால் கண்களைக் கழுவலாம்.

**12.** சொறிக்குப் போடும் மருந்து:—கந்தகப் பொடி ¼ அவுன்ஸ், (சர்வசேதல்) வேப்பெண்ணெய் அல்லது ரேப் ஆயில் 1 பைண்ட் இவைகளை நன்றாய்க் கலந்து சொறி கண்டிருக்கும் பாகங்களை (சோப்) சவக்காரத்தினாலும் இளஞ்சூடான தண்ணீரினாலும் கழுவின பிறகு புருசைக்கொண்டு அந்த இடங்களில் போடவேண்டும். 5 நாள் கழித்து மறுபடியும் கழுவி இந்த மருந்தைப் போடவேண்டும்.

2. புகையிலை 1 பங்கு, தண்ணீர் 10 பங்கு, புகையிலையை தண்ணீரில் சுமார் ½ மணி நேரம் வேகவைத்து வடித்து உபயோகிக்கவேண்டும்.

3. காசுகட்டி தேநீர்: காசுக்கட்டி 1¾ ரூபாய் எடை, கொதிநீர் 2½ ஆழாக்கு மேற் சோம்பு 1¼ ரூபாய் எடை, சொல்லிய இரண்டு மருந்தையும் பொடிசெய்து ஒரு சட்டியிற் போட்டு கொதிநீர் விட்டு ½ மணி நேரம் மூடிவைத்து தெளிவாக இறுத்து ½ அல்லது ¾ ஆழாக்கு கழிச்ச மாட்டுக்குக் கொடுக்க குணமாகும்.

4. பினையின் 1 பங்கு, தண்ணீர் 10 பங்குடன் கலந்து மேல் தடவ தோலைப்பற்றிய வியாதிகள் தீரும்.

5. டர்பெண்டைன் 1 பங்கு, நல்ல எண்ணெய் 8 பங்கு இவைகளைக் கலந்து மேலுக்கு தடவவும்.

6. வெண்காரப் பொடி, மரக்கரிப் பொடி, படிக்காரப்பொடி, மயில் துத்தப்பொடி, சம பங்குகள் விதம் கலந்து காயத்தின் மேல் தூவிப்போடவேண்டும்.

7. மயில் துத்தப்பொடி 1 ட்ராம், அன்னபேதிப் பொடி 1 ட்ராம், படிக்காரப்பொடி ½ அவுன்ஸ், வெந்நீர் 1 பயிண்ட் இவைகளைக் கரைத்து குளிர்ந்த பின்பு உபயோகிக்கவேண்டும். இரத்தம் வடிவதை நிறுத்துவதற்கு இது உபயோகமான மருந்து.

8. காயங்களுக்குத் தைலம்:—கர்பூரத்தைலம், கடுகெண்ணெய், சமபங்கு விதம் கலந்து அரக்கி தேய்க்கவேண்டும். வேலைசெய்யும் மாட்டுக்குக் கழுத்தில் விரிந்து உண்டாகியிருந்தால் அதற்கு இலுப்பெண்ணெய் கசண்டைப் போட்டால் ஆறிவிடும்.

9. சீனக்காரம் 2½ ரூபாய் எடை, சுத்த ஜலம் 2 ஆழாக்கு இதை உபயோகிப்பதனால் இரத்தம் வடிதல் நிற்கும்.

10. காயங்களைக் கழுவுதற்கு நீர்:—கார்பாலிக் ஆசிட் ஒரு பலம், சொதிநீர் 6¼ சேர் அல்லது 12 சேர் வரையில் சேர்த்து கலந்து குலுக்கி காயங்களுக்கு உபயோகிக்கலாம்.

11. துவர் நீர்:—துத்தம் ¼ ரூபாய் எடை, ஆழாக்குத் தண்ணீரில் போட்டு கலக்கி புண்களின் மேல் போடலாம்.



12. புண்ணாற்றும் நீர்:— வெள்ளைத் துத்தம், ஈயக்காடியுப்பு வகைக்கு 1¼ ரூபாய் எடை சுத்த ஜலம் 3 ஆழாக்கு இவற்றைக்கலந்து புண்களில்போட குணமாகும்.

13. தவிடு இரண்டு பங்கு ஆளி விதை மாவு ஒரு பாகம், கொதிநீர் விட்டு களியாக்கி, புண்களின்பேரில் வைத்துக்கட்ட உருத்தத்தையும் அழற்சியையும் தணித்து புண்களை ஆற்றிவிடும்.

14. தார் 15 ரூ. எடை, கொழுப்பு அல்லது நெய் 10 ரூ. எடை, மெழுகு 1¼ ரூ. எடை இவற்றைக்கலந்து சூடவைத்து நன்றாய் சேரும்படி செய்து ஆறிய பிறகு காற் புண்களில் போட சௌக்கியமாகும்.

15. தார், ரோசனம், நெய் இம்மூன்றையும் சமநிறையாகச்சேர்த்து இளஞ்சூடாகக் காய்ச்சி காற் புண்களுக்கு போட குணமாகும்.

16. ஸ்பானியா எரிவண்டு அல்லது சீனா எரிவண்டு 1¼ ரூ. எடை, நெய் 10 ரூ. எடை இவற்றைக் கலந்து பிளாஸ்டர் செய்து துர்நீர் உள்ள இடத்தில் போட நீர் வெளிப்பட்டுவிடும்.

17. ரோசனம் 10 ரூ. எடை, கொழுப்பு 7½ ரூ. எடை, கற்பூரத்தைலம், மெழுகு வகைக்கு ஒன்றேகால் ரூபாய் எடை, கொழுப்பையும், மெழுகையும் உருக்கிய பின் ரோசனத்தைச் சேர்த்து குளிர்ந்தவுடன் கற்பூரத்தைலத்தைச் சேர்த்து புண்களில் போட புண்கள் ஆறும்.

18. கார்பாலிக் ஆசிட் ஒரு பங்கு தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் 16 முதல் 20 பாகம் வரையில் கலந்து புண்களில் போட புண்கள் ஆறும்.

19. துத்தம், சீமைச் சுண்ணும்பு வகைக்கு $2\frac{1}{2}$ ரூ. எடை இவற்றைப் பொடிசெய்து நெடுநாளாக ஆராத புண்ணுக்கு மேலே பிரயோகிக்க குணமாகும்.

20. கார்ப்பாலிக் ஆசிட், கற்பூரம், வகைக்கு $\frac{5}{8}$ ரூ. எடை, வேப்பெண்ணெய் $\frac{1}{2}$ ஆழாக்கு இவற்றை ஒன்ருய்ச் சேர்த்து கலக்கி புழுக்கள் உண்டான இடத்தில் தடவி வைக்க புழுக்கள் உதிர்ந்து புண்களும் ஆறிவிடும்.

21. சுண்ணும்பு நீர் அரை ஆழாக்கு, தேங்காய் எண்ணெய் ஒரு ஆழாக்கு கலந்து மேற்சொன்ன புண்களில் போட புண் ஆறி குணமாகும்.

22. சயக்காடியுப்பு $\frac{15}{16}$ ரூ. எடை, பட்டைச்சாராயம் $\frac{1}{4}$ ஆழாக்கு இவற்றைக் கலந்து பிரயோகிக்க குணமாகும்.

## கடைச்சரக்குகளால் செய்யப்பட்ட மருந்துகள்.

**1**. கழிச்சலுக்கு பானங்கள் :—(1) அபின் $\frac{5}{16}$ ரூ. எடை, சீமைச்சுண்ணும்பு, சோம்பு வகைக்கு $2\frac{1}{2}$ ரூ. எடை இவற்றைப் பொடிசெய்து வெந்நீரில் கலந்து புகட்ட குணமாகும்.

2. சீமைச்சுண்ணும்பு 2 ரூ. எடை, காசுக்கட்டி $\frac{5}{8}$ ரூ. எடை இவற்றைப் பொடிசெய்து வெந்நீரில் கலந்து கொடுக்க குணமாகும்.

**2**. காய்ச்சலுக்குப் பானம் :—சிங்கோணப் பட்டை $2\frac{1}{2}$ ரூபாய் எடை, கொதிநீர் $2\frac{1}{2}$ ஆழாக்கு பட்டையைப் பொடி செய்து $2\frac{1}{2}$ மணி நேரம் மூடிவைத்து இறுத்து $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ ஆழாக்கு கொடுக்க காய்ச்சல் தீரும். பலம் உண்டாகும்.



2. சிங்கோணப்பட்டை $\frac{5}{8}$ ரூ. எடை, வெடியுப்பு $1\frac{1}{4}$ ரூ. எடை, கந்தகம் 5 ரூ. எடை இவற்றைப் பொடி செய்து, வெந்நீரில் கலக்கிக் கொடுக்க குணமாகும்.

**3**. வெள்ளைத் துத்தம் $2\frac{1}{2}$ குன்றுமணி எடை, சுத்த ஜலம் $\frac{5}{8}$ ஆழாக்கு இவற்றைச் சேர்த்தும் கண்களை கழுவலாம்.

**4**. அழற்சியுள்ள பாகங்களில் உபயோகிக்கும் மருந்து :- நவச்சாரம், வெடியுப்பு, வகைக்கு 5 ரூபாய் எடை, தண்ணீர் 3 ஆழாக்கு, ஷை இரண்டு வஸ்துகளையும் தண்ணீரில் கரைத்து துணியில் நனைத்து அழற்சியுள்ள இடத்தில் போடக் குணமாகும்.

**5**. வாய் நோய், கால் நோய் காற்புண்களுக்கு கழுவும் நீர் :— துத்தம் $1\frac{1}{4}$ ரூபாய் எடை, தண்ணீர் ஒன்னேகால் ஆழாக்கு இவ்விரண்டையும் கலந்து புண்களைக் கழுவ குணமாகும்.

2. சினைக்காரம் $\frac{5}{8}$ ரூபாய் எடை, தண்ணீர் 1 ஆழாக்கு கலந்து கழுவ குணமாகும்.

3. கடுகு பொடி, ஆளிவிதை வகைக்கு $6\frac{1}{4}$ ரூ. எடை வெதுவெதுப்பான வெந்நீர் ஒன்றேகால் ஆழாக்கு விட்டு களியாகக் கிண்டி வீக்கங்களில் போட இரத்தக் கட்டை கறைத்து வலி முதலியவற்றைப் போக்கும். அல்லது நவசார நீர் கலந்து கடுகு பொடி $12\frac{1}{2}$ ரூ. எடை, காரமுள்ள நவசார நீர் $\frac{1}{2}$ ஆழாக்கு, வெதுவெதுப்பான வெந்நீர் $\frac{1}{2}$ ஆழாக்கு இவற்றைக் கலந்து பத்துப்போட ரத்தக்கட்டுகளில் ஏற்படும் சகலமான கட்டி முதலிய நோய்களையும் தீர்க்கும்.

4. அடுப்புக்கரி $1\frac{1}{4}$ ரூ. எடை, ஆளி விதை, அல்லது அரிசிமாவு, அல்லது கோதுமை மாவையாவது $8\frac{3}{4}$ ரூ. எடை, கொதிநீர் $1\frac{1}{4}$ ஆழாக்கு இவற்றைக் கலந்து களியாகக்கிண்டி கரிப்பொடியை பாதி போட்டு மற்றப்பாதியை களியின்மேற் தூவி சூடாக இருக்கும்போது நாற்றமுள்ள புண்களின்மேற் பிரயோகிக்க குணமாகும்.

5. தார் 25 ரூ. எடை, கற்பூரத்தயிலம் கால் ஆழாக்கு, தேங்காய் எண்ணெய் $\frac{1}{8}$ ஆழாக்கு, கந்தகம் $7\frac{1}{2}$ ரூ. எடை இவற்றைக் கலந்து மாட்டின்பேரில் உண்டாகும் சொறிகளுக்குத் தடவ குணமாகும்.

**6.** சுளுக்குக்கு:—பற்கண்டி பிச்சு 50 ரூ. எடை, ரோசனம், மெழுகு வகைக்கு $5\frac{5}{8}$ ரூ. எடை, நல்லெண்ணெய், தண்ணீர் வகைக்கு அரைக்கால் ஆழாக்குடன் மண் சட்டியில் போட்டு உருக்கி சுளுக்கு உண்டாகப்பட்ட பாகத்தில் பற்றுப் போடக் குணமாகும்.

**7.** அடைப்பனுக்குப் பானம்:—கார்பாலிக் ஆசிட் 60 துளி, கரியுப்பு $2\frac{1}{2}$ ரூ. எடை இவ்விரண்டையும் வெந்நீரில் கலந்து உள்ளுக்குப் புகட்டவும்.

அன்னபேதி அல்லது காலோமல் $\frac{5}{16}$ ரூ. எடை, ரோசனம், வெடியுப்பு வகைக்கு $\frac{5}{8}$ ரூ. எடை இவற்றை வெந்நீரில் கலந்து உள்ளுக்குக்கொடுக்கவும்.

**8.** இருமலுக்கு:—கற்பூரம் $\frac{5}{8}$ ரூ. எடை, வெடியுப்பு, சுக்கு, சோம்பு, வகைக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை நிலவேம்பு $\frac{5}{8}$ ரூ. எடை இவற்றை வெந்நீரில் கலந்து கொடுக்க குணமாகும்.

2. ஆக்கிராணஉப்பு, நிலவேம்பு, சுக்கு வகைக்கு $\frac{5}{8}$ ரூ. எடை இவைகளை வெந்நீரில் கலந்து உள்ளுக்குக் கொடுக்க ஜீரணசக்தியை அதிகரிக்கச் செய்யும்.



**9.** ஈரல் நோய்க்கு:—1. காலோமல் $\frac{5}{16}$ ரூ. எடை, பேதியுப்பு 15 ரூ. எடை, கறியுப்பு $\frac{5}{8}$ ரூ. எடை, சோம்பு, சுக்கு வகைக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை இவற்றைப் பொடிசெய்து, வெந்நீர் அல்லது கொதி கஞ்சியில் கலந்து புகட்டவும். அல்லது நவச்சாரம் $2\frac{1}{2}$ ரூ. எடை, பேதியுப்பு 10 ரூ. எடை, சுக்கு, சோம்பு வகைக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை இவற்றைப் பொடிசெய்து, வெந்நீர் அல்லது கொதி கஞ்சியில் கலந்து புகட்ட குணமாகும்.

2, கற்பூரம், ஆக்கிராண உப்பு வகைக்கு $\frac{5}{8}$ ரூ. எடை, நிலவேம்பு, சுக்கு, சோம்பு வகைக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை இவற்றைப் பொடி செய்து வெந்நீரில் கலந்து புகட்ட குணமாகும்.

**10.** கால் வீக்கத்துக்கு:—வெடியுப்பு $\frac{5}{8}$ ரூ. எடை, காலோமல் $\frac{5}{16}$ ரூ. எடை இவற்றைக் கலந்து கொடுக்கக் குணமாகும்.

**11.** குடற் பூச்சிகளுக்கு:—1. கற்பூரத்தைலம் $\frac{1}{4}$ ஆழாக்கு, ஆளிவிதை எண்ணெய் $2\frac{1}{2}$ ஆழாக்கு கலந்து புகட்ட குடற் பூச்சிகள் வெளிப்பட்டுவிடும்.

2. காலோமல் $\frac{5}{16}$ ரூ. எடை, கற்பூரத் தைலம் $\frac{1}{4}$ ஆழாக்கு, ஆளிவிதை எண்ணெய் $2\frac{1}{2}$ ஆழாக்கு சேர்த்து புகட்ட பூச்சிகள் வெளிப்படும்.

**12.** சீதபேதிக்கு:—1. தூத்தம், அபின் $\frac{5}{16}$ ரூ. எடை, சீமைச்சுண்ணாம்பு $2\frac{1}{2}$ ரூ. எடை, சுக்கு $\frac{7}{8}$ ரூ. எடை, சோம்பு $1\frac{1}{4}$ ரூ. எடை இவற்றைப் பொடி செய்து வெந்நீருடன் கலந்து கொடுக்கவும்.

2. இபிகாக்கு வேர் $\frac{5}{8}$ ரூ. எடை, கார்பாலிக் ஆசிட் 30 துளி, சோம்பு $1\frac{1}{4}$ ரூ. எடை, சுக்கு $\frac{5}{8}$ ரூ. எடை

இவற்றைப் பொடிசெய்து வெந்நீரில் கலந்து கொடுக்க குணமாகும்.

**13.** சுவாசாசயத்திற்கு:—அபின், கற்பூரம், காலோமல், வகைக்கு $\frac{5}{16}$ ரூ. எடை வெந்நீரில் கலக்கி கொடுக்க குணமாகும்.

2. ஆக்கிராண உப்பு $\frac{5}{8}$ ரூ. எடை, சுக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை, பட்டை சாராயம் 1 ஆழாக்கு இவற்றைக் கொடுக்க குணமாகும்.

**14.** திமிர் வாதத்துக்கு:—எட்டி விதை $\frac{1}{4}$ விராகனிடை, அன்னபேதி $\frac{5}{16}$ ரூ. எடை, பேதி உப்பு 10 ரூ. எடை, மிளகாய், கிராம்பு வகைக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை இவற்றைப் பொடி செய்து வெந்நீரில் கலக்கி கொடுக்க சவுகரியமாகும்.

2. அன்னபேதி $\frac{5}{16}$ ரூ. எடை, நிலவேம்பு $2\frac{1}{2}$ ரூ. எடை, கரி உப்பு $1\frac{1}{4}$ ரூ. எடை இவற்றைக் கொடுக்க குணமாகும்.

**15.** தோலைப்பற்றிய வியாதிகளுக்கு:—நவச்சாரம் $1\frac{1}{4}$ ரூ. எடை, பாஷாணம் $2\frac{1}{2}$ குன்றிமணி எடை இவற்றைக் கலந்து புகட்ட குணமாகும்.

**16.** வயிற்றுப் பொருமலுக்கு:—கஞ்சா இலை $1\frac{1}{4}$ ரூ. எடை, அடுப்புக்கரி 5 ரூ. எடை, பட்டைச்சாராயம் $\frac{1}{2}$ ஆழாக்கு, கிராம்பு, மிளகாய் வகைக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை இவற்றைக் கொடுக்க வயிற்றுப் பொருமல் நீங்கும்.

2. மிளகாய் $\frac{5}{16}$ ரூ. எடை, சுக்கு, மிளகு, சோம்பு, கிராம்பு வகைக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை இவற்றை வெந்நீர்விட்டு அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்க ஜீரண சக்தியை உண்டாகும்.



3. ஆக்கிராண உப்பு, கிராம்பு, மிளகாய், வகைக்கு $1\frac{1}{4}$ ரூ. எடை, அபின் $\frac{5}{16}$ ரூ. எடை, பட்டைச் சாராயம் $\frac{1}{2}$ ஆழாக்கு இம்மருந்தைச் சேர்த்தவுடன் கொடுக்கவேண்டும்.

**17.** வாதத்துக்கு:—கந்தகம், நவச்சாரம் வகைக்கு $2\frac{1}{2}$ ரூ. எடை, பட்டைச்சாராயம் $\frac{3}{4}$ ஆழாக்கு இவற்றைச் சேர்த்துக் கொடுக்க வாதரோகம் குணமாகும்.

**18.** வெக்கை நோய்க்கு:—கார்பாலிக்கு ஆசிட் 1 டிராம், கரி உப்பு $2\frac{1}{8}$ ரூ. எடை, பட்டைச் சாராயம் 1 ஆழாக்கு இவற்றைக் கலந்துகொடுக்க குணமாகும்.

வெக்கை வியாதியில் பேதியானால் மாசிக்காய் அல்லது காசுக்கட்டி $\frac{5}{16}$ ரூ. எடை, சீமைச் சுண்ணாம்பு $\frac{5}{8}$ ரூ. எடை, அபின் $\frac{1}{4}$ விராகனிடை இவற்றைப் பேதி நிற்கும்வரையில் தினக்கோறும் இரண்டுமுறை கொடுக்கவும்.

**19.** பூச்சுத்தயிலம்:—சவுக்காரம் $3\frac{3}{4}$ ரூ. எடை, கற்பூரம் $2\frac{1}{2}$ ரூ. எடை கற்பூரதயிலம் $2\frac{1}{2}$ ஆழாக்கு. கற்பூரத்தை கர்பூரத்தயிலத்தில் கரைத்து சவுக்காரத்தைப் பொடிசெய்து போட்டு நன்றாகக்கலக்கி இவற்றை சுளுக்கு முதலியவற்றால் வருத்தப்படும் இடங்களில் பிரயோகித்தால் வேதனைதணியும்.

பூச்சுத்தைலம், தேங்காய் எண்ணெய் $1\frac{1}{4}$ ஆழாக்கு, தண்ணீர், கற்பூரத்தைலம் வகைக்கு $\frac{1}{2}$ ஆழாக்கு, காரமுள்ள நவச்சார நீர் $\frac{1}{4}$ ஆழாக்கு, இவைதச்சுளுக்குள்ள பாகங்களிலும், அமுற்சி அடைந்துவரும் பாகங்களிலும் உபயோகிக்க குணமாகும்.

3. சவுக்காரத் தைலம்:—சவுக்காரம் $7\frac{1}{2}$ ரூ. எடை, கற்பூரம் $2\frac{1}{2}$ ரூ. எடை காரமுள்ள பட்டைச்சாராயம்

5 ஆழாக்கு காரமுள்ள நவச்சார நீர், ஆழாக்கு, தண்ணீர் 1 ஆழாக்கு இவற்றைக்கலந்து பிரயோகிக்க குணமாகும்.

**20.** வைசூரி புண்களுக்கு பிரயோகம்:—நல்லெண்ணெய் 1 ஆழாக்கு, கார்பாலிக் ஆசிட் 5/16 ரூ. எடை இவற்றைக் கலந்து புண்களுக்குப் பூச குணமாகும்.

மருந்துகளின் குணமும் உபயோகிக்கக்கூடிய அளவும்.

1. அபின். இது சீதபேதி, கழிச்சல், வயிற்றுவலி இவற்றிற்கு கொடுக்கலாம். சுமார் 5/16 ரூ. எடை முதல் 5/8 ரூ. எடை வரையில் கொடுக்கலாம்.

2. அன்னபேதி. பலங்கொடுக்கக்கூடியது. காய்ச்சல், மெலிவு உள்ள பிராணிகளுக்கு 3/8 ரூ. எடை முதல் 15/16 ரூ. எடை வரையில் கொடுக்கலாம்.

3. ஆக்கிரானை உப்பு. 1 பங்கு நவச்சாரத்தையும் 2 பங்கு சீமைச்சுண்ணாம்பையும் கலந்து பொடிசெய்து பதங்கமாகச் செய்து களைப்பு, சுவாசாய அழற்சி முதலியவற்றிற்கு உபயோகிக்கலாம். 3/8 ரூ. எடை முதல் 1/2 ரூ. வரையில் உபயோகிக்கலாம்.

4. ஆளிவிதைக் கஞ்சி. இதனால் மூத்திரப்பையிலுள்ள ரோகங்களை குணப்படுத்துவதுடன், இளம் பிராணிகளை கொழுப்படையச்செய்யும், பாலைப்போன்ற ஆகாரம். இதன் மாவைக்களியாகக்கிண்டி கட்டிகளுக்கு கட்டினால் கட்டிகளை உடைத்து குணத்தையுண்டாக்கும்.

5. ஆளிவிதை எண்ணெய். பேதிக்கு பயமில்லாமல் கொடுக்கலாம். குடலைச்சுத்திசெய்து குணத்தைக்கொடுக்கக்கூடியது. $2\frac{1}{2}$ முதல் 5 ஆழாக்குவரையில் கொடுக்கலாம். இத்துடன் பேதியுப்பும் சேர்த்துக்கொடுக்கலாம்.



6. இபிகாக்கு. வேரின் பொடியை, சீதபேதியானால் அதற்கு கொடுக்கலாம். ஒருவேளைக்கு 5/8 ரூபாய் எடை கொடுக்கலாம்.

7. ஈயக்காடியுப்பு. காயங்கள், புண்களுக்கு தண்ணீருடன் கழுவ உபயோகமாகும். புண்களை ஆற்றும் குணமுள்ளது.

8. ஊமத்தை இலை. சுவாசாய வியாதி, ஜலதோஷம் முதலியவற்றை நீக்கும். புகையை முகத்தில் காட்டலாம், அல்லது இலைப் பொடியை 5/16 எடை முதல் 15/16 ரூபாய் எடை வரையில் உள்ளுக்குங் கொடுக்கலாம்.

9. எட்டிக்கோட்டை. தேகத்தின் உணர்ச்சிக்கும் அசைவுக்கும் ஆதாரமானது. நரம்புகளுக்கு உற்சாகம் செய்யக்கூடிய மருந்து. 1/4 முதல் 1/2 களஞ்சி வரையில் கொடுக்கலாம்.

10. ஸ்பானியா எரிவண்டு. கொப்புள மருந்துகளில் கூட்டாகச் சேர்க்கப்பட்டது. ஒரு பங்கு எரிவண்டு பொடியும் 20 பங்கு பன்றி நெய்யும் சேர்த்து உபயோகித்தால் ரோமத்தை உண்டாக்க சிலாக்கியமானது.

11. ஓமவிதை. ஜீரணசக்தியை விருத்தி செய்யும். கழிச்சல், வயிற்றுவலி, அஜீரணம் முதலிய வியாதிகளுக்கு முக்கியமானது. $2\frac{1}{2}$ முதல் 5 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

12. சோம்புவிதை. வயிற்றில் உஷ்ணத்தை உண்டுபண்ணி எல்லா வியாதிகளையும் குறைக்கும் குணமுண்டு. $2\frac{1}{2}$ முதல் 5 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

13. கஞ்சா. இது அபினைப்போன்றது. சிரமத்தை நீக்கக்கூடியது. அதன் இலையை $1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

14. கடுகு. இதை அரைத்து சுடவைத்து வலியுள்ள இடங்களில் பத்துப்போட குணமாகும்.

15. கந்தகம். காய்ச்சல், வாதம் இவற்றிற்குக் கொடுக்க குணமாகும். தோலைப்பற்றிய வியாதிகளுக்கு உள்ளுக்கும் உபயோகப்படுத்துவதுடன் மேலேயும் பூச குணமாகும். 2½ முதல் 7½ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

16. அடுப்புக்கரி. இதைப் பொடி செய்து துர்வாசனையுள்ள இடத்தில் போட துர்வாசனையை மாற்றும். புண்களின் மேற்போட புண்கள் ஆறும். அஜீரணம், கழிச்சல், சீதபேதி இவற்றிற்கு 2½ முதல் 5 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

17. கற்பூரத் தைலம். உற்சாக மருந்து. பூச்சிகளைக் கொல்லும். குடல் கர்ப்பாசய முதலிய இடங்களில் அழற்சியுண்டானால் கடுகு பொடியை கொதிநீரில் குழப்பி அத்துடன் இத்தைலத்திலும் கொஞ்சம் சேர்த்து பத்துப்போட குணமாகும். ஆளிவிதை எண்ணெய் அல்லது சிற்றாமணக்கு எண்ணெயுடன் ¼ அல்லது ⅜ ஆழாக்கு கலந்து கொடுக்க குடல் கிருமிகளை நீக்கும்.

18. கற்பூரம் அல்லது சூடம். உற்சாகஞ் செய்யும் மருந்து. வயிற்று வலி, இழுப்பு, ஜலதோஷம், இருமல், கிருமிகள் இவற்றைப் போக்கும். புண்களிலுள்ள கிருமிகள் தேங்காய் எண்ணெயுடன் கலந்து புண்கள் மேல் போட்டால் கிருமிகளை அகற்றி புண்களை ஆற்றும் குணமுடையது.

19. கரியுப்பு. இரத்தத்தை சுத்தி செய்யக்கூடியது. மல மூத்திரங்களை சுபாவமான நிலைமையில்



இருக்கச்செய்யும். 1¼ முதல் 2½ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

20. காசுக்கட்டி. துவர் மருந்து. கழிச்சலுக்கு ⅝ முதல் 1⅞ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

21. காடிக்காரம்:—அதி சிலாக்கியமான கார மருந்து. வெகுவில் குணமாகாத புண்கள், காயங்கள் இவைகளின் மேல் லேசாகத் தடவினால் சீக்கிரம் குணமடையும். சிறிய கழலைகளை இம் மருந்தினால் கரைத்து விடலாம். இம் மருந்தை நீல புட்டியில் வைத்து காரம் வெளிப்படாமல் மூடிவைக்கவேண்டும். இல்லாவிட்டால் காரம் போய்விடும்.

22. கார்பாலிக் ஆசிட். கார மருந்து. துவர் மருந்தாகவும், வெட்டை, அடைப்பான், வயிற்றுப் பொருமல் இவற்றிற்கு உள்ளுக்குக் கொடுக்க உபயோகமாகும். குளம்பழுகல், குளம்புச் சிலந்தி, புண், காயம் இவைகளுக்கும், தோலைப்பற்றிய வியாதிகளுக்கும், எண்ணெயுடன் கலந்து மேலுக்கு உபயோகிக்க குணமாகும். 1 டிராம் அல்லது 2 டிராம் வரையிலும் கொடுக்கலாம்.

23. ரசபஸ்பம். தேகக்கருவிகளை நிதானமாகச் செய்யக்கூடியது. களைப்பை நிதானமடையும்படி படிப்படியாய் மாற்றக்கூடியது. ஈரலைப்பற்றிய வியாதிகளை குணப்படுத்தும். சீதபேதியில் உபயோகிக்கலாம். மற்ற மருந்துகளுடன் கலந்தும் கொடுக்கலாம்.

24. கிராம்பு. உற்சாக மருந்தாகவும், வாயு பரிகரிக்கக்கூடியது. வயிற்று வலி முதலிய வியாதிகளுக்கும், மெலிவு, களைப்பு முதலியவற்றிற்கும் நிலவேம்புடன் கலந்து கொடுக்கலாம். மூத்திர ரோகங்களுக்குக் கொடுக்

கக்கூடாது. $1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

25. கோத்தமல்லி விரை. ஜீரணசக்தி மருந்து. $2\frac{1}{2}$ முதல் 5 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

26. கொழுப்பு அல்லது பன்றி நெய். கொப்பளிக்கப்பட்ட பாகத்தில் தடவ, குணத்தைக் கொடுக்கும். களிம்பு கூட்டுவதில் முக்கியமானது.

27. சதகுப்பை. விரையும் இலையும் ஜீரண சக்தியை உண்டாக்கும். பொருத்துகளில் உண்டாகக்கூடிய வாதம் வீக்கங்களின்மேற் பிரயோகிக்க குணமாகும். விதையை $2\frac{1}{2}$ முதல் 5 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

28. சவுக்காரம். (கட்டி சவுக்காரம்) வயிற்றுப் புளிப்பு முதலியவற்றைக் குறைக்கும். மூத்திரத்தை அதிகப்படுத்தும். தண்ணீருடன் கலந்து அழுக்கை நீக்குவதற்கும் உபயோகப்படும். நஞ்சிட்டுக்கு வெந்நீருடன் கலந்து அனுபானப் பிரயோகமாகவும் உபயோகிக்கலாம். $2\frac{1}{2}$ முதல் 5 ரூபாய் எடை வரையில் உபயோகப்படுத்தலாம்.

29. சாராயம். (பட்டைச் சாராயம்) உற்சாக மருந்து. வியாதிகள் கண்டவுடன் கொடுத்தால் கட்டாயம் குணத்தை உண்டாக்கும். $1\frac{1}{4}$ ஆழாக்கு கொடுக்கலாம்.

30. சிங்கோனப்பட்டை. பலவிருத்தி மருந்து. காய்ச்சலை கட்டாயம் குணப்படுத்தும். எப்படிப்பட்ட மெலிவிலும் கொடுக்கலாம். $\frac{5}{8}$ முதல் $1\frac{1}{4}$ ரூபாய் எடை வரையிலும் கொடுக்கலாம்.

31. சிற்றாமணக்கு எண்ணெய். மலத்தை இளகச் செய்யும். நஞ்சிடு, அஜீரணம், வயிற்றுப் பொருமல் இவை



களிலும் மலத்தைக் கட்டுகிற மற்றும் அநேக வியாதிகளிலும் உபயோகமானது. $2\frac{1}{2}$ முதல் $7\frac{1}{2}$ ஆழாக்கு வரையில் கொடுக்கலாம்.

32. சீமைக்காடி. சுளுக்கு முதலியவற்றுக்கு துணியில் நனைத்து மேலுக்குப் போடலாம். வலியை நிறுத்தும் குணமுள்ளது. நஞ்சிடு உண்டானபோது நாட்டுச் சுண்ணாம்பு, சீமைச்சுண்ணாம்பு, அக்கிரான உப்பு இவற்றுடன் கலந்து கொடுத்தால் குணமுண்டாகும்.

33. சீமைச்சுண்ணாம்பு. துவர் மருந்து. தேகத்தில் பிரயோகிக்கப்பட்ட பாகத்தை இறுகச் செய்யும். புண்களை உலரச்செய்யும். குடலிலிருந்து உண்டாகும் கழிவை நிறுத்தும். $2\frac{1}{2}$ முதல் 5 ரூபாய் எடை வரை கொடுக்கலாம்.

34. சீனக்காரம் அல்லது படிக்காரம். துவர் மருந்து. தேகத்தின் உள் பாகங்களில் ரத்த வடிவு உண்டானால் அதன் வடிவிற்கும், கழிச்சலுக்கும் உபயோகப்படுத்தலாம். $\frac{5}{8}$ முதல் $1\frac{1}{4}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

35. சுண்ணாம்பு நீர். கார மருந்து. புண்ணிலிருந்து உண்டாகும் நீரை உலரச் செய்யும். தொற்று வியாதி உண்டான காலத்தில் நீற்றாத சுண்ணாம்பை ஜலத்தில் கரைத்து கொட்டிலில் வெள்ளையடித்தால் வியாதிகளை வரவொட்டாமல் தடுக்கும். உள்ளுக்கு கொடுக்கக் கூடாது. புதிதாக நீற்றிய சுண்ணாம்பு 5 ரூபாய் எடை, சுத்த ஜலம் $3\frac{1}{4}$ ஆழாக்கு இவைகளை ஒரு பாத்திரத்திற் கலந்து இரண்டு மூன்று நிமிஷம் நன்றாகக் குலுக்கி மூடி வைத்து 12 மணி நேரம் கழித்து நீரைத் தெளிவாக இறுத்து காற்றுப் புகாதபடி பச்சை நிறமுள்ள சீசாவில் மூடிவைத்துக்கொண்டால் வேண்டியபோது உபயோ

கிக்கலாம். அஜீரணத்துக்கும் வயிற்றுவலிக்கும் கொடுக்கலாம். வயிற்றிலுள்ள புளிப்பை மாற்றும். $\frac{1}{16}$ முதல் $1\frac{1}{4}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

36. தார் எண்ணெய். இரண்டு வகை. (1) மரக்கட்டைதார். (2) நிலக்கரி தார். மரத்தார் சிலாக்கியம். கொம்பு, தோல் இவைகளின் வியாதிகளிலும், புண்களின் பேரிலும் பூசினால் குணப்படுவதல்லாமல், ஈ முதலிய ஜந்துக்கள் அணுகாமல் தடுக்கும். தொற்று வியாதிகள் அல்லது இன்னும் பல வியாதிகள் பரவும்போது மாட்டுத் தொழுவங்களில் தார் புகையை உபயோகிப்பது நல்லது.

37. துத்தம். மயில்துத்தம் அல்லது துரிசு. மலவிருத்தி மருந்து. துவர் மருந்தாகவும், கார மருந்தாகவும் இருக்கிறது. கழிச்சலிலும், சீதபேதியிலும் உபயோகிக்கலாம். அன்னபேதிக்கு சமமானது. $\frac{1}{16}$ முதல் $\frac{3}{16}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

38. நல்லெண்ணெய். கொழுப்படையச்செய்யும். காயங்களுக்கும், தீயினால் சுட்ட புண், வெடிப் புண், வெந்நீரில் சுட்ட புண் இவைகளுக்கு உபயோகிக்கலாம். $2\frac{1}{2}$ முதல் 5 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம். விரளி மஞ்சளை அரைத்து நல்ல எண்ணெயுடன் கலந்து கொடுத்தால் உள் அழலை மாற்றும்.

39. நவசாரம். ஈரலைச்சேர்ந்த வியாதிகளுக்கு மிக சிலாக்கியமானது. நிலவேம்புடனும், வெடியுப்புடனும் சேர்த்துக் கொடுக்கலாம். $2\frac{1}{2}$ முதல் 5 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.



40. நிலவேம்பு. அன்னபேதியைப்போல பிரயோஜனமுள்ளது. காய்ச்சல், மெலிவு, அதைப்பு இவைகளில் கொடுப்பது விசேஷமானது. $1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

41. நெய். மேற் பிரயோகமாக உபயோகப்படுத்தப்பட்டபோது தைலம்போல புண்களை போக்கும். இது லேசாக ஜீர்ணித்து நன்றாக வளர்க்கும். காய்ச்சலடிக்கும்போது கொடுக்கக்கூடாது. $1\frac{1}{4}$ ஆழாக்குக் கொடுக்கலாம்.

42. நேர்வாளக்கொட்டை. பேதி மருந்து. கடினமான மலத்திக்கலுக்கு மட்டிலும் கொடுக்கலாம். $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ களஞ்சி வரையில் கொடுக்கலாம்.

43. பர்கண்டிப்பிச்சு. சுளுக்கு, எலும்பு முறிவு முதலியவைகளுக்கு பற்றுகளில் சொல்லி இருக்கிற பிரகாரம் போட குணமாகும்.

44. பாக்கு. துவர் மருந்து. இதை கன்றுகளின் கழிச்சலுக்கு உபயோகிக்கலாம். $1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

45. பாஷாணம். பிராணாபாயமான மருந்து. தக்க ஜாக்கிரதையுடன் உபயோகிக்கவேண்டும்.

46. பிசின். விளாம் பிசின். அளவுக்கு மிஞ்சிய பேதி மருந்துகளாலாவது, நஞ்சுகளாலாவது, மற்ற அழற்சிகளினாலாவது உண்டாகும் கழிச்சலில் இந்தப் பிசினை தண்ணீரில் கரைத்துக்கொடுத்தால் குணமாகும். 5 முதல் 15 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

47. புளி. இளம் பிராணிகளுக்கும், பலஹீனமான பிராணிகளுக்கும் சாந்தமான பேதியாகக் கொடுப்பதற்கு உபயோகமானது. காய்ச்சலில் வெப்பங்குறையும்படி

கொடுக்கலாம். 5 முதல் 10 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

48. பூவந்திக்கொட்டை. இதற்கு தண்ணீரை சுத்தப்படுத்தும் குணம் உண்டு. வஸ்த்ரங்களினாலாவது, வேறு வகைகளினாலாவது தோல் வியாதி பட்டிருக்கும்போது அதைக் கழுவுவதற்கு உபயோகமாகும்.

49. பெருங்காயம். அபாயமில்லாத உற்சாக மருந்து. வயிற்று வலி, வயிற்றுப்பொருமலுக்கு மிக்க உபயோகமானது. வாயுவை நீக்கும் குணமுண்டு. $\frac{1}{16}$ முதல் $\frac{15}{16}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

50. பேதி உப்பு. மாடுகளுக்கு அதி சிலாக்கியமுள்ள பேதி மருந்து. 40 முதல் 80 ரூபாய் எடைவரையில் கொடுக்கலாம். இத்துடன் $1\frac{1}{4}$ முதல் $2\frac{1}{2}$ ரூபாய் எடை வரையில் சுக்குப்பொடியும் கலந்து கொடுக்கலாம்.

51. மஞ்சள். உற்சாக மருந்தாகவும் பலவிருத்தி மருந்தாகவுமிருக்கிறது. $\frac{5}{8}$ முதல் $1\frac{1}{4}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம். நல்ல எண்ணெய்யுடன் கொடுப்பது மிக்க சிலாக்கியம்.

52. மாசிக்காய். இது ஒரு துவர்ப்பு மருந்து. கழிச்சலிலும், சீதபேதியிலும் உபயோகிக்கலாம். $\frac{5}{8}$ முதல் $1\frac{1}{4}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

53. மிளகாய். இரைப்பையை உச்சாகப்படுத்தி ஜீரணசக்தியை அதிகரிக்கச்செய்யும். $\frac{1}{16}$ முதல் $\frac{5}{8}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

54. மிளகு. சுக்கைப்போல ஜீரணசக்தி மருந்தாக உபயோகப்படுகிறது. வயிற்றுவலி, அஜீரணம், வயிற்றுப் பொருமல் இவ்வியாதிகளைப் போக்கும். இது மிளகாயைப்



பார்க்கிலும் சாந்தமானது. $1\frac{1}{4}$ ரூபாய் எடை கொடுக்கலாம். எந்த வியாதிகண்டதாகத் தெரிந்தாலும் மேற்படி மிளகுடன் வெற்றிலையும் கூட்டிக்கொடுக்க குணமாகும்.

55. மெழுகு. தேன் கூட்டிலிருந்து எடுக்கப்படுகிறது. பிளாஸ்திரிகள் செய்வதற்கு உபயோகமானது.

56. ரஸம். வீக்கங்களையும் ஸய்கிதமான புடைப்புக்களையும் நீக்கும் சக்தியுள்ளது.

57. ரோசனம். மூத்திரத்தை அதிகப்படுத்தும். புண்கள் காயங்களில் உபயோகிக்கலாம். பற்றுகளிலும், களிப்புகளிலும் உபயோகிக்கலாம். $1\frac{1}{4}$ முதல் $1\frac{7}{8}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

58. வெடியுப்பு அல்லது பொட்டிலுப்பு. காய்ச்சலுள்ள பிராணிகளுக்கு பயமில்லாமல் கொடுக்கலாம். சிறுநீரை வெளிப்படுத்தும் குணமுள்ளது. $1\frac{1}{4}$ முதல் $1\frac{1}{2}$ ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

59. வெள்ளைத்துத்தம். தண்ணீருடன் கலந்து கழுவும் நீர், தேகத்தின் எந்தப்பாகத்திலும் உள்ள புண்களின் பேரிலும், காயங்களின் பேரிலும் பிரயோகிக்கலாம். கண்ணைக்கழுவவும் பிரயோஜனமானது.

60. வேம்பு. இலை, பட்டை, இவைகளை கஷாயமாய் செய்து உபயோகித்தால் வருத்தத்தை நீக்கி சுகமுண்டாக்கும். எண்ணெய் புண்களுக்கு பட்டையை பலப்படுத்தும் மருந்து. பலஹீனமான பிராணிகளுக்குக் கொடுக்கலாம்.

61. சர்க்கரை. மருந்துகளுடன் கலந்து கொடுக்க சாப்பிடும். 10 முதல் 20 ரூபாய் எடை வரையில் கொடுக்கலாம்.

62. (1) சகல வியாதிகளுக்கும் குழம்பு. இஞ்சி 2 சேர், சாத்தார் மிளகாய் கால் சேர், பெருங்காயம் கால் சேர் இவற்றை 25 எலுமிச்சம்பழ சாற்றினால் அரைத்து, 2 சேர் நல்லெண்ணெயில் குழப்பி அடுப்பில்வைத்து காய்ச்சி மெழுகு பதமாக வரும்போது ஒரு சீசாவில் எடுத்துவைத்துக்கொண்டு சீக்கு கண்ட மாடுகளுக்கு கண்களில் இரண்டு சொட்டுவிட சகல வியாதியும் சௌக்கியமாகும்.

(2) கால் சேர் பூண்டை கால் சேர் வேப்பெண்ணெயை விட்டு வதக்கி, எந்த சீக்காக இருந்தாலும் உள்ளுக்குக் கொடுக்கவும். அடைப்பானுக்கு உள்ளுக்குக் கொடுப்பதுடன் மேலேயும் தவளையாகப் போடவும்.

63. (1) மாடுகளுக்கு கண்ணில் பூவிழுந்தால். புளி இலைச்சார் வீசம் சேர், வெங்காயச்சார் வீசம் சேர், மேலே சொன்ன குழம்பில் அரைவீசம் சேர் ஒரு சீசாவில் விட்டு குலுக்கி பூ விழுந்த கண்ணில் தினம் 2 சொட்டு வீதம் விட்டுவர 5, 6, பொழுதில் சவுக்கியமாகும்.

(2) வலது கண்ணில் பூவிழுந்தால் இடது பொட்டிலும், இடது கண்ணில் பூ விழுந்தால் வலது பொட்டிலும் சதுரக்கள்ளிப் பாலையாவது, எருக்கம் பாலையாவது அரையணா இடம் தடவி வைத்தால் கண்ணில் உள்ள பூ விலகிவிடும்.

64. சகல வியாதிக்கும் லிங்க மெழுகு. ஒரு பலம் லிங்கத்தை அடுப்பில் ஒரு புது சட்டியில்போட்டு பெரியமருள் பட்டைச்சார் கால்படி விட்டு சுருக்குக் கொடுத்து எடுத்து அரைத்து சிறுகண்டக்காய் பிரமாணம் உருண்டைசெய்து வைத்துக்கொள்ளவும். சுக்கு, சித்தரத்தை, கண்டந்திப்



பிலி, ஓமம், பெருமருந்து வேர் வகைக்கு காலரை [illegible] வைத்து அரைத்து மேற்கண்ட மெழுகில் ஒரு உருண்டை கலந்து வியாதி கண்ட மாடுகளுக்குக் கொடுக்க எந்த வியாதியும் குணமாகிவிடும். ஆகாரம் பழைய வைக்கோல், கொய் சஞ்சிவைத்து மறுநாள் காட்டவும்.

---

## தமிழ் மருந்துகளின் பெயருக்குச் சரியான இங்கிலீஷ் எதிர்ப்பதம்.

அபின்-Opium
அன்னபேதி-Sulphate of Iron
ஆக்ராணை உப்பு-Ammoniz Carbonas
ஆளிவிதை-Linseed
ஆளிவிதை எண்ணெய்-Linseed oil
இபிகாக்கு-Ipecacuanha
ஈயக்காடி உப்பு-Sugar of lead
ஊமத்தை-Thorn apple
எட்டிக்கொட்டை-Nuxvomica
எரிவண்டு-Spanish Fly
ஓமவிதை-Omum seeds
கஞ்சா-Indian Hemp
கடுகு-Mustard
கந்தகம்-Sulphur
கரி (அடுப்புக்கரி)-Charcoal
கரிய போளம்-Aloes
கற்பூரத்தயிலம்-Turpentine
கற்பூரம்-Camphor
கறியுப்பு-Common salt
காசுக்கட்டி-Catechu
காடிக்காரம்-Nitrate of Silver
கார்பாலிக்தயிலம்-Carbolic acid
ரஸபஸ்மம்-Calomel
கிராம்பு-Cloves
கொத்தமல்லி-Coriander
கொழுப்பு அல்லது பன்றி நெய் } Fat or Lard
சதகுப்பை-Dill
சர்க்கரை-Jaggery
சவுக்காரம்-Hard soap

சாராயம்-Arrack
சிங்கோனாப்பட்டை-Cinchona Bark
ஆமணக்கெண்ணெய் Castor oil
சீமைக்காடி-Vinegar
சீமைச்சுண்ணாம்பு-Chalk
சீன எரிவண்டு-Chinese fly
சீனக்காரம் or படிக்காரம்-Alum
சுக்கு-Dried Ginger
சுண்ணாம்பு நீறாதது } Quick lime or Unslaked lime
சுண்ணாம்பு நீற்றியது } Slacked lime
சோம்பு விதை-Ani seed
தார் எண்ணெய்-Tar
துத்தம், துரிசு-Copper Sulphate
நல்லெண்ணெய்-Gingelly oil
நவச்சார நீர்-Liquor Ammonia Fortior
நவச்சாரம்-Sal Ammonia
நிலவேம்பு-Chiretta
நேர்வாளக்கொட்டைகள்-Croton seeds
பர்கண்டி பிச்சு-Burgandypitch
பாக்கு-Areca nut or Betelnut
பாஷாணம்-Arsenic
பிசின்-Wood apple gum
புளி-Tamarind
பூவந்திக்கொட்டை-Soap nut
பெருங்காயம்-Asafoetida
பேதியுப்பு-Epsom salt

மஞ்சள்-Turmeric
மாசக்காய்-Gall nut
மிளகாய்-Chilly
மிளகு-Pepper
மெழுகு-Wax
ரோசனம்-Resin
வெடியுப்பு-Nitre
வெள்ளைத்துத்தம்-Zinc Sulphate
வேம்பின் இலையும் பட்டையும் } Neem or Margosa
இளக்கஷாயங்கள்-Infusions
ஆளிவிதை தேநீர்-Infusion of Linseed
காசுக்கட்டித் தேநீர்-Infusion of Catechu
சிங்கோனாத் தேநீர்-Infusion of Cinchona
படிகாரநீர்-Alum Solution
சுண்ணாம்புநீர்-Lime water
கண்கழுவுநீர்-Eye washes
காயங்கழுவுநீர்-Wounds lotion
குளிரச்செய்யும்நீர்-Cooling lotion
துவர் நீர்-Astringent lotion
புண்ணாற்றும் நீர்-Healing lotion
வாய் நோய் கால் நோய் புண்களுக்கு கழுவும் நீர்-Lotion for sores on feet in foot disease
நெய்-Ghee
ஆளிவிதைகளி-Linseed poultice
கடுகு பத்து-Mustard poultice
கடுகுப்பற்று நவச்சாரம் சேர்த்தது-Ammoniated Mustard poultice

கரிக்களி-Charcoal Poultice
தவிட்டுக்களி-Bran poultice
குளம்புகளிம்பு-Hoff ointment
சொறிசிரங்குக்களிம்பு-Ointment for Range
கொப்புளக் களிம்பு-Blistering ointment
படர்தாமரைக் களிம்பு-Ointment for Ringworm
புண்களுக்கு களிம்பு-Ointment for ulcer
புண்களுக்குத் தயிலம் அல்லது கார்பாலிக்கெண்ணெய்-Oil for wounds or Carbolic oil
கொப்புளத் தயிலம்-Blistering oil
சுளுக்கு முதலானதுகளுக்கு பற்று-Plaster for sprains
அடைப்பானைகள்-Drinks for Anthrax
அதைப்புக்கு பானம்-Dropsy
இருமலுக்குப் பானம்-Couhg Drink
ஜீரணசக்திப் பானம்-Drink for derangement of stomach
ஈரல் வியாதிக்குப் பானம்-Drink for liver disease
சாம்புதல் நோய்க்குப் பானம்-Drink for Rot
கழிச்சலுக்குப் பானம்-Drink for diarrhoea
காய்ச்சலுக்குப் பானம்-Drinks for fever

85495

ஸ்ரீ திருநாகை வல்லி அம்பாள் துணை. சுபமஸ்து.

94

I have gone through Manayadi Sastram, Jalasaya Nirmana Sastram, Vrikshadhi Samrakshana Sastram and I find them very interesting the first book deals with constitutions of houses the 2nd about digging of wells, the 3rd about horticulture. They are all based upon our ancient sastras. The books are written in easy style. The books are recommended for use in school libraries in Secondary as well as Elementary schools.

(Signed) V. M. SOUNDRARAJA AIYAR,
Seniour Deputy Inspector of Schools,
*Negapatam Range.*

17—8—26

---

I have read with great interest the publications in Tamil on house constructions, well-sinking, horticulture etc. by Brahmasri Pulivalam R. Gopala Iyer Avergal and I dare say the works deserve to be popular and widely patronized. They are on approved shastric lines and a wider spread of their contents is certainly desirable in the interest of our social well being.

The author is to bring out another equally interesting and useful book on Cattle Breeding with plenty of references from the ancient classic literature and I am sure it will be welcomed by all. I am taking copies of his publications to my office library and wish his modest, but very useful and painstaking enterprise great success.

(Signed) V. MUTHUSWAMI AIYAR,
Deputy Inspector of Schools,
*Negapatam Range.*

4—10—25

---

1. ஜலாசய நிர்மாண சாஸ்திரம், 3. கல்விய லக்ஷணம்,
2. விருக்ஷ ஸம்ரக்ஷண சாஸ்திரம், 4. ஸுகாதார தீபிகை,
5. ஆடு பரிபாலனம். என்னும் புஸ்தகங்கள்
கூடிய சீக்கிரத்தில் வெளியிடப்படும்.

Pudukkottai
28—6—26.

I can very well understand and appreciate the amount of labour and thought bestowed upon the preparation and publication of Manayadi Shastrum, Vrikshadhi Samrakshanam and Jalasayam by Brahmasri R. Gopala Aiyar. He has in his hand in manuscript a treatise on Gosamrakshanam which is in fact an elaborate veterinary science containing, as it does, much more than what is generally found in our modern veterinary science. He has to get it printed and published for which he requires pecuniary help from the public which, I hope, will be prompt and encouraging.

(Signed) S. NARAYANASWAMI,
Retired Director of Education,
Deputy President,
*Pudukkottai State.*

---

Brahmasri R. Gopala Ayyar has published several useful works relating to Indian life in villages where the Indians are mostly engaged in Agriculture. That the works have been written in Tamil is itself a proof that they are intended for the service of the public who are under a great obligation to the author. It would not be an exaggeration to state the author's altruism will surely create altruism in the readers of his works besides promoting the egoistic welfare of the masses. The 'Cow Protection' is the latest of his publications and is the crest jewel of his works—in that the cow is the Kama-dhenu—the giver of all in the Hindu Sastra. Every Indian should take it into his heart to encourage the author in every way and serve himself, his fellow men and God by doing so.

P. S. SUNDARAM IYER B.A., L.T.,
18—11—27
*Headmaster Govt. Trg. School,*
*Trichinopoly.*